www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே 03–09,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 255

## பொறியாக மாறும் போர்முனை





## அமெரிக்காவின் இரகசியம்

## தப்பு தவறவிட்ட ஜீன்ஸ்

## கண் அழகு



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## பொல்லைக் கொடுத்து....

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

கொழும்புக் கெடுபிடிகள்
தொடர்பான
பாராளுமன்ற விவாதம்
ஆட்சியாளர்கள் தங்களை
நியாயப்படுத்த வழங்கப்பட்ட
சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது!

கொழும்புக் கைதுகளுக்கு
நீதியமைச்சர் கூறிய
விளக்கங்களும், விபரிப்புக்களும்,
நிலாவைப் பிடித்துத் தருவதாகக்கூறி
குழந்தைகளுக்கு சோறூட்டுவது,
போன்றே இருந்தது!

எந்தக் குறுக்கீடும்
செய்யத் துணியாமல்;
வாயைப் பிளந்தபடி
நீதியமைச்சரின் நிலாக் கதையைக்
கேட்டுக் கொண்டிருந்த
தமிழ் பா.உக்களை
எப்படிப் பாராட்டுவது?!

விவாதம் கோரிய
கூட்டணி விற்பந்நர்கள்
'அரசியல் ஞானிகள்'கூட
அமைச்சரின்
நிலாக் கதையைக் கேட்டபடி
தங்கள் ஆசனங்களில்
அமர்ந்திருந்ததுதான்
கண்கொள்ளாக் காட்சி!

விசேட அடையாள அட்டைகள்
வழங்கப்படப் போகிறதாம்!
கம்பியூட்டர் மயப்படுத்தல்
செய்யப்பட உள்ளதாம்!
கண்காணிப்புக் குழுக்கள்
அமைத்தால் நன்றாம்!

இதெல்லாம் அமைச்சர்
பகன்ற கருத்துக்கள்!

ஏதோ அடையாளம் தெரியாமல்
நடைபெற்ற கைதுகள் போன்றும்.
எந்த ஆவணமும் இல்லாமல்
இருந்ததுதான் தமிழர்கள்
வகைதொகையின்றி கைதாகக்
காரணம் போன்றும்
நியாயப்படுத்தல் நடந்துள்ளது!

விசேஷட அடையாள
அட்டையும் ஒன்றுதான்;
இன்றுள்ள பொலிஸ் பதிவுத்
துண்டும் ஒன்றுதான்!

பொலிஸ் பதிவுத் துண்டு
உட்பட
தங்களை நிரபராதிகள்
என்று நிரூபிக்கக்கூடிய
போதிய ஆவணங்கள்
வைத்திருந்தவர்களும்
கைதான கொடுமைதான்
கொழும்பில் நிகழ்ந்தது!

நாடறிந்த கோயில்
குருக்கள்கூட
கைதானது ஒன்றுபோதும்
உதாரணம் கூற!

தமிழர்கள் என்ற
ஒரே காரணத்தினாலேயே
கைதுகள் நடந்தன!
இனரீதியான அவமானம்
நிகழ்ந்தது!

சோதனையின்போது
தம்முன்பாக காண்பிக்கப்பட்ட
ஆவணங்கள் எதனையும்
படையினர் ஏறெடுத்தும்
பார்க்கவில்லையே:பின்னர் ஆவணங்கள்
இருந்து என்ன பயன்?

உடுத்த உடுப்போடு
கைது செய்வது,
ஆவணங்களை பார்க்கமறுப்பது,
உச்சி வெயிலில்
நிறுத்தி விசாரிப்பது,
உண்ணக்கூட அனுமதியாதது,
இவையெல்லாம்-
பாதுகாப்பு விழிப்புணர்ச்சியா?
தமிழர் என்பதால்
காண்பிக்கப்பட்ட வெறுப்புணர்ச்சியா?

நீதியமைச்சரின் உரையை
கூர்ந்து கவனித்தால்,
ஒரு உண்மை புலனாகிறது!

அத்துமீறல்களுக்கு
வருத்தம் தெரிவிப்பதைவிட,
அவற்றை நியாயப்படுத்துவதிலேயே
அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது!

பாராளுமன்ற விவாதம் மூலம்
எந்தப் பரிகாரமும் கிடையாது!
பாராளுமன்ற முழக்கங்களால்
எந்த விமோசனமும் கிடையாது!

ஆனால், பாராளுமன்ற விவாதம்
மூலமாக அரசை
அம்பலப்படுத்துவதாயின்
நீதியமைச்சரின்
நிலாக்கதையில் குறுக்கிட்டு
உண்மையை புட்டுப்புட்டு வைக்க
கூட்டணி முயன்றிருக்கலாம்!

ஆனால் முடியவில்லை;
ஏன்? ஏன்? ஏன்?

அரசையும் பகைக்காமல்,
தங்களை மக்களும்
எட்டி உதைக்காமல்
இருக்கக்கூடிய
அரசியல் ஏமாற்றுக்களிலேயே
தமிழ்க் கட்சிகள்
இன்று இறங்கியுள்ளன!
எனவே, உரிய தருணத்தில்
அரசை அம்பலப்படுத்தாமல்
வாயடைத்து, அமர்ந்து
அரசுக்கே வாய்ப்பு
வழங்கி வருகின்றன!

கொழும்பு கெடுபிடிகள்
பற்றிய விவாதம்,
கூட்டணி கொடுத்த
பொல்லை வாங்கி,
தமிழ் தரப்புக்கு
அரசு அடிக்கத்தான்
அமோகமாக உதவியிருக்கிறது!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்.
ஆசிரியர்

# ஆன்மீகம்



## இந்து தர்ம வழிபாடு

"ஆன்மீக வாழ்விற்கு இந்து தர்ம வழிபாடு அத்தியாவசியமானதொன்றாகும்!" என்று ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். அருளாலும், அனுபவத்தாலும் ஆன்றோர்கள் இந்து தர்ம வழிபாட்டின் உயர்ந்த நிலையைப் பற்றி நமக்குப் பல வழிகளிலும் எடுத்துச் சொல்லியுள்ளார்கள்.

பெறுவதற்கரிய மானிடப் பிறவியை நாம் பெற்றுள்ளது இந்து தர்ம வழிபாட்டிற்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்வதற்கே: அருட்பெருஞ் ஜோதியாகிய ஆண்டவனின் திருவருட் கமலங்களை அடைவதற்கு இந்து தர்ம வழிபாடு ஒன்றே அதியுகந்தது- உயர்ந்தது.

இந்து தர்ம வழிபாடு! அதுவே இறை வழிபாடு! அதுவே ஆன்ம வழிபாடு! அதுவே ஆன்மீக வழிபாடு! அந்த ஆன்மீக ஆராதனையால் ஆண்டவனின் பேரருளைப் பரிபூரணமாகப் பெறுகின்றோம். உலகில் சகல சௌபாக்கியங்களையும் நாம் அடைகின்றோம். இறைபக்தியுடன் வாழ்ந்தால் நமக்கு ஞானம் பிறக்கும். ஞானத்தில் பேரின்ப வீடு பெறலாம்.

அ. அரசரெத்தினம், சேனையூர்-06.

## 'இப்லீஸ்' என்பவன் யார்?

இவ்வுலகின் மனித சிருஷ்டி தோன்றுவதற்கு முன் 'ஜின்'களின் ஆதிக்கமே இப்பாரில் மேலோங்கி நின்றது.

ஜின் வர்க்கத்தினர் பாவங்கள் பல புரிந்து இம் மண்ணை மாசு படுத்தினர்.

இறைவன் இந்த ஜின் வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஒழித்ததோடு இவர்களில் பெரும்பாலானோரை மலக்குகளினால் கொல்ல வைத்தான்.

இவர்களில் எஞ்சி இருந்தோரில் ஒருவனே 'இப்லீஸ்'.

இவன் தான் புரிந்த தவறுகளை உணர்ந்து வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கோரி மலக்குகளிடம் சேர்ந்து கொண்டான்.

இதனால் இவன் இறைவனுக்கு ஸுஜூது செய்யுமாறு பணிக்கப்பட்டான்.

ஆனால் அக்கட்டளைக்கு அவன் அடிபணிய மறுத்ததினால் அல்லாஹ் அவனுக்கு 'இப்லீஸ்' என்று பெயர் கொடுத்தான்.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப் போட்டி இல.252

பரிசுக்குரிய கவிதை

### போராடு

போராடு போராடு
வண்டி நகரும்!
போராடா விட்டால்
எந்தத் தடைகள் விலகும்?
போராடும் மக்களுக்கே
வாழ்வு மலரும்!

ச. சுலோசனா- கொழும்பு-12.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### சுமை இது



இப்பூமி சுமக்கா
இணையில்லாப் பாரத்தை
நீர் சேர்ந்தா
அசைக்கின்றீர்-
அசையாது அது
எம்மரசின்
பொதிபோல....!

மு.ச. நிஸானா-இ.து.அ.ச., கொழும்பு.

### வன்னியில்...

குண்டுவந்து விழுமுன்
இப்பொருட்களை
கொண்டுபோக வேண்டும்.
அங்கே பிஞ்சுகள்
பட்டினி!

அ. குமணன்- பாண்டிருப்பு.

### மறுப்பு...?

இடம் பெயர்ந்து
தமிழர் படும்
துன்பங்களை
அறிந்து தான்
இடம் பெயர
மறுக்கின்றதோ?

யாழ். பாரதி.

## கவிதைப் போட்டி இல.255



(படப்பிடிப்பு:-கொட்டராமுல்லை ஃபாரூக்)

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 09.05.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.255, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### அரசியல்வாதிகள்

தமிழ்
அரசியல் வாதிகளுக்கு
அழைப்பு விட்டோம்!
அம்மையாருக்குத்தான்
'எடுத்துக் கூறுவோமாம்'!
அட பழக்க தோஷம்!

அ. ஃபாத்திமாபேகம்-ஏறாவூர்.

### பொதி நிலை!

ஆதரிக்கிறோம் ஆதரிக்கிறோம்
பொதிக்காக ஆதரிக்கிறோம்!
நகருதில்லை நகருதில்லை
முயன்றும் நகருதில்லை
தேர்தல் வரும் முன்னேயாம்
பொதிபற்றி பின்னேயாம்!

அ. யாழினி- மட்டக்களப்பு.

### பயம்!

சூட்டுக்கு பயந்து
காட்டுக்குள் ஓடுமுன்
மாட்டிய வண்டியை
வேட்டுக்கள் தீட்டுமுன்
மீட்டிடு சீக்கிரம்!!

எம். சண்முகராஜா- தலவாக்கலை.

### உதவி

நம் கையே
நமக்கு உதவி!
தமிழ்க் கட்சிகள்
நமக்கு கெடுதி!

ந. பார்த்திபன்- கண்டி.

### நம்பிக்கை

புதைத்தாலும்
அமிழ்ந்தாலும்
மீட்க முடியும்!
நம்பிக்கை கொள்
ஜெயிக்க முடியும்!

சி. மலர்விழி- நுவரெலியா.

### தடை

அரசுக்கு கைகொடுக்க
முன்னாள் போராளிகள்
போட்ட தடையோ?
மக்கள் சக்தி
வண்டியை நகர்த்தும்!
விடியல் திசையில்
வண்டி செல்லும்!

ச. முனைவர்- புத்தளம்.

### சில்லு

அன்று புதைந்தது
கண்ணனின்
தேர்ச்சில்லு;
இன்று புதைவது
எமது
வாழ்க்கைச்சில்லு!
காண்டியமாய் பாய்வது
ஷெல்லு!

மேகவாணி- வெள்ளவத்தை.

# வாசக(ர்)சாலை

## ஏமாற்று நாடகத்தை புகழலாமா?

அன்புள்ள முரசுக்கு, வணக்கம்!

பொதியும் புஸ்வானமாச்சுது. தமிழர்கள்மீது அம்மையார் காட்டிய பரிவும் பொய் என்று ஆச்சுது. பின்னர் ஏன் இப்போதும் தமிழ்க் கட்சிகள் காலடியில் புரளுகின்றன? எந்தவொரு தமிழ்க் கட்சியாவது 'இது நியாயமான ஆட்சி, தீர்வு தரும் ஆட்சி' என்று பகிரங்கமாக அறிவிக்கத் தயாரா? இந்த ஆட்சியைப்பற்றி நன்றாக அறிந்துகொண்டு, தங்கள் சொந்த நலன்களுக்காக வேறு வழியின்றி ஆதரிக்கின்றனர் என்பது தெளிவு. இதன்பின்னர் இக்கட்சிகளின் சில ஏமாற்று நாடகங்களை சில விமர்சகர்கள் புகழ்வதுதான் வேடிக்கையாக இருக்கிறது. 'முரசு' அத் தவறை செய்வது கிடையாது. இவர்களது ஏமாற்று நாடகங்களை புகழ்ந்தால், ஆஹா ஏமாற்றுக்கு காலம் உண்டு என்று மேலும் நம்பிக்கை கொண்டுவிடுவர்.

கு. கிருஷ்ணராஜ், வவுனியா.

## ஒரு பக்கச் சார்பு

அமெரிக்காவின் ஐ.நா.வுக்கான பிரதிநிதி அல்லது பிரகிருதியின் இலங்கை விஜயம் பற்றி 'முரசு' வெளியிட்ட தலைப்புச் செய்தி கச்சிதம். 'முரசு' செய்தி தந்து அம்பலப்படுத்தியது முன்னே, அந்த பிரகிருதியின் கருத்துக்கள் ஒருபக்கச் சார்பாக வந்தன பின்னே. முரசின் கணிப்புக்கள் தவறாது. தமிழ்க் கட்சிகள் சென்று கைகுலுக்கி மகிழ்ந்தனராமே. உதைக்க, உதைக்க முத்தமிடும் பொறுமைசாலிகளோ இவர்கள்(?!)

ச. சிவச்சந்திரன், திருகோணமலை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.

## பொய்ப் பிரசாரம்



யாழ் உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் முரசு வெளியிட்ட கருத்துக்களில் அப்போது எனக்குச் சில முரண்பாடுகள் இருந்தன. இப்போதுதான் உண்மை புரிகிறது. அபிவிருத்தி என்ற பெயரில் இறால் போட்டு சுறாப் பிடிப்பது ஒருபுறம் இருக்க, இராணுவ ஆட்சியை மக்கள் பிரதிநிதிகளது நிர்வாகம் என்றல்லவோ மாபெரும் பொய்ப் பிரசாரம் நடக்கிறது. முரசே! உன் கருத்தில் உள்ளார்ந்த நேர்மை இருக்கிறது. அதுதான் அவை பலிக்கின்றன.

கா. ராம்நாதன், சுவிற்ஸர்லாந்து.

## முன்னாள் போராளிகள்(?!)

முரசே! நான் ஒரு முன்னாள் போராளி என்று கூறுவதில் வெட்கப்படுகிறேன். இங்கும் குழுக் குழுவாய் பிரிந்தே நிற்கின்றன இயக்கங்கள். அங்கு அரச அடக்குமுறையால் தமிழ் மக்கள் படும் துன்பங்கள் பற்றி இங்குள்ள முன்னாள் போராளிகளுக்கு சிஞ்சிற்றும் அக்கறை கிடையாது. தங்கள் தங்கள் இயக்கங்கள் போலித் தேர்தல்களில் வென்றால் இங்கு கூத்தாட மட்டுமே இவர்கள் இலாய்க்கு. இன அழிப்பு பற்றியோ, அன்றாட அவலங்கள் பற்றியோ தகவல் அறியக்கூட இவர்கள் அக்கறைக் காட்டுவதில்லை. ஆனால் தாமும் இயக்கங்களில் இருந்ததாகக் கூறிக்கொண்டு திரிகிறார்கள். நானும் ஒரு முன்னாள் போராளி என்று கூறவே வெட்கமாக இருக்கிறது.

க. சூரியகுமாரன், ஜெர்மனி.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளும், வெளியே இருக்கும் தமிழ்க் கட்சிகளும் இணைந்து அவசரகால சட்டம் போன்ற இரும்புக் கரங்களை எதிர்த்து போராட்டம் நடத்தவேண்டும். சட்டங்கள் நீக்கப்பட்டு விடுமா? என்று கேட்கலாம். அப்படியானால் இக் கட்சிகள் கூறுகின்ற எதுதான் நடக்கிறது? பேசாமல் கட்சிகளை கலைத்துவிடலாமே?!

எம். அல்போன்சா, வவுனியா.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

## மிளகாய் அரைப்பு

இனிய முரசுக்கு;

இன்றைய காலகட்டத்தில் உனது பணி பாராட்டத்தக்கது. பாராளுமன்ற விவாதங்கள் என்பதும், அதற்கு அரசு அனுமதிப்பதும் மக்களின் கோபத்தை, வெறுப்பை வடிந்துபோகச் செய்யவே என்பதை 'சிந்தியா' தெளிவாகக் கூறியிருந்தார். முற்றிலும் உண்மை. அரசாங்கத்தையும், அதன் போலியான ஜனநாயகத்தையும் மக்கள் இனம் காணாமல் தடுப்பது ஒரு இலாபம்; தாங்கள் கையாலாகாதவர்கள் என்ற உண்மையை மூடிமறைக்க உதவுவதால் தமிழ்க் கட்சிகளுக்கு இலாபம். இரு தரப்பும் சேர்ந்து எங்கள் தலையில் மிளகாய் அரைக்கிறார்கள்.

கி. திலோத்தமன், மட்டக்களப்பு.

## கூட்டாகச் சேர்ந்து

பல பெயர்களில், பல தலைவர்கள் பல கொடிகள், பல தேர்தல் சின்னங்கள் ஏன்? சகல தமிழ்க் கட்சிகளும் ஒரே சாக்கடையில்தான் குளித்துக் கொள்கின்றன பின்னர் ஏன் தனி முத்திரைகள்? முன்னர் ஒருகாலத்தில் நாங்கள் சோசலிசவாதிகள், நாங்கள் செயல்வீரர்கள், நாங்கள் புரட்சிவாதிகள் என்றெல்லாம் தனித்தனியாக நின்றதற்கு காரணம் கூறினார்கள். இன்று அனைவருமே சமரசவாதிகள். மிதவாதிகள் தனித்தனியாக நின்று எங்களை விலை பேசாமல்,. கூட்டாகச் சேர்ந்து ஒரே விலைக்கு விற்கட்டும்.

ஏ.ஜோதி, கொழும்பு-06

## பாலுக்கும் காவல் பூனைக்கும்....

முரசே!

கொழும்பில் கெடுபிடிகள் தணிந்துவிட்டனவாம். தாங்கள்தான் காரணமாம்? யாரை ஏமாற்றுகிறார்கள்? தினம் தினம் நாம் கெடுபிடிகளுக்கு உள்ளாகியே வருகிறோம். பொலிஸ் நிலையங்கள் முன்பாக தவம் கிடக்கிறோம். சோதனை சாவடிகளில் துவைபடுகிறோம். குளு குளு அறைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு வெளியில் நடக்கும் அவலங்கள் தெரிய நியாயமில்லை. பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழனாக இருக்கும் இக் கட்சிகளிடம் சென்று முறையிடவும் நாம் தயாரில்லை.

க. பாலச்சந்திர சர்மா, கொழும்பு-10.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையின் ஆட்சேபம்! இந்திய இராஜதந்திரிகள் சந்தேகம்!

# இராணுவத் தீர்விலேயே இப்போது நாட்டம்!

(அலுவலக நிருபர்)

இலங்கை இனப்பிரச்சனைக்கு பேச்சு மூலம் தீர்வொன்றைக் காண இலங்கை அரசு தற்போதைக்கு முன்வரப்போவதில்லை என்று அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

வன்னியில் போர் நடவடிக்கையில் எப்படியாவது வெற்றி பெற்றுவிடுவதே தற்போதைக்கு இலங்கை அரசின் ஒரே இலக்காகும். இந்த இலக்கை எட்ட முடிந்தால் மாகாணசபை தேர்தல், பின்னர் பாராளுமன்ற தேர்தல் போன்றவற்றில் வெற்றி இலக்கை எட்டிவிடலாம் என்றே நம்பியுள்ளனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சமீபத்தில் கொழும்புக்கு வந்து சென்ற வெளியுலகப் பிரமுகர்களின் விஜயத்துடன் பேச்சுவார்த்தை பற்றிய ஊகங்களும் எழுந்தன. அவை எவ்வித அடிப்படையும் அற்றவையாகும்.

பிரிட்டன் அரசு இலங்கை விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யக்கூடும் என்றுகூட சமீபத்தில் ஒரு ஊகம் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன் சென்ற வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், புலிகளை தடை செய்யுமாறு கோரியிருந்தார்.

பிரிட்டன் மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசு விரும்பினால் அவ்வாறான ஒரு கோரிக்கையை அவர் விடுத்திருக்க மாட்டார் என்றும் அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரிட்டனையும் இலங்கை யுத்தத்தில் தமக்கு சார்பான ஒரு நாடாக மாற்றும் முயற்சியாகவே லக்ஷ்மன் கதிர்காமரின் கோரிக்கை அமைந்திருந்தது எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

**சந்தேகம்**

இதேவேளை இந்தியாவின் முன்னாள் தூதர் நாகேந்திரநாத் ஜாவின் கருத்துக்களுக்கு இலங்கை தெரிவித்த ஆட்சேபனை இந்திய வெளியுறவுத்துறையிடமும், அந்த நாட்டு இராஜதந்திரிகளிடமும் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

திரு.நாகேந்திரநாத் ஜா அப்படி ஒன்றும் வரம்பு மீறிப் பேசவில்லை. இலங்கை விவகாரத்தில் தனது விருப்பத்துக்கு ஏற்ப பிறநாடுகள் கருத்து வெளியிடுவதை மட்டும் இலங்கை அரசு அனுமதித்து வருகிறது. நடுநிலையாக கருத்துக் கூறினால் மட்டும் ஏன் கோபப்படுகிறது? என்று இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எனினும் ராஜதந்திரம் கருதியே இந்திய அரசு முரண்டு பிடிக்காமல் நடந்து கொண்டுள்ளது. இராஜதந்திரம் கருதி கூறப்படுவன எல்லாம் உண்மையான கூற்றுக்களாக அமைவதில்லை. தமிழ்ப் போராளிகளுக்கு பயிற்சி அளிக்கும்போதுகூட இலங்கையில் உள்நாட்டுப் போரில் நாம் சம்பந்தப்படவில்லை என்றே இந்தியா கூறவில்லையா? என்றும் பெயர் குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி கேள்வி எழுப்பினார்.

**தலையீடு**

விடுதலைப் புலிகளை அமெரிக்கா தடை செய்துள்ளது. ஏனைய நாடுகளை தடை செய்யுமாறு இலங்கை கோருகிறது. இதுகூட இலங்கைப் பிரச்சனையில் ஏனைய நாடுகளை தலையிடச் செய்வதுதானே.

ஒரு பக்கச் சார்பான தலையீடுகளையே இலங்கை விரும்புகிறது. அதனால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை திட்டவட்டமாக நிராகரித்து வருகிறது என்று அரசியல் அவதானிகளும் கூறியுள்ளனர்.

தமிழ்க் கட்சிகள் வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு இருக்கின்றன. ஆனால் வடக்கு-கிழக்கு பிரிப்பில் அரசு கொண்டுள்ள ஆர்வத்தையே திரு.நாகேந்திரநாத் ஜாவின் கருத்துக்களையிட்டு வெளியான அதன் சீற்றம் நன்கு புலப்படுத்துகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது. ■

# யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் விவகாரம்!

## "அரசை நம்பி ஏமாந்து போனோம்"

## யாழில் உறவினர்கள் அங்கலாய்ப்பு

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில் படையினரால் கைதாகி காணாமல் போனோரில் அறுநூறுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்திருந்தது.

"யாழ் குடாநாட்டில் கைதாகி காணாமல் போனோரில் முன்னூறுக்கு மேற்பட்டோர் பலியாகிவிட்டனர் என்று அமெரிக்க ராஜாங்க திணைக்களம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே யாழ்ப் பாணத்தில் காணாமல் போனோர் சங்கத்தி னர் கடந்த ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் ஜனாதிபதி சந்திரிக்காவை சந்தித்திருந்தனர்.

**விசாரணைக்குழு**

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பாக ஆராய 1996ல் ஜனாதிபதியால் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. படை அதிகாரிகளான பெரும்பான்மை இனத்தவர்களை மட்டுமே இக் குழு உள்ளடக்கி இருந்தது. ஒரு தமிழர்கூட இக் குழுவில் ஜனாதிபதியால் நியமிக்கப்படவில்லை.

இக் குழுவினர் தமது விசாரணையில் காணாமல் போனோரின் உறவினர்களிடம், "உங்கள் பிள்ளை புலிகளிடம் போய் இருப்பான்" என்று கூறியதாகவும், அதனால் இவர்களிடம் சாட்சியமளிக்க தயங்கி பலர் செல்லவில்லை என்றும் கூறப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம், காணாமல் போனோர் சங்கத்தினர் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியபோது மேற்குறிப்பிட்ட விசாரணைக் குழு உறுப்பினர்கள் சிலரும் சமூகமளித்திருந்தனர்.

தமது விசாரணைகள் பூர்த்தியானதாகவும், காணாமல் போனோர் என்று கூறப்படும் எவரும் பொலிஸ், மற்றும் படையினரின் பாதுகாப்பிலோ, முகாம்களிலோ இல்லை என்றும் காணாமல் போனோர் சங்கத்தினரிடம் அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், காணாமல் போனோர் சங்கத்தினரிடமும், ஈ.பி.டி.பி.யிடமும், "யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் கதி அறிய படையினர் சாராத ஆட்களைக் கொண்ட விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படும். மூன்று மாதங்களுக்குள் முடிவு காணப்படக் கூடியதாக இருக்கும்" என்றும் ஜனாதிபதி வாக்குறுதி வழங்கியதாகச் செய்திகள் வெளியாகின.

அந்த வாக்குறுதி கொடுத்தே மூன்று மாதங்கள் ஆன நிலையில் ஜனாதிபதியை கூட்டணியினர் சந்தித்தனர். காணாமல் போனோர் கதி அறிய விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியிருப்பதாக கூட்டணியினர் அறிவித்திருந்தனர்.

கூட்டணியினர் ஊடாக அச் செய்தி வெளியாகியும் ஒரு மாதமான நிலையில், திடீரென்று பத்திரிகை அலுவலகங்களுக்கு ஜனாதிபதி செயலகத்தில் இருந்து புகைப் படங்களும், அறிக்கை ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டன.

**16 பேர் மட்டும்**

1996ல் நியமிக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு முன்பே தமது விசாரணையை முடித்துக் கொண்ட விசாரணைக் குழுவின் அறிக்கையும், அதனை புன்னகையுடன் ஜனாதிபதி பெறுகின்ற படமுமே அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

கைதான பின்னர் 16 பேர் மட்டுமே பலியானதாக தனது அறிக்கையில் கூறியுள்ளது அந்த விசாரணைக்குழு. முன்னாள் படை அதிகாரிகளைக் கொண்ட அந்த விசாரணைக் குழு அறிக்கைக்கு திடீர் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அப்படியானால் காணாமல் போனோர் சங்கம், ஈ.பி.டி.பி., கூட்டணி ஆகியவற்றிடம் ஜனாதிபதி கூறிய விசாரணைக் கமிஷனின் கதி என்னாகியது? என்று தெரியவில்லை.

**ஏமாற்றம்**

இனிமேல் விசாரணைக் கமிஷன் அமைத்தால்கூட ஆறின கஞ்சி பழம் கஞ்சி என்ற நிலைதான் ஏற்படும். கண்துடைப்பாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை "அறுநூறுக்கு மேற்பட்டோர் பலியாகிவிட்டனர் என்று கூறியதை நம்பாமல் ஜனாதிபதியிடம் நீதி கேட்கச் சென்றோம். இன்று ஏமாந்து நிற்கிறோம். 16 பேர் பலியானார்கள்" என்று ஒப்புக் கொண்டிருப்பதுகூட, நீதியான விசாரணை நடைபெற்றதாகக் காட்டுவதற்கான ஒப்புக் கொள்ளல்தான்" என்று கைதாகிப் பலியானோரின் உறவினர்கள் 'முரசு' நிருபரிடம் கண்ணீர் விட்டுக் கதறியபடி கூறினார்கள்.

காணாமல்போனோர் சங்கத்தினர் ஜனாதிபதியை சந்தித்த பின்னர் ஆரவாரமாக செய்திகள் வெளியாகின. அப்போதே 'முரசு' எச்சரிக்கை விடுத்திருந்தது. "நம்பி ஏமாந்து நஷ்டஈடும் இல்லாமல் நடுத்தெருவில் நிற்கப்போகிறார்கள்!" என்று 'முரசு' தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. ■

# "'ஜயசிக்குறுய்' வெற்றி பெறாது!"

## இந்திய முன்னாள் தளபதி தெரிவிப்பு

"சிறிலங்கா இராணுவம் தற்போது தொடங்கியிருக்கும் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கை எந்த வகையிலும் வெற்றியளிக்கப் போவதில்லை. இப்பொழுது கையாளப்படும் போர் உத்திகள் பிரபாகரனின் போர்த் தந்திரங்களுக்குச் சாதகமாகவே அமையும்."

இவ்வாறு, இலங்கையில் 1987ல் வந்திருந்த இந்திய அமைதிப்படைக்குத் தளபதியாக இருந்தவரான லெப்டினன்ட் ஜெனரல் ஏ.எஸ்.கல்கட் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்துக்கான விநியோகப் பாதையைத் திறப்பதற்காகவே இந்தப் போர் என்று கூறுகிறார்கள். இந்தப் பாதையைத் திறந்துவிட்டால் மட்டும் பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை.

இப்பாதையின் இரு மருங்கிலிருந்தும் புலிகளின் தாக்குதல் தொடர்ந்த வண்ணமிருக்கும். இப்பாதையைப் பாதுகாக்க பாதுகாப்பு அரண்களை அமைத்து காவல் காக்கலாம் என்று பலர் கருதலாம். இது பேர்லின் நகரில் அமைத்த சுவரைப் போலவே இருக்கும். எதிர்பார்த்த வெற்றி பெறுவது முடியாத காரியம்.

வடக்கே செல்லும் ரயில்வேப் பாதையையும் திறந்தால் பாதகமில்லை என்றும் கருதலாம். இதனால் இன்று இராணுவத்துக்கு அன்றாடம் ஏற்பட்டு வரும் சேதத்தைப் பார்க்கிலும் மிக மோசமான விளைவுகளே ஏற்படும், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாருடைய குண்டு?

களுத்துறை தொலைபேசி பரிவர்த்தனை நிலைய குண்டுவெடிப்பு தொடர்பான மர்மம் நீடிக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. ஆயினும் 50 இலட்சம் ரூபாய்களே நஷ்டம் ஏற்பட்டதாக முன்னர் வெளியான தகவலில் கூறப்பட்டது.

இக் குண்டுவெடிப்பு தொடர்பாக புலிகள் வன்னியில் கருத்து எதனையும் இதுவரை வெளியிடவில்லை. செய்தியாக மட்டுமே 'புலிகளின் குரல்' இதனை அறிவித்தது. குண்டு வெடிப்புக்கு யார் காரணம் என்ற ஊர்ஜிதமான தகவல்களை உடன் பெறமுடியவில்லை. ●

# தாய் ஒருவர் சுட்டுக் கொலை

## ஓடியதால் சுட்டனராம்

யாழ் குடாநாட்டில் சாவகச்சேரியில் 22.04.98 அன்று 44 வயதான தாய் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

தெய்வேந்திரன் சகுந்தலா என்னும் பெண்மணியே கொல்லப்பட்டவராவார். இவரது கணவர் ஏற்கனவே இறந்துவிட்டார். இவரை நம்பியே ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனர்.

தன் ஜீவனோபாயத்திற்காக தேநீர் கடை ஒன்றை இவர் நடத்தி வந்தார். கடையை மூடிவிட்டு வீடு திரும்பும்போது- இரவு 7.45 மணியளவில் இவர் சுடப்பட்டார்.

தாம் இவரை அழைத்ததாகவும், அவர் ஓடியதால் சுட்டதாக படையினர் கூறியுள்ளனர். அவரது தலையிலேயே சூடுபட்டுள்ளது. நிற்காமல் ஓடியிருந்தாலும் தலையில் ஏன் சுடவேண்டும். காலுக்குக் கீழே சுட்டிருக்கலாமே என்று கேட்கப்படுகிறது.

# வவுனியாவில் தேடுதல்

வவுனியாவில் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. படையினரும் திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

வவுனியாவில் விசேஷ அடையாள அட்டைகள் சகலருக்கும் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் சுற்றிவளைப்பின்போது விசேஷ அடையாள அட்டை உள்ளோரும் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

# திருமலையில் கைதான ஐந்து தமிழர்கள்

## உறவினர்களிடம் விபரம் தெரிவிக்க மறுப்பு

(சஞ்சீவன்)

திருமலை மாவட்டம் குச்சவெளியில் 12.04.98 அன்று புலிகளுக்கும், படையினருக்கும் இடையே மோதல் நடைபெற்றது.

அம் மோதலை அடுத்து குச்சவெளி வீரஞ்சோலை 02ம் வட்டாரம் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அப்போது அப்பகுதியைச் சேர்ந்த ஒன்பது தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நான்குபேர் மட்டுமே மறுதினம் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்படாத ஐந்துபேரின் குடும்பத்தினர் குச்சவெளி பொலிசாரிடம் தம் உறவினர்கள் எங்கே என்று கேட்டனர். 24.04.98 அன்று திருமலை நீதிமன்றத்தில் பிணையில் விடுவிக்கப்படுவர் என்று கூறப்பட்டதே தவிர, அவர்களைப் பார்வையிட அனுமதிக்கவில்லை.

24.04.98 அன்று நீதிமன்றம் முன்பாக குடும்பத்தினர் காத்துக்கிடந்தனர். கைதானவர்கள் கொண்டுவரப்படவில்லை.

கைதானவர்கள் கதி என்னவாகியதோ என்று பதறியடித்தபடி குடும்பத்தினர் மீண்டும் பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தனர்.

08.05.98 அன்று நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படுவர் என்று கூறப்பட்டது. இருவாரங்களாக இவ்வாறு அலைக்கழிக்கப்பட்ட உறவினர்கள் ஈ.பி.டி.பி. எம்.பி சந்திர குமாரிடம் முறையிட்டனர்.

அதனையடுத்து தீவிரமாக விசாரித்த போது கைதானவர்கள் ஐந்துபேரும் அனுராதபுரம் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் விபரம் தெரியவந்தது.

கைதானவர்கள் பற்றி அவர்களது குடும்பத்தினருக்கு உடனடியாக தெரிவிக்கப்படவேண்டும் என்று பொலிசாருக்கு பணித்துள்ளதாக அடிக்கடி அரசாங்கம் கூறிவருவது தெரிந்ததே.

இதற்கிடையே திருமலையில் கைதாவோரை பாதுகாப்பு காரணம் கூறி அநுராதபுரம் சிறைக்கு கொண்டு செல்ல ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கைதிகளை வெளிமாவட்ட சிறைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்று தமிழ்க் கட்சிகள் கோரியதாகவும், உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் நீதியமைச்சு அறிவித்தது. இப்போது திருமலையில் இருந்தும் தமிழ்க் கைதிகள் அனுராதபுரத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# "எங்கள் மண் அபகரிக்கப்படுகிறது"

## உப்பாறு மக்கள் கூறுகிறார்கள்

திருமலை மாவட்டத்தில் உப்பாறு பகுதியில் வாழ்ந்த சுமார் நூறு தமிழ் குடும்பங்கள் அங்கிருந்து படையினரின் உதவியுடன் வெளியேற்றப்பட்டமை தெரிந்ததே.

உப்பாற்றுக்கு அயல் கிராமமான இறால் குழியில் உள்ள சுமார் 200 தமிழ் குடும்பங்களும் வெளியேற்றப்படும் அபாயம் உருவாகியுள்ளது; அதற்கான அச்சுறுத்தல்கள் மறைமுகமாக விடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

உப்பாறு மக்களை வெளியேற்றும்போது "சம்பந்தனிடமும், ஈ.பி.டி.பி.யிடமும் போய் சொல்லுங்கள் யாரும் எங்களை ஒன்றும் பண்ண முடியாது!" என்று விரட்டப்பட்ட மக்களிடம் கூறப்பட்டதாம்.

உப்பாறு மக்கள் சமீபத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். அவர்களால் துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டது. அப்பிரசுரத்தை பார்த்ததும் "புலிகள்தான் பிரசுரம் அடித்து கொடுத்துள்ளனரா?" என்று படையினர் விசாரணை நடத்தியதாகத் தெரிகிறது.

உண்ணாவிரதத்தை புகைப்படம் எடுக்கச் சென்ற தமிழ்த் தினசரி ஒன்றின் நிருபரும் தடுக்கப்பட்டார். மக்களை வெளியேற்றிய செய்தியை வெளியே தெரியாமல் தடுப்பதில்தான் அங்குள்ள படையினர் அக்கறை காட்டுகின்றனர்.

"தென்னிலங்கை அரசாங்கங்களின் மாறாத கொள்கைகளில் ஒன்று தமிழ் பேசும் தாயகத்தை சூறையாடுவது. இன்று நம் கண் முன்பாக நமது நிலம், நமது பொருளாதார வளம், கல்விப் பலம் அனைத்தும் சிதைக்கப்படுகிறது.

எமது சொந்த மண்ணான உப்பாற்றை விட்டு, அனைத்தையும் இழந்து வந்து நிற்கிறோம்" என்று உப்பாறு மக்களால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# பணம் கொண்டு செல்லக் கட்டுப்பாடு

## படையினர் புதிய கட்டுப்பாடு

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வோர் கொண்டு செல்லக்கூடிய பணத் தொகையின் அளவு இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே வெளியிடங்களில் இருந்து மன்னாருக்கு அனுப்பப்படும் பணம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் இனிமேல் வங்கிகளின் மூலம் மட்டுமே மேற்கொள்ளமுடியும். தனியார் இந்நடவடிக்கையில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய நடைமுறை தற்போது அமுல் படுத்தப்படுவதாகத் தெரிகிறது. கடந்த 24.04.98 அன்று மன்னார் கச்சேரி திட்டமிடல் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மன்னார் நகர வர்த்தகர்களுக்கான மாதாந்தக் கூட்டத்தில் நகரக் கமாண்டர் லெப்டினன்ட் கேணல் வீரதுங்க மேற்படி விடயம் தொடர்பாக அறிவித்தார்.

தற்போது வெளியிடங்களில் இருந்து தினமும் இங்கு வரும் ஏராளமான பணம் விடுதலைப் புலிகளுக்கு இரகசியமான முறையில் அனுப்பப்படுவதாக பாதுகாப்புத் தரப்பினர் நம்புகின்றனர்.

வெளி நாடுகளில் இருந்தும் கொழும்பு போன்ற இடங்களில் இருந்தும் உறவினர்களால் உண்டியல் மூலம் அனுப்பப்படும் பெருமளவு பணம் தற்போது தனியார் தொலைத்தொடர்பு நிலையங்கள் மூலமும், வர்த்தக நிறுவனங்கள் மூலமும் உரியவர்களுக்குக் கிடைத்து வருகின்றது.

வெளிநாடுகளிலுள்ள தனியார் முகவர்களினூடாக பணத்தை அனுப்பும் உறவினர்களால் ஒரு சில மணி நேரத்திலேயே இங்குள்ளவர்கள் பணத்தைப் பெற்றுவிடுகின்றனர். தற்போதைய நடை முறையால் சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# போக்குவரத்திற்குத் தடை விதிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கில் படையினரின் வாகன தொடரணிகள் பயணம் செய்யும்போது தங்களது வாகனங்களைத்தவிர பொதுப் போக்குவரத்திற்குரிய வேறெந்த வாகனங்களையும் வீதிகளில் செல்லப் படையினர் அனுமதிப்பதில்லை. இப்புதிய நடைமுறை சமீப நாட்களாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

இராணுவ வாகனத் தொடரணிகள் செல்லும்போது வீதியில் வரும் பொதுப் போக்குவரத்து வாகனங்களைத் திடீரென ஆங்காங்கே படையினர் தடைப்படுத்தி விடுகின்றனர். படையினரின் வாகனத் தொடரணிகள் சென்று முடியும்வரை பொது மக்களின் வாகனங்கள் தெருவோரங்களிலும், காடுகளுக்குள்ளும் காத்துக்கிடக்க வேண்டும். இவ்விதம் அரை மணி நேரத்திற்கு மேலாகப் பொது மக்களின் வாகனங்கள் கொளுத்தும் வெய்யிலில் அசைவின்றித் தரித்து நிற்க வேண்டியுள்ளது.

படையினரின் வாகனத் தொடரணிகள் செல்லும் நாட்களில் பயணத்திற்காகப் புறப்பட்டு அலைக்கழிவதைவிட அந்நாட்களில் பயணம் செய்யாது விட்டுவிடுவது மேல் என்று போக்கு வரத்துத் தடையால் சலிப்படைந்த பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

# கூட்டுறவுச் சங்கங்களின் மோசடி அம்பலம்!

## அகதி மக்களிடம் கொள்ளை இலாபம்

(மட்டக்களப்பு நிருபர்)

யுத்தச் சூழ் நிலை காரணமாக அகதிகளான பெரும்பாலான மக்கள் தமது சுய தொழில்களை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டிருப்பதோடு நாளாந்த ஜீவனோபாயத்திற்கும் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள் என்பது தெரிந்ததே. இந்நிலையில் அதிகாரிகளின் பல இழுத்தடிப்புக்கு மத்தியில் இடைக்கிடையே வழங்கப்படும் நிவாரண உதவிகளை நம்பி வாழவேண்டியுள்ளது.

அகதி மக்களுக்கும் மற்றும் சுபீட்சத் (சமுர்த்தி) திட்ட உதவிபெறும் வறிய மக்களுக்காகவும் வழங்கப்படும் நிவாரண உணவுப் பொருட்கள் சகலதும் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாகவே வழங்கப்படுகின்றன. 'இலவசம் தானே எதனை எப்படிக் கொடுத்தாலும் பரவாயில்லை' என்ற தோரணையில் மிகத் தரம்குறைந்த அரிசியை ஒரு கிலோ 24/= வுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன. அதே வேளை மிகத் தரமான அரிசியை தனியார் கடைகளில் 1 கிலோ ரூபா 14/= இற்கு வாங்க முடிகிறது.

ஒரு கிலோ தரம் குறைந்த அரிசிக்கு பத்து ரூபாவை கொள்ளை இலாபம் அடித்து கூட்டுறவுச் சங்கங்கள் அகதிகளான வறிய மக்களைச் சுரண்டுகின்றன.

இதேவேளை அளவை நிறுவையிலும் கூட்டுறவுச் சங்கங்களில் பலமோசடிகள் இடம்பெறுவதாக மக்கள் புகார் தெரிவிக்கிறார்கள். மொத்தத்தில் வடக்கு கிழக்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அகதிகளினதும், வறிய மக்களினதும் நிவாரண உணவுப் பொருள் விநியோகத்திலேயே தங்கி வாழ்கின்றன. கூட்டறவுச் சங்கங்களில் பணி புரிவோருக்கு அகதி மக்களின் கொடுப்பனவுகளில் கொள்ளை இலாபம் அடித்தே சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விடயத்தில் அரசாங்க அதிபர்கள் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் கோருகிறார்கள். ■



படிப்பகம்

www.padippakam.com

# வவுனியா மருத்துவமனையில் குமுறல்
## மருத்துவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி

(நமது சிறப்பு நிருபர்)

இன்றைய நிலையில் வவுனியா நகரம் எந்த நேரமும் கொந்தளிப்பான நிலையிலுள்ளது. வடபுலத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான அகதிகள்; தொடரும் வன்னிப் போரினால் எழுந்துள்ள பலதரப்பட்ட சிக்கல்கள், எந்த நேரம் என்ன நடக்குமோ என்று தெரியாத பரிதவிப்பு.

பதற்றமான சூழலால் பாதிப்புற்ற மக்கள் பலவகையான நோய்களாலும் பீடிக்கப்பட்டுள்ளனர். ஷெல்வீச்சுக்களாலும், துப்பாக்கிச் சூடுகளினாலும் தினசரி பலர் காயப்படுகின்றனர். பொது மக்கள் மட்டுமல்லாமல், ஆயுதப் படையினரும் பொலிசாரும் கூட படுகாயமடைகின்றனர்.

நோய், துன்பங்களினாலும் காயங்களினாலும் பாதிப்புறும் பல்லாயிரக் கணக்கானோரின் துயர் துடைக்க வவுனியா நகரில் அரசாங்க ஆதார வைத்திய சாலை ஒன்று மட்டுமே உள்ளது.

ஆனால் இந்த வைத்தியசாலைக்குப் பொறுப்பாகவுள்ள பிராந்திய சுகாதார இயக்குநர் மற்றும் மாவட்ட சுகாதார அதிகாரி ஆகியோரின் தான்தோன்றித் தனமான போக்கினால் இவ்வைத்திய சாலையில் பணிபுரியும் மருத்துவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

### புது நடைமுறை

இலங்கையில் வேறு எந்த அரச மருத்துவமனையிலும் நடைமுறைப்படுத்தப்படாத சில நடவடிக்கைகளை இவ்விரு அதிகாரிகளும் மேற்கொள்வதனால் இங்கு அர்ப்பணிப்போடு பணிபுரியும் மருத்துவர்கள் பெரும் மன வேதனை அடைந்துள்ளதாகத் தெரிகிறது.

வவுனியா இன்றைய நிலையில் ஒரு கஷ்டமான பிரதேசமாகக் கருதப்படுகிறது.

வட-கிழக்கு மாகாணத்தில் எந்த இடத்தில் பணிபுரியும் சகல அரச ஊழியர்களுக்கும் பிரத்தியேகமான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் வவுனியா மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு அக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை.

அரச மருத்துவர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் மேலதிக நேரத்துக்கு தனியாக பணம் கொடுக்கப்படவேண்டும்.

வவுனியா மருத்துவமனை மருத்துவர்கள் குறிப்பிட்ட மணிநேரம் மேலதிக வேலை செய்தமைக்கான சகல பதிவுகள்-முறையாக இருந்தும்கூட எந்த விதமான முன்னறிவிப்புமின்றி, கொடுப்பனவுகள் சரிபாதிக்கும் மேலாக வெட்டப்பட்டுவிடுகின்றன.

### ஏன் மறந்தனர்?

வவுனியா போன்ற இடங்களில் கடமையாற்றும் மருத்துவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் சென்று பணிபுரிவதற்கு எதுவித வாய்ப்பும் இல்லை.

அரசாங்கம் கொடுக்கும் வேதனம் மட்டுமே அவர்களுக்கு ஆதாரம். அவர்களில் பலர் விரும்பியிருந்தால் வேற்று நாடுகளுக்குச் சென்று ஏராளமாகப் பணம் சம்பாதிக்கலாம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் பணிபுரிய முன்வந்த மருத்துவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற ஒரே சேவை மனப்பான்மையுடன் பணி புரிபவர்கள் என்பதனை இந்த மேலதிகாரிகள் ஏன் மறந்தனரோ தெரியவில்லை!

இவை தவிர, குறிப்பிட்ட மேலதிகாரிகள் மேற்படி மருத்துவர்களை மிகவும் கீழ்த்தரமாகக் கணிப்பதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.

இம் மருத்துவர்களின் நியாயமான கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டால், துன்பத்துக்கு மேல் துன்பம் அனுபவித்து வரும் வவுனியா வாழ் அப்பாவிப் பொதுமக்கள்தான் சொல்லொணாப் பாதிப்புக்குள்ளாக வேண்டி இருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

# பாஸ் பெறுவதற்கு காத்திருப்பு
## பயணிகள் பெரும் அவதி

மன்னாரப் பகுதியிலிருந்து நாட்டின் தென்பகுதிக்குச் செல்லும் மக்கள் தற்போது என்றுமில்லாதவாறு பல்வேறு சோதனைக் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

மன்னாரிலிருந்து நாட்டின் தென் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமாயின் பயணத் திகதிக்கு ஒருநாள் முன்பதாக மன்னார் கூட்டுறவு செயலகக் கட்டடத்தில் இயங்கும் பாஸ் அலுவலகத்திற்குச் சென்று பாஸ்பெற வேண்டும்.

தற்காலிகமாக வந்து செல்வோர், நிரந்தர இராணுவ அடையாள அட்டை வைத்திருப்போர் ஆகியோர் பாஸ் பெறுவதற்காக நீண்ட கியூவில் காத்து நிற்க வேண்டும்.

இராணுவ அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் பொலிஸ் நிலைய பாஸ் பெறாமல் நேரடியாக இங்கே பாஸ் பெற முடியும். அவ்வாறு பெற்ற பாஸ் ஒன்றை போட்டோ பிரதி பண்ண வேண்டியுமுள்ளது.

பயணத் திகதி உறுதியான பின்னரே பாஸ் பெறலாம். முன்பு செட்டிகுளத்தில் வைத்து வழங்கப்பட்ட அதே பாஸ்தான் இங்கு வழங்கப்படுகிறது. இதற்காக பயணிகள் இரு இடங்களில் ஒப்பமிடவேண்டும்.

மறுநாள் நிரந்தர அடையாள அட்டை உடையவர்கள் மாத்திரம் வீடியோ பண்ணப்பட்டபின் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

மன்னாரில் பாஸ் பெற்றாலும் செட்டிகுளம் சோதனைச் சாவடியில் அதனைக் காட்டி கொப்பியில் பதிவுசெய்து ஒப்பம் பெறப்பட்ட பின்பே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

பயண நாளுக்கு ஒருநாள் முன்பதாக நோயாளிகள்- பெண்கள், வயோதிபர்கள், சின்னஞ்சிறு குழந்தைகள் என்று சகல தரப்பாரும் பயண அனுமதிப்பத்திரம் பெற மன்னாரில் காத்து நிற்கவேண்டியுள்ளது.

மன்னார் கூட்டுறவு செயலகத்தில் இங்குள்ள சகல பாஸ் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதால் சுமார் அரை நாளாவது பாஸ் பெறுவதற்காக செலவிட வேண்டியுள்ளது.

அத்துடன் மாலை 4 மணிக்கு முன் பாஸ்பெறவேண்டியுள்ளதால் அவசர பயணம் மேற்கொள்வோர், திடீரென வெளியிடங்களிலிருந்து வருவோர் ஆகியோர் உடனடியாகப் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுச் செயலகத்திலேயே சகல பாஸ் வழங்கலும் நடைபெறுவதால் அதற்கு போதிய ஆட்கள் இல்லை எனக் கூறப்படுகிறது.

# ஓட்டோ தொடர்பான சர்ச்சைகள்
## இன மோதலாக மாறும் அறிகுறி

(கண்டி நிருபர்)

கண்டிப் பிரதேசத்தில் முஸ்லிம் கிராமங்கள் பலவற்றில் முச்சக்கர வண்டிகள் தொடர்பாக எழும் சர்ச்சைகள் இறுதியில் இனக் கலவரமாக மாறிவரும் நிலை குறித்து இப்பகுதி முஸ்லிம்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருட நடுப்பகுதியிலும் கடந்த 22ஆம் திகதி ஞாயிறும் முஸ்லிம் கிராமங்களில் அடிக்கடி சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பல மோதல் சம்பவங்களும் கசப்புணர்வுகளும் தோன்றியுள்ளன.

சந்திகளில் நிறுத்தப்படும் முச்சக்கரவண்டிகளோடு ஒன்றிணைந்ததாகவே இற்றைவரை இப்பிரச்சினைகள் இடம்பெற்றிருப்பதாக இப்பிரதேச முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம் கிராமங்களில் அக்குறணையைத் தவிர்ந்த ஏனைய கிராமங்கள் பலவும் சிங்களவர் வாழும் பிரதேசங்களின் மத்தியிலேயே அமையப் பெற்றிருப்பதால் இந்தச் சச்சரவு அடிக்கடி தலைதூக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் 22ம் திகதி கலகெதரை மடிகே பிரதேசத்தில் இடம்பெற்ற இத்தகைய மோதலின் விளைவாக முஸ்லிம்களின் உடமைகள் பெரும் அளவில் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு மர ஆலை, வாகனங்கள், வீடுகள் பல தீவைக்கப்பட்டமையால் 50 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்தச் சம்பவம் பற்றிய செய்திகள் கிடைத்த உடனேயே அப்பகுதிக்கு விரைந்திருந்தால் சகல சேதங்களையும் இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவங்களையும் தடுத்திருக்கலாம் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் கண்டிப் பிரதேசத்தில் தலைதூக்காமல் இருக்க இப்பகுதி அனைத்து முஸ்லிம் அரசியல் பிரமுகர்களும் விழிப்பாக இருப்பதுவே புத்தியாகும் எனவும் அவர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர்.

# தோட்டப் பாடசாலையில் சுருட்டலும் குடும்ப சேவையும்!
## மாணவர்கள் கல்வி பெரும் பாதிப்பு!

மலையகப் பகுதியில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு அங்குள்ள சிங்களப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வசதிகளைவிட குறைந்தளவான வசதிகளே கிடைத்துவருவது ஒரு புறமிருக்க; கிடைக்கும் சிறிதளவான வசதிகளைக் கூடத் தங்களது குடும்ப சேவைக்கானவை என்று நினைத்து ஒரு சில தமிழ்ப் பகுதிப் பாடசாலைகளிலுள்ள அதிபர்கள் நடந்து கொண்டு மலையகத் தோட்டப் புறச் சிறார்களின் எதிர்காலத்தை பாழடிக்கிறார்கள்.

பதுளை-லுணுகலை சுவின்ரன் தமிழ் வித்தியாலயத்தில் இல்ல விளையாட்டுப் போட்டியொன்று சமீபத்தில் இடம்பெற்றது. அப்பொழுது அந்த நிகழ்சிக்காக மாணவர்களிடமும், பொதுமக்களிடமும் இருந்து வசூலித்த பணத்தில் பரிசுப் பொருட்கள் வாங்கப்பட்டிருந்தன.

இதனைத் தனது குடும்ப சேவைக்காகப் பாவிக்க நினைத்த அப்பாடசாலையின் அதிபரான பெண் மணி உடனடியாகக் காரியத்தில் இறங்கினார். தனது சின்ன மகள் கடந்த வருடம் வேறொரு நிகழ்ச்சிக்காக மனனம் செய்திருந்த ஆங்கில வார்த்தைகள் சிலவற்றை சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசச் செய்து, அதற்காகச் சில பரிசுப் பொருட்களைக் கையளித்து விட்டார். இவ் விதம் கொடுக்கப்பட்டவை தொழிலாளர்களின் ஏழை மாணவர்களுக்குச் சேர வேண்டியவை.

ஏழை மாணவர்களின் பாடசாலைச் சீருடைத் துணிகளையும் சுருட்டிக் கொண்டு செல்வதில் இப் பெண்மணி தாராளத் தன்மையுடன் நடந்து கொள்கிறார்.

1991ம் ஆண்டு இவர் கோணகலை தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியையாக இருந்த பொழுது அங்குள்ள மாணவர்களையும், பெற்றோரையும் 'தோட்டக்காட்டான்' என்று இழிவுபடுத்திப் பேசியதால் மாணவர்களும், சக ஆசிரியர்களும், பெற்றோரும் கொதித்தெழுந்து சுவரொட்டிகளை ஒட்டி, பதாதைகளைத் தாங்கிய வண்ணம் ஆர்ப்பாட்டம் செய்து இவரை அங்கிருந்து வெளியேற்றினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

விளம்பரப் பகுதி




**மலையாள மாந்திரிகம்**



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....

**நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்**

★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான்
★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்

NAGOOR Travels & Tours
அங்கிகார இல: 1094
33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.
☎ 439392

- Royal - 071-35132



**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.

**ஓட்டமாவடி மே 2,3ம் திகதிகளில்**
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.
T.P. 065-57345

**கல்முனையில் மே 9,10,11ம் திகதிகளில்**
T.M.M பாமசியிலும் T.P. 065-29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33, Tissa Weerasingam Sq,
Boundary Road, Batticaloaவிலும் சந்திக்கலாம்.

**வவுனியாவில் மே 16,17,18ம் திகதிகளில்**
வவுனியாவில் 2ம் குறுக்கு தெரு, ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கவனத்திற்கு! புதியசெல்டெல் No. 072-609388


## 3ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 07.08.1923
உதிர்வு: 24.03.1998

**உயர்திரு ஆறுமுகம் திருநாவுக்கரசு**
(முன்னாள் ஐக்கிய வியாபார சங்க புடவை பகுதி முகாமையாளர்-யாழ்ப்பாணம்)

அன்புத் தெய்வமே காலமெல்லாம் எமக்கென வாழ்ந்து இடைவிடாது இறைவனை வழிபட்டு எல்லோருடனும் கரம் கூப்பி அன்பாகக் கதைத்து விட்டு மறைந்த போதிலும் ஐயா ஐயா......... என்று எங்கள் குரல் ஓய்வதில்லை.

பாசமிகு கணவனாய், தந்தையாய், மாமனாய், தாத்தாவாய், இருந்து நீங்கள் எங்களை விட்டு பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் எங்கள் எல்லோரையும் விட்டு நீங்காது இருக்கும்.

அன்னாரது துக்கத்திலும், நினைவஞ்சலியிலும், கலந்து கொண்ட அனைவருக்கும், அத்தோடு உள்நாட்டு, வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும், கண்ணம்மா (மனைவி), சிவகுமார்(கனடா), வசந்தா(கொழும்பு), இந்திரா(ஜேர்மன்), சத்தியநாதன்(கனடா), சாந்தா(கொழும்பு), லலிதா(ஃபிரான்ஸ்), ராஜன்(கனடா) ஆகிய பிள்ளைகளும், சகோதர சகோதரிகள், மருமகன்கள், மருமகள்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், சகலன்மார், பேரன், பேத்திகள், உற்றார், உறவினர்.

தகவல்: திரு. ரி.சத்தியநாதன்(மகன்)-கனடா

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் குஞ்சித்தம்பி பொன்னுத்துரை**
(இருதயபுரம் மேற்கு - மட்டக்களப்பு)

மண்ணுலகில் 18.05.1933
விண்ணுலகில் 02.05.1995

அன்பின் திருவுருவாய்
அமைதியின் உறைவிடமாய்
பாசத்தின் பரம்பொருளாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் கோபுரமாய்,
கோபுரத்தின் ஒளி விளக்காய்
எமைக்காத்த தெய்வமே....!
அன்பு ஐயாவே! நீங்கள்
எம்மைப் பிரிந்து
மூன்றாண்டென்ன மூவாயிரம்
ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பிரிவு எங்கள்
நெஞ்சங்களை விட்டு
நீங்காதையா. உங்கள் ஆத்மா
சாந்தியடைய பாசமலர் தூவி
இறைவன் பாதமதை
பணிந்திடுவோம்.
உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

தகவல்: பி. பற்றிக் ஜெயக்கொடி (கே.எஸ்.ஏ).


**CIT**

**Be a Software Professional!**
**Beat the Worldwide IT Skills Shortage**
**Learn**
ORACLE DEVELOPER 2000, POWER BUILDER, VISUAL BASIC, WINDOWS NT

**SECURE A FOREIGN IT JOB**
Courses conducted by foreign lecturers

| Course | No. of Weeks | Total Hours | Course Fee Rs. |
|---|---|---|---|
| Client Server Development Tools | | | |
| 1. Microsoft Visual Basic V5 | 5 | 35 | 3,950 |
| 2. Oracle 7.1 with Developer 2000 | 10 | 80 | 5,900 |
| 3. Power Builder V5.0 | 7 | 48 | 5,250 |
| Windows & Windows NT Support | | | |
| 4. Supporting Windows 95 | 2 | 13 | 2,750 |
| 5. Supporting Microsoft Windows NT Ver.4.0 | 4 | 40 | 4,000 |
| Databases | | | |
| 6. Microsoft Access V2 Development | 10 | 72 | 3,750 |
| 7. MS SQL Server V6.5 | 5 | 42 | 5,950 |
| Microsoft Office & Exchange | | | |
| 8. Supporting Microsoft Word | 2 | 20 | 2,150 |
| 9. Supporting Microsoft Excel | 2 | 20 | 2,150 |
| 10. MS Office | 4 | 40 | 4,900 |

**Preparing you for Foreign Job World**
Week day, Evening & Weekend classes.

Call & Register Now
Colombo Institute of Technology
256, Galle Road, Colombo 6.
Phone : 502111 (5 lines) Fax: 502203
Email : cit@sri.lanka.net

Why choose CIT Training
- Leading Edge Courses
- Latest packages
- Limited class size
- Training to meet todays needs.




படிப்பகம்

www.padippakam.com

# பாதிதூரம்கூடக் கடக்காத 'பந்தயக் குதிரை'

நாரதர்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

ஜனாதிபதி சந்திரிக்கா அரசின் அரசியல் இராணுவ நடவடிக்கையான 'ஜயசிக்குறுய்' ஒரு வருடத்தை எட்டுகிறது.

பந்தயக் குதிரையில் பணத்தை கட்டிவிட்டு வெற்றியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது அரசாங்கம்.

தென்னிலங்கையில் தமது சாதனை என்று சொல்லிக் கொள்ள வடக்கு-கிழக்கு போர் அரங்கை பற்றிய விபரிப்புக்கள் தவிர வேறு எதுவும் பொதுஜன முன்னணியிடம் கிடையவே கிடையாது.

**தபால் தந்தி ஊழியரின் வேலை நிறுத்தத்தை முறியடிக்க முரட்டுத்தனமாக நடந்தது அரசு. பொதிகளை தூக்கிக் கொண்டு ஓட்டம் காட்டியது. அதனால் பிரச்சனை பெரிதாகியதால் போர் முனையில் உள்ள படையினரின் கடிதங்கள் உரிய இடங்களுக்கு போய்ச்சேரவேண்டாமா? என்று உள்ளத்தை உருக்கும் வசனம் பேசப்பட்டது.**

பல நூற்றுக்கணக்கான படையினர் காணாமல் போன பட்டியலில் இருக்கின்றனர். உதாரணமாக முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் தாக்கப்பட்டபோது ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் பலியாகினர். ஆனால் அதில் பாதியளவானோர்கூட பலியானோர் என அரசால் ஏற்கப்படவில்லை. காணாமல் போனோர் பட்டியலில்தான் உள்ளனர்.

தங்கள் பிள்ளைகளின் கதி என்னவென்று அறிய முடியாமல் படையினரின் பெற்றோர்கள் புலம்பிக்கொண்டு திரிகிறார்கள். இந்த சோகம் பற்றியெல்லாம் அரசுகூட அக்கறைப்பட்டதாக தெரியவில்லை.

ஆனால் வேலை நிறுத்தங்கள் போன்ற நெருக்கடி காலங்களில் தன்னை பாதுகாத்துக் கொள்ள படையினரின் தியாகங்கள் பற்றிய நெஞ்சை நெகிழவைக்கும் வசனங்கள் பேசப்படுகின்றன.

இன்னொரு விஷயம் என்னவெனில், பலியாகும் சிப்பாய்களுக்காக ஒரு குறிப்பிட்ட உதவித் தொகை அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் என்று பெரிதாக கூறுகிறார்கள்.

**பலியான சிப்பாயின் உடலை போர்முனையில் இருந்து அவர்களது சொந்த ஊருக்கு கொண்டு செல்லும் செலவு, சவப்பெட்டிச் செலவு என்று பலதரப்பட்ட செலவுகளை அந்தப் பணத்தில்தான் கழித்துக் கொள்கிறார்கள்.**

எனவே, உருக்கமான வசனங்கள் அரசாங்கத்தை தற்காத்துக் கொள்ள மட்டும்தான்.

**மின்சார சபையினர் வேலை நிறுத்தம் செய்தபோது, அதனை முறியடிக்க யானை-புலி கூட்டு என்று கதை சொன்னதும் இதே அரசாங்கம்தான்.**

யுத்தம் நடைபெறும்போது வேலைநிறுத்தம் செய்யலாமா? சம்பள உயர்வு கேட்கலாமா? படையினரின் மனநிலை பாதிக்கப்படும் அல்லவா என்று கேட்பது இருக்கட்டும். அரசாங்க அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கால மாற்றம் சரியில்லை என்று உலகம் சுற்றும் வாலிபர்களானது மட்டும் நியாயமா?

**ராசி பலன் பார்த்து அரசாங்க பிரமுகர்கள் குடும்ப சகிதம் உலக வலம் வருவது நியாயம், சம்பள உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்வது மட்டும் அநியாயமா? இது என்ன நியாயம்?**

**மொத்தத்தில் போர் என்பது இன்றைய அரசின் இயலாமைகள், அரசியல் நெருக்கடிகள், நிர்வாக மந்தங்கள் என்பவற்றை நியாயப்படுத்தக்கூடிய ஒன்றாக மாறியிருக்கிறது.**

வெளிப்படையான இனவாதமாக இல்லாமல், மறைமுகமான இனவாதமாக போர் வெற்றி பற்றிய நம்பிக்கைகள் வளர்க்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டதை புலிகள் மீதான வெற்றி என்று க்ருதியோரை விரல் விட்டு எண்ணிவிடலாம். சிங்கள இனத்தின் படை பெற்ற வெற்றியாகவே கொண்டாடப்பட்டது.

அதன்பின்னர் படையினர் வெளியிட்ட ஆள்திரட்டும் விளம்பரம் ஒன்றில் 'துட்டகைமுனுவின் புத்திரர்களே வருக' என்று அழைப்பு விடுக்கப்பட்டமை உண்மையான மனோநிலைக்கு உதாரணம்.

"24 மணிநேரத்தில் தனிச் சிங்கள சட்டத்தை கொண்டு வருவேன்" என்று அமரர் பண்டாரநாயக்கா விதித்த காலக் கெடுவும், "மூன்று மாதத்தில் போரை முடிவுக்கு கொண்டு வருவோம், தரைப் பாதை திறப்போம்" என்று ஜனாதிபதி சந்திரிக்கா கூறிய காலக் கெடுவும் அடிப்படையில் ஒன்றையே குறிக்கின்றன. 'சிங்கள இனத்தின் பெருமையை காக்க முற்படுகிறோம்' என்று காட்டுவதே அடிப்படை.

ஆனால் கூறப்படும் முறைகள் வேறாக இருக்கின்றன.

கொழும்பில் தம் கண்களுக்கும் காதுகளுக்கும் அருகில் தமிழர்கள் வகைதொகையின்றி கைதாகிய ஒருவாரக் கூத்தின்போது ஜனாதிபதி உட்பட அவரது சகாக்கள் அனைவரும் அமைதியாக இருந்த போது, தமிழர் வேறு புலிகள் வேறு என்ற பேச்சுக்களின் ஜாயம் பளிச்சென்று வெளுத்தாகிவிட்டது.



ரி.55 ரக டாங்கி

படையினர் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டை மீறிச் செயற்படுவதுபோல சிலர் சப்பைக் கட்டு கட்டப் பார்க்கிறார்கள்.

நாம் என்ன பாகிஸ்தானிலா இருக்கிறோம்? படையினர் நினைத்தபடி நடக்க இங்கு முடியாது. தனிப்பட்ட படையினர் அத்துமீறல்களில் ஈடுபடுவது வேறு. திட்டமிட்டு, படைப்பிரிவுகளை இறக்கி கிட்டத்தட்ட ஒருவாரமாக தேடுதல், கைது நடவடிக்கை என்று ஈடுபட முடியாது. பாதுகாப்பு சபையின் அனுமதியுடன் நடந்த சம்பவங்களே அவை.

**பாதுகாப்புச் சபை கூட்டத்திற்கு ஜனாதிபதிதான் தலைமை தாங்குகிறார். ஜனாதிபதி நினைத்தால் படை அதிகாரிகளையும் மாற்ற முடியும்.**

இந்த் நாட்டின் படை அதிகாரிகள் அரசாங்க கட்சிக்கும் விசுவாசமானவர்களாகவே இருந்து வந்துள்ளனர். அதற்கேற்பவே ஆட்சிகள் மாறும் போது படைகளுக்குள் அதிகாரிகள் மாற்றப்படுதல், பதவி உயர்வுகள் போன்றவை இடம்பெறுகின்றன.

தன்னிச்சையாக முடிவெடுத்து செயற்படும் அளவுக்கு எந்தவொரு படை உயரதிகாரியும் இங்கு கிடையாது.

ஜே.வி.பி. கால வேட்டைகள்கூட அன்றைய அரசின் பூரண உத்தரவுடன் நடைபெற்றவைதான்.

**எனவே படை வேறு, ஜனாதிபதி வேறு, அமைச்சர் பெருமக்கள் வேறு, வேறு என்பதெல்லாம் தப்பான கருத்துக்கள். ஆளும் தரப்பு, படைகள், மற்றும் அரச அதிகாரிகள் எல்லோரும் ஒரே இயந்திரத்தின் பாகங்கள்தான்.**

ஆனால் இன்று போர் வெற்றியையே தமது சொந்த அரசியல் இலாபத்துக்கும் அரசு நம்பியிருப்பதால் படைகளுக்கு அதிக சுதந்திரம் கொடுக்க வேண்டி இருக்கிறது. படையினரது மனம் கோணாமல் நடந்து கொள்ள வேண்டி இருக்கிறது. படை அதிகாரிகளுக்கு உற்சாகம் தர வேண்டியிருக்கிறது.

ஆக, இது படையினரை கட்டுப்படுத்த முடியாதளவுக்கு ஜனாதிபதியின் இயலாமை அல்ல. தமது தேவை கருதி விட்டுப் பிடித்தல். கடிவாளத்தை தளர்த்தி உற்சாகம் கொடுத்தல்.

வெற்றிக் கனியை விரைவாகக் கொய்து தாருங்கள் என்றும் கூறிக்கொண்டு, படையினரது கைகளைக் கட்டியும் போடுவது சாத்தியமில்லைத்தானே!

**தென்னிலங்கையில் படிப்படியாக இன்றைய அரசாங்கத்தின் செல்வாக்கு தேய்ந்து கொண்டு இருக்கிறது. இந்த அரசியல் நஷ்டத்தை ஈடுசெய்ய போரிலேதே முழு நம்பிக்கை வைத்துள்ளது அரசாங்கம்.**

அரசு கோடி கோடியாக நிதியை கொட்டிவிட்டு, வெற்றிகரமாக ஓடி முடிக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கும் பந்தயக் குதிரைதான் 'ஜயசிக்குறுய்'.

எதிர்வரும் மே 13ம் திகதி இந்தப் பந்தயக் குதிரையை களமிறக்கிய ஒரு ஆண்டு பூர்த்தியாகப் போகிறது.

**களநிலவரம் கடுமையாக மாறியுள்ளது. மே 13ம் திகதிக்குள் மாங்குள நகரைக்கூட 'ஜயசிக்குறுய்' படைகள் கைப்பற்றவே முடியாது. இது மிக நம்பகமான, கேள்விக்குறிக்கே இடமில்லாத கள நிலவரம்.**

மாங்குளம் நகருக்கும், தற்போது கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் படையினர் நிலை கொண்டுள்ள பகுதிக்கும் இடையே இருப்பது ஆக ஏழு கிலோ மீட்டர் தூரம் மட்டும்.

**ஒரு வருடம் பூர்த்தியாக இன்னும் இருப்பது பதின்நான்கு நாட்கள். ஆனாலும் மாங்குளம் நகரை மே 13ம் திகதிக்கு முன்பாக கைப்பற்றிவிடலாம் என்று படையினர் நினைத்தால் அது கைகூடாத கனவாகவே இருக்கும்.**

தற்போது வவுனியா-யாழ் நெடுஞ்சாலையில் புளியங்குளத்தை படையினர் தாண்ட முடியவில்லை. அதாவது சுமார் 73 கிலோ மீட்டர் தூரமுள்ள நெடுஞ்சாலையில் பாதி தூரத்தைக்கூட படையினரால் கடக்க முடியவில்லை. ஆக 20 கிலோ மீட்டர் தூரம் வரைதான் முன்னேற முடிந்தது.

எனவே தற்போது நெடுஞ்சாலைக்கு இருபுறமும் உள்ள உட்பாதைகள் வழியாகவே முன்னேறும் முயற்சிகள் நடக்கின்றன.

இவற்றில் பிரதானமானது நெடுஞ்சாலைக்கு கிழக்கே உள்ள கரிப்பட்ட முறிப்பு ஒலுமடுப் பகுதியில் இருந்து மேற்கொள்ளப்படும் நகர்வுதான்.

**வவுனியா-யாழ் சாலையில் படையினர் நிலைகொண்டுள்ள புளியங்குளத்தில் இருந்து மாங்குளத்துக்கு செல்வதானால் மேலும் 21 கிலோ மீட்டர் தூரம் கடந்தாக வேண்டும்.**

ஆனால் உட்பாதையால் சென்று, மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் கரிப்பட்ட முறிப்பில் உள்ள படையினர் ஏழு கிலோ மீட்டர் தூரத்தை கடந்தால் மாங்குளம் நகரை அடைந்துவிடலாம்.

அது மட்டுமல்லாமல் உட்பாதைகள் வழியாக முன்னேறும் போது இன்னொரு சாதகம் இருப்பதாக படையினர் நினைத்திருக்கக்கூடும்.

**எந்தப் பாதையால் படையினர் முன்னேறுவர் என்று புலிகளால் ஊகிக்க முடியாது. அதனால் தடை அரண்களை அமைத்து நிற்க முடியாது என நினைத்திருக்கலாம்.**

யாழ் குடாநாட்டை கைப்பற்றும்போது பிரதான சாலைகளை பயன்படுத்தாமல் தோட்டக் காணிகள், வயல் வெளிகள், குடிமனைகள் ஊடாக டாங்கிகள், புல்டோசர்கள் சகிதம் படையினர் முன்னேறிச் சென்றனர்.

அதே போன்றதொரு தரை நகர்வை பரந்த உட்பாதைகள் வழியாக வன்னியிலும் மேற்கொள்ள படையினர் நினைத்தனர்.

ஆனால், யாழ் குடாநாட்டு தரையமைப்பும், வன்னித் தரையமைப்பும் ஒன்றல்ல. அது தவிர, யாழ் குடாநாட்டில் இருந்ததை விட வன்னியில் புலிகளிடமும் மரபுப் போரில் பயன்படுத்தப்படும் ஆட்டிலெறிகள், கனரக மோட்டார்கள் போன்ற படைக்கல பலம் மேலதிகமாகச் சேர்ந்துள்ளது.

**அடர்ந்த காடும் அதனுடன் பரிச்சயமும், தளத்தை பாதுகாக்கும் உத்வேகமும், பல நாட்கள் சத்ஜய படைகளுடனும், ஜயசிக்குறுய் படையினருடன் ஒருவருடமாகவும் மோதிய அனுபவமும் கொண்ட புலிகளின் அணிகளை படையினர் இப்போது எதிர்கொள்கின்றனர்.**

எப்படித்தான் உட்பாதைகள் வழியே பரந்து முன்னேறினாலும், 'ஜயசிக்குறுய்' படையினர் கிளிநொச்சியை சென்றடைய வேண்டுமானால் ஒரு குறிக்கப்பட்ட பாதையை கடந்தாக வேண்டும்.

எனவே அப் பாதைகள் வழியாக படையினர் சென்றால் பாரிய சேதங்களை ஏற்படுத்தக்கூடிய ஏற்பாடுகளை புலிகள் செய்து வைத்திருக்கின்றனர்.

உட்பாதைகள் வழியாக முன்னேறுவது தமக்கு சாதகம் என்று படையினர் தீர்மானித்த போது, அதனையே தமக்கும் சாதகம் என்று புலிகள் நினைத்தனர்.

**'ஓடுமீன் ஓடி**
**உறுமீன் வருமளவும்**
**வாடி இருக்குமாம்**
**கொக்கு'**
**வன்னியில் புலிகளின்**
**'கொக்கு' ப் பாணி**
**போர்த்தந்திரப் பொறிகள்!**

ஒரு முனை வழியாக படைபலம் ஒன்று குவிக்கப்பட்டு முன்னேறும்போது, தடுத்து நிறுத்துவதைவிட, பல முனைகளில் பரவலாகி முன்னேறும்போது தடுத்து நிறுத்துவது சுலபம்.

குறிக்கப்பட்ட எண்ணிக்கையான படைதான் இருக்கிறது. அதனைத்தான் பல முனைகளுக்கு பிரித்து அனுப்புகிறார்கள்.

எனவே, படையினரின் குவிவு அடர்த்தி குறைவதால், ஊடறுப்புக்கும் வசதிப்படும். முன்னேறும்போது தாக்குதவற்கும் சுலபமாக இருக்கும்.

**வவுனியா-யாழ் நெடுஞ்சாலை வழியாக படையினர் முன்னேறவிடாமல் புலிகள் தடுத்து நிறுத்தியதால், படையினரைவிட புலிகளுக்கே போர்த் தந்திர ரீதியில் சாதகம் அதிகமாகி இருக்கிறது.**

உட்பாதை வழியாக முன்னேற படையினர் தற்போது முனைப்பு காட்டுவதற்கு முக்கியமான காரணங்கள் மூன்று.

1) புலிகளை பல முனைகளில் சண்டைக்கு இழுத்தால் அவர்களது தாக்குதல் உக்கிரம் குறையும்.

2) உட்பாதைகள் வழியாக முன்னேறினால் புலிகள் முன்கூட்டியே படைகள் நகரும் பாதையை ஊகித்து 'எதிர்ப்பு யுத்த' ஏற்பாடுகளை செய்ய முடியாது.

3) நெடுஞ்சாலையில் தற்போது நிலை கொண்டுள்ள புளியங்குளத்தில் இருந்து முன்னேறுவதைவிட, கரிப்பட்ட முறிப்பில் இருந்து கிளிநொச்சிக்கு செல்வதற்கான தூரம் குறைவானது.

அதேபோல, உட்பாதை வழியாக ஒரு குறிக்கப்பட்ட நீள அகலமான நிலப்பரப்பில் படையினர் நிலைகொள்ள புலிகள் அனுமதிக்கவும் முக்கியமான மூன்று காரணங்கள் உள்ளன.

**1) படைபலம் பரவலானால், ஒன்று குவிந்த முன்னேற்றப் பலம் சேதமாகும்.**

**2) கரிப்பட்ட முறிப்பு ஊடாக மாங்குளம் செல்லாமல் அம்பாகமம் ஊடாக கிளிநொச்சி நோக்கிச் சென்றால், முல்லைத்தீவில் இருந்து பாரிய ஷெல் தாக்குதல்கள் தொடுக்கலாம். ஊடறுப்புக்களும் நடத்தலாம்.**

**3) படையினரின் பலத்தை கொஞ்சம் கொஞ்சமாக சேதமாக்கும் வகையில் சமரை மேலும் இழுத்தடிப்பது.**

எனவே, வன்னிப் போர் முனையில் படையினர் மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்வையும், 'ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பது போன்ற தந்திரத்துடன் புலிகள் எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

போர்த் தந்திர ரீதியில் தமக்கு சாதகமற்ற பகுதிகள், அல்லது அதிக இழப்பை தமது தரப்பில் உருவாக்கக்கூடிய பகுதிகளில் சண்டைகளை புலிகள் தவிர்க்கிறார்கள்.

அதனை ஒரு பலவீனமாக கருதி படையினர் கண்ணை மூடிக்கொண்டு அகலக் கால் வைத்தால் புலிகளின் போர்த்தந்திர பொறிகளில் மாட்டிக் கொள்கிறார்கள்.

ஒலுமடுவில் 20.04.98 அன்று நடைபெற்ற சண்டைகளும் கொக்கு உபாயம் தான். தாம் ஓய்வு பெறும்போது, கிட்டத்தட்ட மூன்று வாரமாக புலிகள் ஏன் தேடிவந்து தாக்கவில்லை? என்று படையினர் தீர ஆராயத் தவறிவிட்டனர். புலிகளின் பலவீனமாக அதனை எடுத்துக் கொண்டனர்.

**விளைவு, புலிகளின் போர்த்தந்திர வலையில் வசமாக சிக்கி, பாரிய விலை கொடுக்க வேண்டி இருந்தது. படையினர் நூறுபேர்வரை பலியாகியுள்ளதாக இறுதியாக கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.**

கடந்த பெப்ரவரி 21ல் புலிகளின் கடற் தாக்குதலில்போது கடலில் மூழ்கிய டாங்கிகள் இரண்டை படையினர் மீட்டிருந்தனர். ஆனால் ஒலுமடுத் தாக்குதலில் டாங்கிகளைப் பறிகொடுத்துள்ளனர். இரண்டு டாங்கிகள் முற்றாக நாசமாகியதாக கொழும்பு ஆங்கில பத்திரிகைகள் இராணுவ தரப்பை ஆதாரம் காட்டி தகவல்கள் வெளியிட்டுள்ளன.

கப்டன் குணரத்ன உட்பட சில படைவீரர்களை புலிகள் பிடித்துச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது. அவர் தமிழராக இருந்திருந்தால் ஒலுமடு நகர்வு பற்றி புலிகளுக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்தார் என்று கூறியிருப்பார்களோ தெரியாது.

**கப்டன் குணரத்ன புலிகளிடம் சிக்கியிருந்தால், 'ஜயசிக்குறுய்' படையினரின் பலம், பலவீனம் பற்றிய பல தகவல்களை அவரிடம் இருந்து புலிகள் கறக்கக்கூடும். இந்த விடயத்தில் படைத்தரப்பில் சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிமோ யாராக இருந்தாலும் சில தகவல்களை வெளியிட்டே உயிர் தப்ப வேண்டி இருக்கும்.**


எப்படியோ சந்திரிக்கா அரசின் 'பந்தயக் குதிரை'யான 'ஜயசிக்குறுய்' தற்போது இலக்கை நோக்கி ஓடவும் முடியாமல், நடந்து நகரவும் முடியாமல் பின்னடைவுகளுடன் நின்றே ஒரு வருட பூர்த்தியைக் கொண்டாடப் போகிறது.

சமீபத்தில் இந்திய முன்னாள் தளபதி கல்கட்கூட 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை தொடர்பாக அவநம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

'ஜயசிக்குறுய்' ஒரு வருடத்தை எட்டும் இந்த நேரத்தில் கல்கட்டின் கூற்று அபசகுனம் போல அமைந்திருக்கிறது.

நல்லவேளை, நாகேந்திரநாத் ஜாவை வசைபாடுவதிலேயே பேரின வாதிகளுக்கு நேரம் போனதால், கல்கட் அவர்களது வசைகளில் இருந்து தப்பிவிட்டார்.

## அதிரடி அப்பாத்துரை



**யாழ்ப்பாணத்தில்** காவலரண் 'காதல் கோட்டைகள்' பற்றி ஏகப்பட்ட புகார்கள். சோதனை என்ற பெயரில் மாணவிகளின் குறிப்புப் புத்தகங்களை புரட்டி பெயர்களை பார்த்து வைக்கிறார்களாம். பின்னர் பெயர் சொல்லி 'அன்பாக' அழைத்து பழக்கமாகிறார்களாம். பார்த்தியளோ டெக்னிக்கை?!

**'குளிரூட்டப்பட்ட மினி சினிமா'** அரங்கு யாழில் திறக்கப் பட்டிருக்குதாம். மினி சினிமாக் காரரின் போட்டா போட்டியால், வில்லங்கமான படங்களும் ஆங்காங்கே காண்பிக்கப்படுகின்றன. கவனிக்க வேண்டிய பிரிவினர் கவனிப்பதாக தெரியவில்லை. இப்படியே போனால்தான் 'பொடியள் பொட்டையள் தங்களுக்கு பாதகமாக சிந்திக்க மாட்டினம்' என்று நினைக்கினமாக்கும் என்றும் நாலும் தெரிந்த மகாஜனங்கள் குசுகுசுக்கினம்.

**'மூன்றாம் தரப்பு'** மத்தியஸ்தம் தேவை என்று கூட்டான கட்சி சம்மந்தமானவர் வெகுஜன சபையில் முழங்கியதாக பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். அந்த முழக்கத்தில் உள்ள முரண்பாட்டை 'முரசு' சுட்டிக்காட்டியதையும் மறந்திருக்க மாட்டீர்கள். இப்போது விஷயம் வெளிச்சப் போச்சு. பக்கத்து நாட்டு 'ஜா'வை சந்தித்து 'அரசு, எதிர்த்தரப்பு, புலிகள்' ஆகிய முத்தரப்பு பேச்சுக்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டிருக்கினம் கூட்டான கட்சியினர். மூன்றாம் தரப்பாக தலையிடுமாறு தப்பித் தவறிக்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை கவனித்தீர்களோ? 'மூன்றாம் தரப்பு தேவையில்லை' என்று 'கதிரர்' அடித்துக் கூறிய பின்னர்தான் இந்த அடக்கி வாசிப்பாம்.

**மாதத்தில் ஒரு நாளாவது** வெளிநாட்டு விவகாரத்திற்கு பொறுப்பானவருடன் விருந்துண்ண செல்லுமளவுக்கு சம்பந்தமானவா நெருக்கமாம். வெளியுலகில் 'ரெண்டு எழுத்தாரை' எப்படிக் கையாள்வது என்று யோசனை சொல்வதும் ஞானப்பாலார்தானோ?!

**துரையப்பா விளையாட்டரங்கின்** பெயரை மாற்றுமாறு மாநகரசபை கூட்டத்திலே கழகம் கேட்டதைப் பாராட்டலாம். அதுக்கு கூட்டான கட்சி உறுப்பினர் கொடுத்த பதில் என்ன தெரியுமோ? 30 வருசமாக யாழுக்கு சேவை செய்தவர் துரையப்பா. அவர் பெயரை மாற்றுவதோ? என்றாராம். அடியடா படலையிலே என்டானாம். அதை அம்மணியும் கேட்டுக் கொண்டு இருந்திருக்கிறார். அது சரி அம்மணி அந்தக் காலத்தில் அரசியல் பக்கமே எட்டிப் பார்த்ததே கிடையாதல்லோ. வரக்கூடாத ஆட்கள் வந்தால் வரலாறுகள் உரு மாறும்தானே. அதுமட்டுமல்ல, துரையப்பாவை பற்றி இப்போது பேச அவைக்கும் கொஞ்சம் கூச்சம் இருக்கும்தானே ஹிஹிஹி.

**இலங்கை கிரிக்கெட் அணியினர்** வெற்றி மேல் வெற்றி குவித்தபோது, தங்கள் சொந்த அணிமாதிரியல்லோ முன்னணியினர் காட்ட நினைத்தவை. இப்போது அணியும் தோற்குது. புகார்களும் கிளம்புது. அதிகாரத்தரப்பில் ஒருத்தரும் ஆதரவாக, அனுசரணையாக நாலு வார்த்தை சொல்லவில்லையே. இதுதான் பாருங்கோ உலகம்.

**அயல்நாட்டு பிரமுகர்** சொன்ன நியாயமான கருத்துக்கூட அதிகாரத்தரப்பாருக்கு பிடிக்கவில்லைப் பார்த்தியளோ. இணைப்புப் பற்றி பேசியதாலதானே இந்த துள்ளல். இப்பவாயினும் எங்கள் கட்சிகளுக்கு உண்மை நிலை புரியேல்லை என்றால், இனிப் புரியவே 'சான்ஸ்' இல்லைப் பாருங்கோ.

**கொழும்புக்கு வெளியில்** இருந்து வரும் தமிழ் மக்கள் தங்க காற்றோட்டமுள்ள விடுதி அமைக்கப்படுமாம். செய்தியைப் பார்த்ததும் புல்லரிச்சுப் போனேன். நண்பர் விட்டார் ஒரு அறை. இரும்புக் கூண்டுக்கு பதிலாக தங்கக் கூண்டு. அதுதான் விஷயமப்பா. தடை முகாம் என்று சொல்லாமல் தங்கு விடுதி என்று இதமாகச் சொல்லுகினம் எண்டார். பார்த்தியளோ சனம் சகல தாற்பரியங்களையும் விளங்கி வைச்சிருக்குதுகள்.

**சபையில்** நீதிக்குப் பொறுப்பானவர் பாதிக்கப்பட்ட சனத்துக்கு ஆதரவாகப் பேசுவதற்கு பதிலாக, 'அட்வைஸ்' அல்லவோ செய்திருக்கிறார். சட்டத்துக்கு பொறுப்பான அதிபர் பதிவுத் துண்டு கேட்பதே சட்ட விரோதம் என்கிறார். நீதிக்கு பொறுப்பானவரோ துண்டு மட்டும் போதாது, விசேஷமான அட்டையும் வேணும்தான் என்கிறார். தாங்கள் குழம்புகினமோ, அல்லது எல்லோருமாகச் சேர்ந்து எங்களைக் குழப்புகினமோ? ஒரு இழவும் விளங்கேல்லை.

**இவ்வாரப் பொன்மொழி**

**"அன்பை அபகரிப்பதில்**
**திருடனாய் இரு!**
**அறிவைப் பெருக்குவதில்**
**பேராசைக்காரனாய் இரு!**
**முன்னேற முயற்சிப்பதில்**
**பிடிவாதக்காரனாய் இரு!**
**கர்வம் கொள்வதில்**
**கஞ்சனாய் இரு!**
**எதிர்ப்பை வெல்வதில்**
**முரடனாய் இரு!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

179

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

## ஈழப் பிரகடனமும் எச்சரிக்கையும்

வடக்கு-கிழக்கில் பொலிஸ் நிலையங்களை அமைக்கும் முயற்சிகளை புலிகள் தடை செய்தனர்.

புலிகளோடு பேச்சு நடத்திக் கொண்டு, சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை கவனிக்க என்று கூறி பொலிஸ் நிலையங்களை திறக்க முற்பட்டது அரசாங்கம்.

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையம் அமைக்க முற்பட்ட பொலிசாரை புலிகள் சுற்றிவளைத்தனர்.

'எங்கள் மக்களுக்கு உங்கள் பாதுகாப்பு தேவையில்லை. நாங்கள் இருக்கும் வரை உங்களுக்கு இங்கே வேலை இல்லை' என்று கூறி திருப்பி அனுப்பி விட்டனர்.

இத் தகவல்கள் உடனடியாக ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவுக்கும் பொலிஸ் தலைமையால் தெரிவிக்கப்பட்டன.

ரஞ்சன் விஜயரட்னாவுக்கு புலிகள் மேல் சந்தேகம்தான். இந்தியப் படை முற்றாக வெளியேறியதும் புலிகள் இலங்கைப் படையினரையும் எதிர்க்கக்கூடும் என்று ரஞ்சனுக்கு தகவல்கள் கிடைத்திருந்தன.



ஜனாதிபதி பிரேமதாசாவைவிட பாதுகாப்பு உயரதிகாரிகள், உளவுத்துறையினர் ஆகியோருக்கு அன்று ரஞ்சன்மேல்தான் ஈர்ப்பு அதிகம்.

அதனால் உளவுத் தகவல்கள் யாவும் உடனுக்குடன் ரஞ்சனை எட்டிக்கொண்டிருந்தன. ஆனாலும் பிரேமதாசாவின் விருப்பத்துக்கு மாறாக நடக்க ரஞ்சன் முயற்சிக்கவில்லை.

'இந்தியப் படை, 'றோ'வின் உளவாளிகள் ஆகியோரிடம் ஆயுதங்கள் இருப்பதால்தான் புலிகளும் ஆயுதம் வைத்திருக்கிறார்கள்' என்று ரஞ்சன் பேட்டியும் அளித்திருந்தார்.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தையின் போது பொலிஸ் நிலையம் அமைப்பது தொடர்பாகவும், புலிகளது தடைபற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

'வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தல் நடத்தப்படும் என்கிறீர்கள். தேர்தல் நடக்கட்டும். பின்னர் தமிழ் பேசும் பொலிஸ்படையை அங்கு பணியில் அமர்த்தலாம். இப்போது என்ன அவசரம்,பாதுகாப்புக்குத்தான் நாம் இருக்கிறோமே' என்று கூறிவிட்டனர் புலிகள்.

### குடியேற்றங்கள்

இலங்கை அரசுடன் பேச்சு நடத்திய போது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்பாக புலிகள் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா.

ஆட்சேபனை தெரிவிப்பதோடு மட்டும் நிற்கவில்லை, பேச்சு நடந்த காலத்தில் புதிய திட்டமிட்ட குடியேற்றங்கள் எதுவும் நடைபெறாமலும் பார்த்துக் கொண்டனர்.

1984ம் ஆண்டு மணலாறு பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழ்க் குடும்பங்களை மறுபடி அங்கு குடியமர்த்தவும் பிரேமதாசாவை ஒப்புக்கொள்ளச் செய்தனர் புலிகள்.

அன்றைய நிலையுடன் இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

இன்று சந்திரிக்கா அரசுடன் தமிழ்க் கட்சிகள் நட்புப் பாராட்டி வருகின்றன. பாராளுமன்றத்தில் தமிழ்க் கட்சிகளின் முண்டு கொடுப்பு இல்லையென்றால் அரசே கவிழும் நிலை தோன்றியுள்ளது.

அப்படி இருந்தும் பாராளுமன்ற தமிழ்க் கட்சிகளைக்கூட அரசு புறங்கையால் அலட்சியம் செய்தே வருகிறது.

தங்கள் சொந்த மண்ணைவிட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் அரசு-புலிகள் பேச்சு நடக்கையில் மீளவும் குடியமர்த்தப் பட்டனர்.

இன்றோ அரசுடன் தமிழ்க் கட்சிகள் நட்பாக இருக்கையில் திருமலையில் இருந்து தமிழ் மக்கள் அகதி முகாமுக்கு விரட்டப்படுகின்றனர். இத் தொடரை எழுதிக் கொண்டிருக்கையில் திருமலையில் உப்பாறு என்னும் தமிழ்க் கிராமத்தில் இருந்து நூறு தமிழ் பேசும்குடும்பங்கள் படையினரால் வெளியேற்றப்பட்டு, அகதி முகாமில் பரிதவித்தபடி இருக்கின்றனர்.

அவர்களது ஜீவனோபாயத்திற்குரிய கால் நடைகளைக்கூட கிராமத்தில் விட்டுவர நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட ஒரு மாதமாகியும்கூட இவ் விடயத்தில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் எவரும் வெளிப்படையாக தலையிட்டு கண்டிக்கவோ, பரிகாரம் பெற்றுக் கொடுக்கவோ முன்வரவில்லை.

அரசு, புலிகள் பேச்சுக்காலம் என்பது, அரசை புலிகள் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தது.

இன்று தமிழ்க் கட்சிகள் அரசு உறவு என்பது, தமிழ்க் கட்சிகளை அரசு தன் நோக்கங்களுக்கு ஏற்ப பயன்படுத்துவதாக இருக்கிறது.

### வெறும் துள்ளல்

மேற்கண்ட சுட்டிக்காட்டல்களை சிலருக்கு சகிக்கமுடியாமல் இருக்கிறது. 'புலிகளுக்கு சார்பாக போகிறீர்கள்' என்று முணு முணுக்கிறார்கள்.

உண்மைகளுக்கு புலிச் சார்பு என்று முன்னர் பேரினவாதிகள்தான் முத்திரை குத்தி வந்தனர். இப்போது சில தமிழ்க் கட்சி உறுப்பினர்களே முத்திரை குத்த ஆரம்பித்துள்ளனர்.

காரணம், இப்போது இவர்களும் உண்மைகளைக்கண்டு மிரளத் தொடங்கி விட்டனர். தங்கள் இயலாமைகள் அம்பலமாகிறதே என்பதால் பொய்களை இரசிக்க ஆவலுறுகின்றனர்.

அவர்கள் முடிந்தால் தங்கள் தங்கள் சாதிப்புக்களை எடுத்துக்காட்டட்டும். இத் தொடரில் கூறும் கருத்துக்களை மறுக்கட்டும். அதற்கு இடமளிக்க தயாராகவே உள்ளோம்.

இன்று,திருமலையில் தங்கள் சொந்தக் கிராமங்களைவிட்டு தமிழ் மக்களை விரட்டப்படுவதையிட்டு ஒரு மாதகாலகமாக தமிழ்க் கட்சிகள் மௌனம் அனுஷ்டித்துள்ளனர்.

அப்படியானால் தமிழ்க் கட்சிகள் அரசுடன் வைத்துள்ள உறவு எதன் அடிப்படையில் அமைந்தது? பயன்படுத்தலா? பயன்படுதலா? இதனைத்தான் சுட்டிக் காட்டுகிறோம், என்ன செய்வது, புலிகளின் செயற்பாடுகளைத்தான் முன்னுதாரணம் காட்ட வேண்டி இருக்கிறது.

முத்திரை குத்தும் முணு முணுப்பாளர்களுக்கு நாம் கூறுவது யாதெனில்; ஏனைய தமிழ்க் கட்சிகளின் முன்னுதாரணங்கள் ஏதாவது இருந்தால் தயவுகூர்ந்து ஆதாரத்தோடு சுட்டிக்காட்டுங்கள். இத் தொடரிலேயே பிரசுரிக்கிறோம்.

### சர்வகட்சி மாநாடு

தென்னிலங்கை கட்சிகள் உட்பட தமிழ்க் கட்சிகளும் பங்கு கொள்ளும் சர்வகட்சி மாநாடு கொழும்பில் ஆரம்பமானது.

14.02.1989ல் கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்தில் அம் மாநாடு ஆரம்பமானது.

"இனப்பிரச்சனைத் தீர்வுக்கு நாம் தயார், இனப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டியதே" என்றெல்லாம் முதன் முதலில் பேசியவர் இன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காதான் என்று சிலர் வரலாற்றை திரிபுபடுத்தி வருகின்றனர்.

தங்கள் அரச சார்பை நியாயப்படுத்த வேறு உதாரணங்கள் எதுவும் இல்லை என்பதால், சில தமிழ்க் கட்சித் தலைவர்களும்' 'இனப்பிரச்சனை உண்டு என்பதை முதலில் ஏற்றுக்கொண்டவர் ஜனாதிபதி சந்திரிக்காதான்' என்று கூறிவருகின்றனர்.

ஜனாதிபதி பிரேமதாசாதான் முதன் முதலில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதை நியாயப்படுத்தி பேசிய ஆட்சித் தலைவர். இனப்பிரச்சனையை தீர்க்கும் அவசியம் பற்றியும் இனிக்க, இனிக்கப் பேசியவரும் அவர்தான்.

இனப்பிரச்சனை தீர்வை இழுத்தடிக்கக்கூடிய விதமாக சர்வகட்சி மாநாடு, பாராளுமன்ற தெரிவுக்குழு, தீர்வுபற்றிய நாடு தழுவிய விவாதம் போன்ற தந்திரங்களை அறிமுகம் செய்த பெருமையும் அவரையே சேரும்.

இனப்பிரச்சனை முதல் நாட்டில் வேலை நிறுத்த பிரச்சனைவரை கையாள்வதற்கான முன்னுதாரணங்களை ஐக்கிய தேசிய ஆட்சிக் காலத்தில் இருந்தே இன்றைய ஆட்சி இரவல் வாங்கியுள்ளது.

சர்வகட்சி மாநாட்டை கூட்டப்போவதாக பிரேமதாசா அறிவித்தபோதே புலிகளுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

இழுத்தடிப்பு விளையாட்டுத்தான் என்று தெரிந்துவிட்டது.

ஆனாலும் இந்தியப் படை முற்றாக வெளியேறும்வரை அரசுடன் பேச்சை முறித்துக் கொள்வானேன்? என்று நினைத்தனர்.

"சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளராக மட்டுமே பங்கு பற்றுவோம்" என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கூறி விட்டது.

புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. இ.தொ.கா. ஆகிய தமிழ்க் கட்சிகள் மாநாட்டில் பங்குகொள்ள முன்வந்தன.

ஈ.பி.டி.பி.யின் பெயர் அப்போதுதான் கொழும்பில் படிப்படியாக பிரபலமாகிக் கொண்டிருந்தது.

ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்குமாறு புலிகள் விடுத்த கோரிக்கையை அப்போது ஆதரித்த ஒரே ஒரு தமிழ்க் கட்சி ஈ.பி.டி.பி. தான்.

ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவதை வலியுறுத்தி ஈ.பி.டி.பி. பத்திரிகைகளுக்கு அறிக்கையும் வெளியிட்டிருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ ஆகிய இயக்கங்கள் அப்போது கடுமையான புலி எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்தன. அதனால் ஆறாவது சட்டத்திருத்த விடயத்தில் ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாட்டை புலி ஆதரவு

## அகற்றப்பட்ட கொடிகள்



நிலைப்பாடு என்று அக்கட்சிகள் கூறின.

புலிகளுடன் பிரச்சனை இருந்தாலும் புலிகளை பகிரங்கமாக எதிர்ப்பதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே புளொட், ஈ.பி.டி.பி. இயக்கங்கள் அன்று செயற்பட்டன.

கொழும்பில் பாதுகாப்புக்கு எவ்வித ஆயுதம் இன்றியே ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்களான சந்திரகுமார் (அசோக்), திலக், ஆனந்தன் போன்றோர் கட்சி வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது ஈ.பி.டி.பிக்கு புலிகளைவிட ஈ.பி.ஆர்.எல்.எஃப்.தான் பிரச்சனை. ஈ.பி.ஆர்.எல்.எஃப்மீதான புலிகளின் தாக்குதல்களை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் இயலாமை என்றே ஈ.பி.டி.பி. விபரித்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு முழுமையான தீர்வல்ல. எனினும் தீர்வின் முதற்படியாகவும், அமெரிக்காவை இப் பிராந்தியத்தில் தலையிடாமல் தடுக்கிறது என்பதாலுமே ஒப்பந்தத்தை வரவேற்கிறோம்' என்பதே ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி. இரண்டும் ஒப்பந்தம் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களாகும்.

எனினும் பின்னர் ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்தியா தொடர்பான நிலைப்பாட்டை ஈ.பி.டி.பி. முற்று முழுதாக ஆதரித்தது. 'நமது பிரச்சனையை நமக்குள் தீர்க்கும் உங்கள் முயற்சியை வரவேற்கிறோம்' என்று ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஈ.பி.டி.பி. அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு பிடித்துவிட்டது.- அதனால் ஈ.பி.டி.பி. தலைவர்களை சந்தித்துப் பேச சம்மதித்தார்.

அப்போது ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் நடராசா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் சென்னையில் இருந்தனர்.

அவர்கள் உடன் கொழும்பு வரு வது என்றால் கடவுச் சீட்டும் கிடையாது. ஈ.பி.டி.பி.யினர் உருப்பட மாட்டார்கள் என்று கருதி வெளிநாடுகளில் இருந்த முன்னாள் உறுப்பினர்களில் ஓரிருவர் தவிர வேறு யாரும் அவர்களுக்கு உதவவும் முன்வரவில்லை.

இறுதியாக கடனாக பெற்ற பணத்தில், போலிக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

விமான நிலையத்தில் வைத்து சிலர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டோர் சார்பாக அப்போது வாதாடியவர் இன்றைய அமைச்சரான பிரபல சட்டத்தரணி ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே. கட்சி என்பதால் குறைந்த ஊதியமே பெற்றுக் கொண்டார்.

கொழும்பு வந்ததும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் நடராஜா, சந்திரகுமார் ஆகியோர் ரெலோ, புளொட் இயக்கங்களைச் சந்தித்தனர்.

ஆறாவது சட்டத் திருத்தம் தொடர்பான பொது நிலைப்பாட்டை உருவாக்க முனைந்தனர்.

எனினும் புளொட் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அதற்கு ஆதரவளிக்கவில்லை.

"புலிகள் முன்வைத்த கோரிக்கையை ரெலோ ஆதரிக்கமாட்டாது" என்று சட்டத்தரணி ஸ்ரீ காந்தா ஈ.பி.டி.பியிடம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களது தங்கு விடுதியாக அப்போதிருந்த சிராவஸ்தியில் மட்டக்களப்பு பா.உ கருணாகரனின் அறையில் வைத்தே அச் சந்திப்பு நடைபெற்றது.

எனினும் காலப்போக்கில் சட்டத்தரணி ஸ்ரீ காந்தா புலிகள் தொடர்பான தம் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். 'புலிகளுடன் பேசிப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டும்' என்பதே தற்போது ரெலோவின் நிலைப்பாடாக இருக்கிறது.

1990ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருமலையில் ரெலோ தலைவர்களில் ஒருவரான சிவாஜிலிங்கத்தை பின்வருமாறு அறிமுகம் செய்தார் சட்டத்தரணி ஸ்ரீ காந்தா. "தம்பி பிரபாகரன் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையில் பிறந்தவர் தம்பி சிவாஜிலிங்கம்."

### சுதந்திரதினக் கொண்டாட்டம்

விடுதலைப் புலிகள் அரசுடன் பேசிக் கொண்டிருந்தபோதும், தந்திரத்துக்காகக்கூட ஒத்துழைக்க மறுத்த நிகழ்வுகளில் ஒன்று சிறீலங்காவின் சுதந்திர தினம்.

வடக்கு-கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் அரச அலுவலகங்களில் பறக்கவிடப்பட்ட சிங்கக் கொடிகள் புலிகளால் அகற்றப்பட்டன. பொதுமக்கள்தான் அவற்றை அகற்றினார்கள் என்று கூறினர் புலிகள்.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் சுதந்திர தின வைபவங்கள் எதுவும் நடைபெறவும் இல்லை.

இந்தியப் படை வெளியேறிய பகுதிகளுக்கு புலிகளது பிரதித் தலைவர் மாத்தையா விஜயம் செய்தார்.

மட்டக்களப்பிலும், வவுனியா நகரிலும் புலிகளின் மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த கூட்டங்களில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசுடன் தாம் பேச்சு நடத்துகிறோம் என்பதற்காக அரசை பாராட்டியோ, அரசுமீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாகவோ புலிகள் மட்டுமன்றி, புலிகளது ஆதரவாளர்கள் கூட கூட்டங்களில் கருத்து வெளியிட வில்லை.

இதற்கிடையே வடக்கு-கிழக்கு மாகாணசபையில் 'ஈழப் பிரகடனம்' செய்ய முடிவெடுத்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

மாகாணசபைக் கூட்டத்தில் பிரேரணை கொண்டுவரப்போவதாக அறிவித்தது.

'அது ஒரு கேலிக்கூத்து' என்று நிராகரித்தது ரெலோ இயக்கம். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்துடன் நட்பாக இருந்த போதும், 'ஈழப் பிரகடனம்' என்பது சாத்தியமில்லாத ஒன்று எனக்கூறி எதிர்ப்புத் தெரிவித்தது ரெலோ.

'இந்தியாவின் உளவுப் பிரிவான 'றோ'வும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கமும் இணைந்து ஆடும் 'கேலிக்கூத்து' என்று புலிகள் கருத்து வெளியிட்டனர்.

'ஈழப் பிரகடனம்' என்பதற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்குள்கூட அத்தனை வரவேற்பு இருக்கவில்லை.

'நாங்களே மூட்டை முடிச்சுக் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த இலட்சணத்தில் ஈழப்பிரகடனம் செய்துவிட்டு ஓடினால் நகைப்பிற்கிடமாகிவிடும்' என்று இயக்க முக்கியஸ்தர்கள் பலர்கூட நினைத்தனர்.

ஆனால் வரதராஜப் பெருமாள் வரலாற்றில் தன் பெயரைக் குறிப்பதில் ஆர்வமாக இருந்தார்.

அவர் சொன்னார்: "இனி ஈழம் கிடைத்தால்கூட, முதலில் இங்கே ஈழத்தை பிரகடனம் செய்தவன் என்ற என் பெயரை அழிக்க முடியாது!"

### எச்சரிக்கையும் ஓட்டமும்

திருமலையில் இருந்து வெளியேறுவதுதான் பாக்கி. ஏனைய பகுதிகள் அனைத்தில் இருந்தும் ஈ.பி.ஆர். எல்.எஃப். வெளியேறி இருந்தது.

திருமலையில் இருந்து இந்தியப்படை புறப்பட முன்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர்கள் உட்பட முக்கிய உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினரை இந்தியாவுக்கு கொண்டு சேர்க்க வேண்டும்.

இந்திய அரசின் கப்பல் வந்து சேர்ந்தது.

மூட்டை முடிச்சுக்களை எல்லோரும் வேகமாக கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் குடும்பத்தினரும் புறப்பட ஆயத்தமாகின்றனர். வரதராஜப் பெருமாளும் கிளம்பத் தயாராகிறார்.

அப்போது அங்கிருந்த தொலைபேசி மீது அவர் பார்வை திரும்புகிறது.

அத் தொலைபேசி மூலம் கொழும்பு பத்திரிகை அலுவலகங்களுடன் வரிசையாக தொடர்பு கொள்ளுகிறார்.

"குறிப்பிட்ட காலவரையறைக்குள் போதிய அதிகாரங்களை இலங்கை அரசு வழங்காவிட்டால், வடக்கு-கிழக்கின் இறைமையை மாகாணசபை பொறுப்பு ஏற்கும். ஈழ அரசாக மாறும். இதுதான் இறுதிச் சந்தர்ப்பம். இலங்கை அரசை எச்சரிக்கிறோம். நஷ்டம் அவர்களுக்குத்தான்!"

தொலைபேசியை வைத்துவிட்டு மாகாணசபைக்கு கும்பிடு போட்டுவிட்டு போகிறார் வரதராஜப் பெருமாள்.

அன்று போனவர் போனவர்தான், இன்றுவரை திரும்பவே இல்லை.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# அமெரிக்காவின் புகழாரங்கள் கிழிந்துவிழும் முகமூடிகள்

ஐ.நாவுக்கான அமெரிக்க பிரதிநிதி பில் ரிச்சாட்சனின் தெற்காசிய விஜயத்தில் கொழும்புக்கான விஜயம் முக்கியமானதாக இடம்பெற்றிருந்தது.

தெற்காசியாவில் தனது கால்களை ஆழமாக ஊன்றிக்கொள்ள பாகிஸ்தானை அடுத்து அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ள நாடு இலங்கையாகும்.

**இங்குள்ள இனப்பிரச்சனையில் அரசுக்கு உதவுவது என்ற ரீதியிலும், உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான தமது திட்டத்தின் ஒரு அம்சம் என்ற போர்வையிலும் இலங்கைக்குள் தனது பிடியை இறுக்கமாக்குவதே அமெரிக்காவின் நோக்கமாக அமைந்துள்ளது.**

தென்னாசியாவில் தனது வல்லாதிக்கம் ஓங்குவதற்கு பிரதான தடைக்கல்லாக இருக்கும் இந்தியா ஸ்திரமாக இல்லாமல் இருப்பதும், தன்னை சுற்றி நடக்கும் மாற்றங்களையிட்டு கவனம் செலுத்த முடியாமல் இருப்பதும் அமெரிக்காவுக்கு இனிப்பான காட்சிகளாகவே இருந்தன.

இந்திய அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளும் அமெரிக்காவுக்கே வாய்ப்பாக இருக்கின்றன.

இந்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிடாமல் தள்ளியே நின்றுகொண்டிருக்க, அந்த வெற்றிடத்திற்குள் அமெரிக்கா புகுந்து கொண்டது.

**இலங்கை அரசுக்கு உதவினால் புலிகளுக்கு உதவுவதாக சோனியாவும், காங்கிரசும் கூச்சலிடும், இலங்கை அரசுக்கு உதவினால் தமிழ்நாட்டில் அதன் எதிரொலிகள் எழக்கூடும் என்ற இரு தலைக் கொள்ளி எறும்பு நிலையில்தான் இலங்கை தொடர்பான இந்திய அரசின் கொள்கை அமைந்திருந்தது.**

அதனை சாதகமாகக்கொண்டு இலங்கை அரசை ஆரத்தழுவி தன் செல்லப்பிள்ளையாக்கிக் கொண்டுள்ளது அமெரிக்கா.

தன் செல்லப் பிள்ளையான இலங்கை அரசை மகிழ்ச்சிப்படுத்த அமெரிக்கா மேற்கொண்ட காரியமே புலிகளை பயங்கரவாத இயக்கமாகக் கருதி தடை செய்தமையாகும்.

இந்திய- இலங்கை ஒப்பந்தம் மூலம் இலங்கையில் அமெரிக்க தலையீட்டுக்கு இந்திய அரசு முற்றுப்புள்ளி வைத்திருந்தது. இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே தெற்காசிய பிராந்தியத்தில் நடைபெறும் ஆதிக்கப்போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த வெற்றியே அதுவாகும்.

**அந்த ஒப்பந்தத்தால் இலங்கைத் தமிழர்கள் தங்கள் இலட்சியத்தில் வெற்றி பெறாவிட்டாலும், இந்திய அரசு தனது நலனைப் பேணுவதிலும், அமெரிக்காவின் முகத்தில் கரிபூசுவதிலும் வெற்றி பெற்றிருந்தது.**

ஆனால், அதன் பின்னர் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் இலங்கை விவகாரங்களில் தர்மவான், நீதிமான் போலவும், எந்தப் பிசாசுடன் சேர்ந்தும் போரில் வெற்றி பெறும் வெறியோடு உள்ள இலங்கை அரசுக்கு உதவிக்கொண்டும் மூக்கை நுளைப்பதில் அமெரிக்கா தற்போது வெற்றி பெற்றுள்ளது.

இலங்கையில் தமிழ்பேசும் தரப்பை பலவீனமாக்கும் இராணுவத்தீர்வு முயற்சிக்கும், அந்த முயற்சிக்கு சர்வதேச கண்டனம் எற்படாமல் தடுத்து நிற்கும் கேடயமான பொதி ஆரவாரங்களுக்கும் அமெரிக்கா முற்று முழுதான ஆதரவை வழங்கி வருகிறது.

**இலங்கையின் இன்றைய ஆட்சியாளரின் அரசியல் எதிர்காலம் போரின் வெற்றி தோல்வியிலேயே தங்கியுள்ளது என்பதை அமெரிக்காவின் வெளியுறவுத் துறை நன்கு அறிந்துள்ளது. அத்தகைய அபிலாசைக்கு உதவுவது மூலமே இலங்கை அரசை தன் விசுவாசமான கூட்டாளியாக மாற்றிக் கொள்ளலாம் என்றும் திட்டமிட்டே இலங்கை தொடர்பான தனது கொள்கைகளை முன்னெடுத்து வருகிறது.**

தென்னாசியாவில் அமெரிக்காவுக்கு வில்லன் இத்தியாதான். இராஜதந்திரம் கருதி தனது வில்லனுடன் இடைக்கிடையே கைகுலுக்கிக் கொள்வதும், புன்னகை புரிவதும் உண்டென்றாலும்கூட, இந்தியாவை பலவீனமாக்கும் காரியத்தில் அமெரிக்கா குறியாகவே இருக்கிறது.

இந்தியாவும் அமெரிக்காவை பொதுநல நோக்கத்தோடு, தென்னாசியாவின் நலன்களுக்காக எதிர்க்க நினைக்கிறது என்று அர்த்தமாகாது.

**தெற்காசியாவில் அசைக்க முடியாத வல்லரசாகும் எண்ணம் இந்தியாவுக்கு இருக்கிறது. அப்படி வல்லரசாக இருந்தால்தான் தென்னாசியாவில் உள்ள பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் அச்சுறுத்தல்களில் இருந்தும் தப்பிக்கக் கூடியதாக இருக்கும்.**

இந்திய-பாகிஸ்தான் உறவுகளை வளர்ப்பதில் அக்கறை போன்றும், பாகிஸ்தானுக்கு புத்தி சொல்வதுபோன்றும்கூட அமெரிக்கா இடைக்கிடையே நாடகம் ஆடுவதுண்டு. இவை இந்திய மக்களிடையே இருக்கின்ற அமெரிக்க எதிர்ப்புணர்ச்சியை தணிக்கின்ற முயற்சிகளாகவே விளங்கியுள்ளன.

**எனினும், காஷ்மீர் விவகாரத்தில் இந்திய அரசின் கொள்கைக்கு முரணாக கருத்துக் கூறியமை, இந்தியாவை அணு ஆயுத நடை ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுமாறு வலியுறுத்தியவை போன்ற சந்தர்ப்பங்களில் அமெரிக்கா தவிர்க்க முடியாமல் தன் சுயரூபத்தை வெளிப்படுத்தி இருந்தது.**



நலன்சார் நட்பு

**இதில் இன்னொரு விடயமும் சுட்டிக்காட்டப் படவேண்டியதாகும். சமீபத்தில் கொழும்பு வந்த பில் ரிச்சாட்சன். 'இலங்கை அரசு விரும்பினால் மத்தியஸ்தம் செய்யத் தயார்' என்று கூறியிருந்தார்.**

**ஆனால், இந்தியாவில் காஷ்மீர் விவகாரத்தில் இந்திய அரசு கோராதபோதே, "மத்தியஸ்தம் வகிக்க தயார்" என்று பில் கிளின்ரன் அறிவித்திருந்தார். அதனை இந்திய அரசு வன்மையாக கண்டித்திருந்தது.**

தென்னாசியாவில் உள்ள நாடுகளுக்கிடையேயும், நாடுகளுக்குள்ளேயும் இருக்கின்ற பிரச்சனைகளை தனது வல்லாதிக்க நலனுக்கு ஏற்ப கையாளவே அமெரிக்கா முனைவதால்தான், மேற்கண்ட முன்னுக்குப் பின் முரணான கொள்கைகளும், கருத்துக்களும் வெளிப்படுகின்றன.

எனவே, எவ்வாறெனினும் இந்தியாவை பலவீனமாக்கும் அமெரிக்கக் கொள்கைக்கு சமீபத்திய இந்திய அரசியல் மாற்றம் ஒரு சவாலாகவே அமைந்திருக்கிறது.

**எனவே, இந்தியாவின் புதிய அரசாங்கத்துக்கு ஒருபுறம் வாழ்த்துத் தெரிவித்தபடியே, தென்னாசியாவில் இந்தியாவின் பலத்தையும், பாத்திரத்தையும் குறைக்கும் முயற்சிகளையும் திரைமறைவில் முடுக்கிவிட்டுள்ளது அமெரிக்க வெளியுறவுத் துறை.**

பாகிஸ்தான் மேற்கொண்ட அணு ஆயுத சோதனைகூட அமெரிக்காவின் தூண்டிவிடுதலேயாகும். மறைமுகமாக தூண்டிவிட்டபடியே, வெளிப்படையாக கண்டிப்பதும் நீண்டகாலமாக அமெரிக்கா கையாண்டுவரும் தந்திரமாக விளங்குகிறது.

இலங்கையில் யுத்தத்தை சாக்காக வைத்து தலையிடும் தனது தந்திரத்துக்கும் புதிய ஆட்சியால் இடையூறு நேருமோ என்று அமெரிக்கா நினைக்கிறது.

**இதற்கிடையே கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு இலங்கைக்கான இந்திய முன்னாள் தூதரும், பாரதிய ஜனதா அரசின் வெளியுறவு கொள்கை வகுப்பாளரில் முக்கியமானவருமான திரு. நாகேந்திர நாத் ஜா பேட்டியளித்திருந்தார்.**

இப் பேட்டியும் அமெரிக்க தூதரகம் ஊடாக அமெரிக்காவின் வெளியுறவுத்துறைக்கு சூட்டோடு சூடாக அனுப்பிவைக்கப்பட்டதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

**"வடக்கு-கிழக்கு இணைந்த அரசியல் தீர்வொன்றையே இந்தியா விரும்புகிறது" என்றே திரு. ஜா திட்டவட்டமாக தெரிவித்திருந்தார். இக் கூற்றானது இலங்கை ஆட்சியாளரின் இன்றைய பொதிக்கும், அதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் தாயகப் பிரிப்புத் திட்டத்துக்கும் ஏற்புடையதல்ல.**

இன்றைய ஆட்சியாளரின் தீர்வுப் பொதி கனம் குறைந்தது என்பதை கூறாமல் கூறியதாகவே திரு.ஜாவின் கருத்து அமைந்திருந்தது.

**திரு. ஜாவின் பேட்டியைக் கண்ணுற்ற அமெரிக்க வெளியுறவுத்துறை இலங்கை விவகாரத்தில் இந்தியா மறுபடி கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதன் அறிகுறியாக அதனை எடுத்துக்கொண்டது.**

அதேசமயம் திரு. ஜா கூறிய கருத்து இலங்கை அரசுக்கு கசப்பான ஒன்றே என்பதும் அமெரிக்காவுக்கும் தெரியும்.

**தற்போதுள்ள தீர்வு யோசனையைவிட ஒரு படிமேலேறக்கூட முடியாத நிலையில் அரசு இருப்பதையும், மேற்கொண்டும் பொதியில் குறைப்புச் செய்ய முடியுமே தவிர, கூட்டித் தரும் எண்ணமே இல்லை என்பதையும் அமெரிக்கா நன்றாக நாடி பிடித்து அறிந்து வைத்திருக்கிறது.**

இத்தகைய பொதியை தமிழரிடம் திணிப்பதற்கும், புலிகளை வென்ற சாதனையை சொல்லி வாக்குக் கேட்பதற்கும் போர் தவிர வேறு வழியில்லை என்பதே இலங்கை அரசின் திட்டவட்டமான நிலைப்பாடாகும்.

இந்தியா இராஜதந்திர ரீதியில் நிர்ப்பந்தித்தால் மட்டுமே தவிர்க்க முடியாமல் இலங்கை அரசு தன்முடிவை தளர்த்த வேண்டி ஏற்படும். அப்படி ஒரு கட்டம் வருமானால் இலங்கை விவகாரத்தில் மறுபடி இந்தியாவின் பாத்திரம் மேலோங்குவதுடன், அமெரிக்காவின் முகத்தில் மீண்டும் கரிபூசப்படலாம்.

**ஆகவே, இந்தியாவின் இராஜதந்திர நிர்ப்பந்தம் ஏற்படுமானால் இலங்கை அரசு பணியத் தேவையில்லை என்ற நம்பிக்கையை கொடுக்கும் விதமாக, தனது கருத்துக்களை வெளியிட முடிவு செய்தது அமெரிக்க வெளியுறவு அமைச்சு.**

இதுவரை இலங்கை அரசை அளவுக்குமீறிப் புகழாமல் அமெரிக்கா தவிர்த்தே வந்தது. அதன்மூலம் தன்னை ஒரு நடுநிலையாளர்போல காண்பிக்க முனைந்தது.

**ஆனால், பிற்போக்கான சக்திகளின் வெளிவேசங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தின்பின் அம்பலமாகிவிடும் என்பதனையும், தங்கள் சுயரூபங்களை தாங்களே வெளிப்படுத்தும் விதமான நிர்ப்பந்தங்கள் ஏற்படும் என்பதையுமே வரலாறு நமக்கு உணர்த்தி நிற்கிறது.**

இந்தியாவின் இராஜதந்திர நிர்ப்பந்தங்களுக்கு பணிந்து, இந்தியாவின் சொற்படி இலங்கை அரசு நடந்து கொள்வதை தடுக்கும் அவசரத்தில் அமெரிக்காவின் நடுநிலை முகமூடி கிழிந்துள்ளது, இலங்கை அரசையும், ஜனாதிபதி சந்திரிக்காவையும் ஒரேயடியாக புகழ்ந்து தள்ளியிருந்தார் அமெரிக்க பிரதிநிதி.

**ஜனாதிபதி சந்திரிக்கா ஆதர்ஷ தலைவி என்றும், அவரது அரசியல் தீர்வு முயற்சிகள் காத்திரமானவை என்றும் பில் ரிச்சாட்சன் கூறியிருந்தார். திரு.ஜா கூறிய கருத்துக்களுக்கு பதிலடியாகவே பில் ரிச்சாட்சனின் கூற்று அமைந்துள்ளது. தமிழ்பேசும் தாயகத்தை கூறுபோடும் தீர்வுப் பொதியை காத்திரமானதென்று பில் ரிச்சாட்சன் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்.**

அரசின் இராணுவத் தீர்வு முயற்சியில் ஒரு பங்காளியாக திகழும் அமெரிக்காவின் பிரதிநிதி, புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்றும் கோரியிருந்தார்.

அதுமட்டுமன்றி இலங்கை அரசை குளிர்விக்கும் அவசரத்தில், 'மனித உரிமைக் காவலர்' என்று தான் அணிந்துள்ள முகமூடியையும் அமெரிக்கா கழற்றிப் போடவேண்டியதாகிவிட்டது.

**யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரத்தில் ஜனாதிபதி தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மிகத் தவறான, உண்மைக்கு மாறான கருத்தையும் அவர் கூறியிருந்தார். இலங்கை அரசின் பிரதிநிதி ஒருவர் பேசுவது போலவே அவர் வெளியிட்ட கருத்துக்கள் அமைந்திருந்தன.**

பயங்கரவாதம் பற்றிப் பேசிய பில் ரிச்சாட்சன் யாழ் குடாநாட்டில் நிகழ்ந்த மாபெரும் அரச பயங்கரவாதத்திற்கு வக்காலத்து வாங்கியிருந்தார்.

**இவையெல்லாம், இலங்கை இனப்பிரச்சனையையும், போரையும் பயன்படுத்தி, இலங்கை அரசை தன் கைக்குள் போட்டுக்கொண்டு, தென்னாசியாவில் தனது வல்லாதிக்கத்தை நிலைநாட்டும் திட்டத்தில் இலங்கையையும் ஒரு கருவியாக மாற்றும் அமெரிக்காவின் இரகசிய தந்திரத்தையே புலப்படுத்தியுள்ளன.**

அமெரிக்காவின் இத்தகைய நிலைப்பாடு தமிழர் தரப்பை பலவீனப்படுத்தும் புதிய பேரினவாதத்தின் சூழ்ச்சிகளுக்கு துணைபோவதாகவே அமைந்துள்ளன.

ஆனால், இது ஒன்றும் புதுமையல்ல, அமெரிக்கா உலகில் யாரை மனம் திறந்து புகழ்கிறதோ, யாருக்கெல்லாம் மனம் மகிழ்ந்து ஆதரவு அளிக்கிறதோ அத்தகைய சக்திகள் மக்களால் வரவேற்கப்படுகின்ற சக்திகளாக இருந்ததில்லை.

**அமெரிக்கா ஆதரவு கொடுத்த சக்திகளும் இறுதியில் தோல்விகளையே தழுவியுள்ளன. இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனர்களுடன் பேசுவதற்கு சம்மதம் தெரிவித்தமைகூட, அமெரிக்க உதவி இருந்தும்கூட, பாலஸ்தினியர்களை முற்றாக இன ஒழிப்பு செய்யவோ, அவர்களது போராட்டத்தை ஒடுக்கி அழிக்கவோ முடியாமல் போயிருந்தமையால்தான்.**

தம்மால் பயங்கரவாதி என்று வர்ணிக்கப்பட்ட யாசீர் அரபாத்தை தேடி அமெரிக்கா போய் மத்தியஸ்தம் செய்ததே தவிர, அரபாத் சென்று அமெரிக்காவிடம் மண்டியிடவில்லை.

இலங்கையிலும் அமெரிக்கா சில பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியே இருக்கும்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதைதான் நடந்திருக்கிறது. "நாங்களும் உங்களுக்காக என்னமாய் குரல் கொடுக்கிறோம் பாருங்கள்!" என்று தமிழ் மக்களுக்கு காண்பிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி காட்டிய சாணக்கியம்தான் பாராளுமன்ற விவாதம்.

இந்த விவாதத்தில் ஏனைய வடக்கு-கிழக்கு தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொண்டுவிடக்கூடாது என்பதில் கூட்டணி மிகக் கவனமாக இருந்தது.

"அரைமணி நேரம்தான் விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பராவும், சம்பந்தனும் பேசுவர். பின்னர் அரச தரப்பு சார்பாக பதில் தரப்படும். அதற்கே நேரம் போதாது!" என்று ஈ.பி.டி.பி., புளொட் பா.உக்களிடம் கூட்டணி பா.உக்கள் கூறினார்களாம்.

ஆனால் ஒருமணி நேரம் விவாதத்துக்காகக் கொடுக்கப்பட்டது. ஐ.தே.கட்சி, இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் பா.உக்களும் விவாதத்தில் கலந்துகொண்டனர். தங்கள் அரசியல் இலாபத்துக்கு போட்டியான வடக்கு-கிழக்கு தமிழ்க்கட்சிகளின் பா.உக்களை மட்டும் காய் வெட்டி விட்டனர் கூட்டணியினர்.

அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டிருந்தாலும் ஏதோ வெட்டிக் கிழித்திருக்கப் போவதில்லை; ஆனால், கூட்டணியினர் கொழும்பு கைதுகள் விடயத்தில் பாராளுமன்ற விவாதம் கோரியது முழுக்க முழுக்க சுயநல அரசியல் என்பதற்கும், அடுத்த தேர்தலுக்கான வாக்குச் சீட்டு வியாபாரத்துக்கான விளம்பரம் தேடவே என்பதற்கும் அது ஒரு உதாரணம்; அவ்வளவுதான்.

அதுவும் சரிதான், தங்கள் முயற்சியால் ஈ.பி.டி.பி.புளொட் ஆகிய கட்சிகளுக்கு விளம்பரம் தேடிக் கொடுக்கவேண்டும் என்று கூட்டணிக்கு அவசியமா என்ன?

ஆனால், அரசுக்கு 'நல்ல அரசு' என்று விளம்பரம் தேடிக்கொடுத்து தொலைத்து விட்டார்களே. எதிர்த்தரப்பு சட்டவாதி புகுந்து விளையாட வசதியாகவன்றோ தமிழ்த் தரப்பு சட்டவாதிகள் களம் அமைத்து கொடுத்தனர்!

விசேஷ அடையாள அட்டை கொடுத்தால் பிரச்சனை தீர்ந்துவிடுமாம்! யாழ் குடா நாட்டில் பகுதிக்கு பகுதி தனியான விசேஷ அட்டை கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியிருந்தும் சுற்றிவளைப்புக்கள், கைதுகள் அங்கு நடக்காமல் இல்லையே!

**அத்தனை ஏன்- தேசிய அடையாள அட்டையின் மேல் மூலையில் இலக்கக் குறியீடு இருக்கிறதல்லவா? அதனை வைத்து இவர் யாழ் தமிழரா, கொழும்பில் வாழும் தமிழரா, மலையகத் தமிழரா என்றெல்லாம் இனம் காணக்கூடியதாகத்தானே இருக்கிறது. பின்னர் ஏன் விசேஷ அடையாள அட்டை?**

பொலிஸ் பதிவுப் பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்றவற்றை 'புலிகளும் எடுத்துக் கொண்டு புகுந்துவிடுகிறார்கள் என்றால், விசேஷ அடையாள அட்டை பெறுவது மட்டும் அவர்களுக்கு சிரமமாகவா இருக்கப்போகிறது?

கொழும்பு வாழ் தமிழர்கள் கண்காணிப்புக் குழுக்களை அமைத்தால், அப்பாவிகளை உத்தரவாதப்படுத்தி விடுதலை செய்விக்கலாமாம்!

**தமிழர்களையே தமிழர்களுக்குள் சந்தேகம் கொள்ளவைத்து, கொழும்பு தமிழர், மலையகத் தமிழர் வடக்கு-கிழக்கு தமிழர் என்று வேறுபாடுகளைத் தூண்டிவிடும் முயற்சி இது.**

கொழும்புக் கைதுகளின்போது, மதகுருமார் விடயத்தில் கூட்டணித் தலைவர் சிவா முதற்கொண்டு சகல தமிழ்க் கட்சிகளும் அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டும் கூட தேசிய புலனாய்வுதுறை அறிக்கை கிடைத்த பின்னரே விடுதலையாக்கினர்.

பல ஆண்டுகள் கொழும்புத் துறைமுகத்தில் பணியாற்றிய பொறியியலாளர்கூட புலிகளுக்கு தகவல் கொடுப்பவர் என்ற சந்தேகத்தில் கைதானார். இப்படி ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது.

இந்த இலட்சணத்தில் கொழும்பில் கண்காணிப்புக் குழு அமைக்கும் தமிழர்களை மட்டும் எப்படி அரசும், படைகளும் நம்புமா?!

எனவே, கண்காணிப்புக்குழு என்ற சம்பளமில்லாத உத்தியோகத்தில் தமிழர்கள் சிலரை வைத்திருந்து தமிழர்களுக்குள் சிண்டு முடிந்துவிடும் திட்டம்தான் இது!

இன்னொரு காரணமும் இருக்கிறது.

### தமிழர்களையும் பல கூறுகளாக பிரிக்க ஆசை?

பலசந்தர்ப்பங்களில் இன்றைய அரசின் பேச்சாளர்போல செயற்படும் திரு. சிவசிதம்பரம் அவர்களைவிட, இன்று அரசை ஆதரிக்கும் தமிழ்க் கட்சித் தலைவர்களைவிட இந்த அரசுக்கு வேறு நம்பகமான தமிழர்கள் யார் இருக்கிறார்கள்? அவர்கள் கூறியே அப்பாவிகள் என்று நம்பாதபோது, கண்காணிப்புக்குழுக்கள் கூறியா விடுதலை செய்யப் போகிறார்கள்?!

பாதுகாப்பு பிரிவுகள், பொலிஸ்துறை போன்றவற்றில் உள்ள தமிழர்களை சந்தேகத்தில் இடமாற்றம் செய்துகொண்டும், சாதாரண சிவில் நிர்வாக அலுவலகங்களில் உள்ள தமிழர்களைக்கூட சந்தேகப் பார்வை பார்த்துக்கொண்டும், கைது செய்து கொண்டும் இருக்கின்றனர்.

கொழும்பில் நீண்டகாலம் வசிக்கும் தமிழர்களுக்குத்தான் கொழும்பில் வாக்களிக்கும் தகுதி உண்டு.

கொழும்புக் கைதுகளால் மாகாண சபைத் தேர்தலில் மட்டுமன்றி எதிர்வரும் சகல தேர்தல்களிலும் தமிழர்கள் பொதுஜன முன்னணியை புறக்கணிக்கக்கூடும் என்று ஆளும் தரப்பு நினைக்கிறது.

வெற்றி வாய்ப்பைத் தீர்மானிப்பதில் கொழும்புத் தமிழ் வாக்காளர்களுக்கு குறிப்பிடத்தக்க பங்கு இருப்பதால், அவர்களை 'தாஜா' பண்ண நினைக்கிறது அரசு.

அதனால்தான் இனிமேல் கொழும்புத் தமிழர், வடக்கு-கிழக்கு தமிழர் என்று பிரித்து விளையாட நினைப்பதாகத் தெரிகிறது.

வடக்கு-கிழக்கு தமிழர்கள் கொழும்புக்கு வந்தமையால்தான் கொழும்புத் தமிழரும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதுபோன்ற அபிப்பிராயத்தை தூண்டவும் முயற்சிக்கலாம். இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்குப் 'பிள்ளையார் சுழி' போட்டிருக்கிறார் நீதியமைச்சர்.

வடக்கு-கிழக்கை பிரிப்பதோடு, தமிழ் மக்களையும் பிரதேச **உணர்வுகளைக் கிளறி பிரித்துவிட நினைக்கிறதா இந்த அரசாங்கம்? மிக விழிப்பாக இருக்கவேண்டிய தருணம் இது. நிலத்தைமட்டுமல்ல, இனத்தையும் பிரித்துவிட்டால் 'வெற்றி நிச்சயம்' என்பது புதிய பேரினவாதத்தின் நாசூக்கான திட்டம்.**

அதுமட்டுமல்ல, விசேஷ அடையாள அட்டை வழங்குவது என்ற பெயரில் கொழும்பில் உள்ள தமிழர்களை மீண்டும் பொலிஸ் நிலையங்களுக்கு இழுத்தடித்து, பொல்லாத வெய்யிலில் காயவைத்து, படாதபாடு படுத்தப்போகிறார்கள்.

அதுவும் ஒரு சம்பாத்தியமாக ஒரு பிரிவினருக்கு மாறப்போகிறது. ஆககூட்டணியினர் தமது பாராளுமன்ற விவாதம் மூலம் பிள்ளையாருக்கு பதிலாக குரங்கைப் பிடித்து தந்திருக்கிறார்கள். இதைவிட பேசாமலேயே இருந்திருக்கலாம்.

**நீதியமைச்சர் ஒரு பேராசிரியர்தான். ஆனால் கூட்டணி பா.உக்கள் எப்போது அவரது மாணவர்களானார்கள்?**

கூட்டணியின் விவாதத்துக்கு அரசு சார்பில் திசைதிருப்பலான, மழுப்பலான பதில் உரையை நீதியமைச்சர் பொழிந்து கொண்டிருக்க, கைகட்டி, வாய்பொத்திக் கேட்டுக் கொண்டிருந்தனர் கூட்டணி பா.உக்கள். இத்தகைய அடக்கமான மாணவர்களை பெற்றதற்காக பேராசிரியர் நிச்சயம் பேருவகை அடைந்திருப்பார்.


படிப்பகம்

www.padippakam.com

**புதிய உண்மைத் தொடர்**

## அதிர் இடி 7

**இதுவரை**

பிரதமர் ஒபேடேவுக்காக ஜனாதிபதி கபாகாவின் மாளிகையையும், அவரது ஆதரவுப் படையையும் தளுக்குகிறான் இடி அமீன். ஆயிரத்தி நூறு பேர் அமீனின் படைகளால் பலியாகின்றனர். ஜனாதிபதி கபாகா பிரிட்டனுக்கு தப்பியோடுகிறார். இனி...

# இடி அமீன்



ஜனாதிபதி கபாகா பிரிட்டனுக்கு தப்பியோடியது அமீனுக்கு வெட்கமாகிவிட்டது.

"கொஞ்சம் தாமதித்துவிட்டோம், இல்லையானால் கபாகாவின் தலையில் ரவைகளால் ஓட்டை போட்டிருப்பேன்!" என்று உறுமினான்.

கபாகாவுக்கு சொந்தமான மாளிகைகள் பமுனிக்கா, மசாகா ஆகிய இடங்களில் இருந்தன.

தனது படையுடன் அந்த மாளிகைகளை சூறையாடினான். ஏராளமான பணம் மற்றும் பெறுமதியான பொருட்கள் அந்த மாளிகைகளில் சிக்கின.

முக்கியமானவற்றை தான் எடுத்து வைத்துக்கொண்டு, ஏனையவற்றை தன் படைகளுக்கு விட்டுவிட்டான்.

அதனால் அமீனின்மீது படையாட்கள் பெரும் விருப்புக் கொண்டார்கள்.

உகண்டா படையினர் அனைவரிடமும் அமீனின் சாகசங்களும், தாராளக் குணமும் கதை கதையாகப் பரவின.

"நீதான் இராணுவத் தளபதி!" என்று பிரதமர் ஒபேடே அமீனிடம் கூறினாரே தவிர, உடனடியாக தளபதியாக்க சற்றுத் தயங்கினார்.

ஒபேடேவுக்காக அமீன் காத்திருக்கவில்லை. படைகளுக்குள் 'அமீன்தான் தளபதியாக வேண்டும்' என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

"ஜனாதிபதி கபாகாவை பதவி நீக்கியது அநியாயம். அதைவிட அநியாயம் கபாகாவிற்கு விசுவாசமானவர்களைக் கொன்று குவித்தது!" என்று மக்கள் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டனர்.

அமீனின் மூளை வெகு வேகமாகத் திட்டங்களை தீட்டியது.

பத்திரிகையாளர் ஒருவரை அழைப்பித்த இடி அமீன், "கபாகாவின் ஆட்களை படுகொலை செய்தமைக்கு நான் பொறுப்பல்ல; பிரதமர் ஒபேடே கட்டளையிட்டார். நான் நிறைவேற்றினேன்!" என்று சொல்ல அது மறுநாள் உகண்டாவையே உலுக்கியது.

"பிரதமர் ஒபேடே கொடுமைக்காரர். அடக்குமுறையாளர். பதவியில் இருக்க இலாயக்கற்றவர்" என்று மக்கள் கொந்தளித்தனர்.

இடி அமீன் பிரதமர் ஒபேடேயின் இல்லத்துக்கு, திட்டமிட்டு ஏற்படுத்திக் கொண்ட பரபரப்போடு சென்றான்.

பிரதமர் ஒபேடேயின் உதடுகள் ஆத்திரத்தில் துடித்தன. விழிகள் வெறுப்பை உமிழ்ந்தன.

மிகச் சிரமப்பட்டு, வார்த்தைகளைத் தேடி அவர் பேசினார்: "நீ இப்படி முதுகில் குத்துவாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை!"

அமீன் அபாரமான நடிகனாக மாறினான்: "தாங்கள் என்னைத் தவறாக நினைத்து விட்டீர்கள். அது பொய்யான மிகமிகப் பொய்யான செய்தி. செய்தியைப் பார்த்ததும் எனக்கே தலை சுற்றியது. உடனடியாக காரியத்தில் இறங்கினேன்." சொல்லிக்கொண்டே சட்டென்று அறைக்கு வெளியே போய்விட்டு, மீண்டும் வந்தபோது அந்தப் பத்திரிகையாளரும் உடனிருந்தார்.

"இவன்தான் செய்தி போட்டானாம். கபாகாவின் கையாள்!" என்று அமீன்



சொன்னதற்கு, பத்திரிகையாளர் ஒரு நொடி அதிர்ந்து, பின்னர் உண்மையைச் சொல்வதற்கு இடையே, அமீனின் பிஸ்டல் ரவைகளைத் துப்பியது.

"என்ன இது? அமீன் வேண்டாம்... இங்கே வேண்டாம்..." என்று பிரதமர் சொல்லி முடிப்பதற்கு இடையே, உடம்பில் ஏற்பட்ட பொத்தல்களால் இரத்தம் சிந்திக்கொண்டு, மிக நிச்சயமாய் செத்துப் போயிருந்தார் பத்திரிகையாளர்.

பிஸ்டலை தன் இடுப்பில் செருகிக்கொண்டே, "மன்னிக்கவேண்டும்; சற்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன்!" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் தலையை முன்னே சாய்த்தான் அமீன்.

பிரதமர் ஒபேடேவின் மனநிலை அவனது மன்னிப்பை கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை.

ஏற்கனவே கொந்தளிக்கும் மக்கள், பத்திரிகையாளர் ஒருவர் பிரதமரது இல்லத்தில் கொல்லப்பட்டதாக அறிந்தால் பொறுமை இழந்துவிடுவார்கள் என்று பயந்தார்.

ஒபேடேயின் தவிப்பு இடி அமீனுக்கு உள்ளூர சந்தோசமாக இருந்தது.

பிரதமர் ஒபேடேயை மக்கள் வெறுக்க வேண்டும் என்பதும், கட்டுப்படுத்த முடியாதளவுக்கு பிரச்சனை எற்பட்டால்தான் இராணுவத் தளபதி பதவி உடன் கைக்கெட்டும் என்பதும் அமீன் மூளையில் தயாரான திட்டம்.

தனது விருப்பப்படியே நிகழ்ச்சிகள் நடப்பதை எண்ணி அமீனுக்கு குரூர மகிழ்ச்சி.

தன் ஆள் ஒருவன் மூலமே பத்திரிகையாளரின் உடலை அப்புறப்படுத்திய அமீன்: "இவன் உடலை அடையாளம் தெரியாமல் ஆக்கிவிடு!" என்று சர்வசாதாரணமாக, பிரதமர் முன்பாகவே உத்தரவிட்டான்.

அடுத்த சில நாட்களில் உகண்டா உலைக்களமானது. அரச உடமைகள் மக்களால் தாக்கப்பட்டன. 'பிரதமர் ஒபேடே ஒழிக' என்று எங்கும் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஒரு நள்ளிரவு நேரம் பிரதமர் ஒபேடேயின் இல்லத்தின் தொலைபேசி மணி அலறியது.

தூக்கக் கலக்கத்தில் இருந்த பிரதமரின் காதில் அமிலத்தை பாய்ச்சுவதுபோல ஒலித்தது அமீனின் குரல்: "உங்கள் இல்லத்துக்குள் புகுந்து, உங்கள் குடும்பத்தை உயிரோடு கொளுத்த திட்டமிட்டிருக்கிறார்கள்."

பிரதமரின் தூக்கம் சட்டென்று முறிந்து போனது. உடம்பு எல்லாம் பதற்றம் தொற்றிக்கொள்ள, "நீ உடனே புறப்பட்டு வா!" என்றார்.

அமீன் பிரதமர் இல்லம் வந்து சேருவதற்கு முன்னரே, அவனை இராணுவத் தளபதியாக நியமிக்கும் உத்தரவை தயார் செய்து, கையொப்பமும் இட்டு வைத்திருந்தார் பிரதமர்.

அமீன் வந்ததும், கைகொடுத்து வரவேற்று, உத்தரவை அவன் கையில் கொடுத்தார்.

"என்ன இது?" என்று ஆச்சரியமாக நடித்து உத்தரவை படித்துக் கொண்டிருந்த அமீனுக்கு தலைகால் புரியாத சந்தோசம்.

"இத்தனை பெரிய பொறுப்பை என்தலையில் கட்டுகிறீர்களே? குருவியின் தலையில் பாறாங்கல்லை வைத்த மாதிரியல்லவா இருக்கிறது!" என்றான் அப்பாவியாக.

மறுநாள் விடியும்போது புதிய இராணுவத் தளபதி இடி அமீன் பொறுப்பை ஏற்று விட்டான்.

விடைபெற்றுச்செல்ல வந்த முன்னாள் தளபதியை இடிச் சிரிப்புடன் வரவேற்றான் அமீன்.

அவன் சிரிப்பைக் கேட்டதுமே ஏன் வந்தோம் என்று நினைத்து குறுகிப்போன தளபதிக்கு, அமீன் கேட்ட கேள்வி தூக்கிவாரிப்போட்டது.

"எத்தனை நாள் சிறைவாசம் இருக்க உத்தேசம்?" கால்களை ஆட்டியபடி அமர்ந்திருந்த அமீன், முன்னாள் தளபதியை தன் எதிரே நிற்கவைத்து கேள்வி கேட்டான்.

முன்னாள் தளபதிக்கு பேச நா எழவில்லை. அமீன் ஜோக்கடிக்கிறானா, உண்மையாகவே கேட்கிறானா! ஒன்றும் புரியவில்லை.

"நான் கேட்டால் நீர் பதில் சொல்லியாக வேண்டும். இப்போது நான்தான் தளபதி. தெரியுமா?"

"தெரியும்!"

"நான் நினைத்தால் உம்மை நாய்போல சுடலாம், தெரியுமா?"

"தெ... தெரியும்!"

"நான் நினைத்தால் உமது குடும்பத்தையே இங்கு கொண்டுவந்து என் விருப்பப்படி நடக்கலாம்... தெரியுமா?"

முன்னாள் தளபதி வியர்த்துப் போனார். அவரது சீருடை தொப்பலாகிக் கொண்டிருந்தது.

"வேண்டாம்....!" முன்னாள் தளபதி தன் தகுதிக்கு மாறாக தன் குடும்பத்திற்காக அமீன் முன் இறைஞ்சினார்: "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், என் குடும்பத்தை விட்டுவிடுங்கள்."

இடி அமீன் உரத்துச் சிரித்தான். "உமக்குக் குத்துச் சண்டை தெரியுமா?" என்றான் திடீரென்று.

"தெரியாது!" என்றார் முன்னாள் தளபதி.

"அய்யய்யோ... உமக்குக் குத்துச் சண்டை தெரிந்தால் மோதிப் பார்க்கலாம். நீர் ஜெயித்தால் உம்மை விடுதலை செய்யலாம் என்று நினைத்தேன். சரி போகட்டும். உம்மை மன்னித்து விடுகிறேன்."

தளர்ந்து போன நிலையில் புறப்பட்ட முன்னாள் தளபதியை இடி அமீனின் குரல் இடியாக எழுந்து தடுத்து நிறுத்தியது.

"நில்லும்!"

இயந்திரம் போல நின்று திரும்பிப் பார்த்தார்.

"நீ முன்னாள் தளபதிதானே?"

"ஆம்!"

"இந்நாள் தளபதி நான் தானே?"

"ஆம்!"

"சல்யூட் பண்ணாமல் போனால் என்ன அர்த்தம்?" என்ற அமீனின் கேள்விக்கு முன்னாள் தளபதி ஆடிப்போனார்.

விறைப்பாக சல்யூட் அடித்தார்.

"ஒன்று போதாது. பத்துத் தடவை சல்யூட் பண்ணவேண்டும். இது தண்டனை!" என்றுவிட்டு கோடூரமான புன்னகையுடன் ஒன்று... இரண்டு... என்று எண்ணத் தொடங்கினான் அமீன்.

ஒன்பது தடவைகள் சல்யூட் பண்ணியதும், "போதும் நிறுத்தும்! ஏதோ என் முன்னாள் அதிகாரியாச்சே என்பதால் ஒன்றைக் குறைத்துக் கொள்கிறேன்! நேற்று உமது காட்டில் மழை. இன்று என் காட்டில் மழை. எல்லாக் காட்டிலும் எல்லாக் காலமும் மழை பெய்யாது. போய் வாரும்!" என்று அமீன் சிரித்த சிரிப்பில் கூனிப்போனார் முன்னாள் தளபதி.

ஜனாதிபதி கபாகாவின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

எங்கும் இராணுவ ரோந்தை தீவிரமாக்கினான் இடி அமீன்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கண்டனம் செய்து உரையாற்றினார்.

அன்றிரவு அவரது இல்லத்துக்கு நேராகச் சென்றான் இடி அமீன்.

## தருவது ரசிகன்

இடி அமீன் பற்றி கண்டித்துப் பேசினாரே தவிர அந்த உறுப்பினர் அதற்கு முன்னர் இடி அமீனைக் கண்டதே கிடையாது.

தனக்கு முன்பாக நிற்கும் கறுத்த, நெடுமரம் போன்ற, பயங்கரமான உருவத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"நான்தான் இடி அமீன். ஏண்டா நாயே இதற்கு முன்னர் என்னை பார்த்திருக்கிறாயா?" என்று கழுத்தில் பிடித்து தூக்கிய வேகத்தில், பாராளுமன்ற உறுப்பினருக்கு பயத்தில் உதறல் எடுத்துவிட்டது.

அவரை இறக்கிவிட்டு உள்ளே சென்ற அமீனின் பார்வையிலே பட்டாள் அவரது இளம் மனைவி.

"யோவ், நீ அரைக் கிழம். உனக்கு இளம் மனைவி தேவைதானா? என்ன உபயோகம்?" என்ற வக்கிரமான கேள்வியால் அறைபட்டு துடித்துப்போனார் பாராளுமன்ற உறுப்பினர்.

"உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம். இவளைக் கொன்றுவிடவா, அதாவது உரித்துப் பார்த்துவிட்டு கொன்று விடவா?" அவன் குரலும் அவன் அவளைப் பார்த்த பார்வையும், அவன் கைகள் அவள்மீது பட்டு மீண்ட விதமும், அவன் மிரட்டல்காரனல்ல; சொன்னதைச் செய்யக் கூடியவன் என்பதற்கு சாட்சியம் கூறின.

இடி அமீன் இப்படி இருப்பான் என்று அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் கனவிலும் நினைத்ததில்லை.

ஆடிப்போனார்.

மன்னிப்புக் கேட்டார்.

மன்றாடினார்.

"இனிமேல் என்னைப் பற்றி..." என்று அமீன் கேட்டு முடிக்கு முன்பாகவே, "பேசவே மாட்டேன்!" என்றார்.

"இல்லை பேசு. ஆனால் என்னைப் பற்றி நன்றாகப்பேசு! உன் மனைவியின் உயிரை தந்திருக்கிறேன். நான் யார்?" என்ற அவனது கேள்விக்கு, எவ்வித தாமதமும் இல்லாமல், "கடவுள்!" என்றார் சட்டென்று.

அந்த வீடே அதிரும்படி சிரித்துவிட்டு அவள் மார்பில் தொட்டுவிட்டு, புயல் வந்து போனது போல சென்றுவிட்டான் இடி அமீன்.

(இடி தொடரும்)

## தாயைத் தாக்கிய தனயன்



அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அடிப்பதும் தண்டனைக்குரிய குற்றம். அதனால் நம்நாட்டுக்காரர் சிலரும் பொலிசில் மாட்டியிருக்கின்றனர்.

படிக்கவில்லை என்று பெற்றோர் அடித்தால், உடனே ஃபோனைச் சுழற்றி பொலிசுக்கு தகவல் சொன்னால், விரைந்து வந்து பெற்றோரை அள்ளிப்போட்டுக் கொண்டு போய்விடுவார்கள்.

அதேபோல பெற்றோரை பிள்ளைகள் அடித்தாலும் தண்டனைதான்.

அமெரிக்காவில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்று:

ஆண்ட்ரூ பெர்கின்ஸ் என்ற சிறுவனுக்கு பத்துவயது. தனது தாயாருடன் ஹொட்டல் ஒன்றுக்குச் சென்றான். அப்போது அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

கோபப்பட்ட சிறுவன் தன் தாயாரை அடித்துவிட்டான். ஹொட்டல் ஊழியர்கள் சிறுவனைப் பிடித்து வைத்து பொலிசுக்கு தகவல் கொடுத்தனர்.

பொலிசார் அவன்மீது வழக்குப் பதிவு செய்து சிறையில் வைத்துள்ளனர்.

அமெரிக்காவில் குழந்தைகளின் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. குழந்தைகள் வன்முறை மனோபாவம் கொண்டவர்களாக அங்கு வளருகின்றனர் என்று கூறப்படுவது உண்மைதான்.

## விசித்திரமான வழக்கு



இலண்டன் நீதிமன்றம் பல வழக்குகளை சந்தித்து இருக்கலாம். ஆனால் சமீபத்தில் சந்தித்த வழக்கு விசித்திரமானது. வித்தியாசமானது.

ஆணாக இருந்து பெண்ணாக மாறியவர் தன் காதலியை மணக்க விரும்பினார்.

'ஆணாக இருந்தீர் காதலித்தீர். இப்போது பெண்ணாக இருக்கிறீர். இனி ஆணாகப் பார்த்துக் காதலிக்க வேண்டியதுதான், ஒருபால் உறவுக்கு அனுமதி இல்லை' என்று கூறிவிட்டது அரசாங்கம்.

பொங்கி எழுந்த முன்னாள் காதலரான இந்நாள் பெண்மணி நீதிமன்றம் சென்று முறையிட்டுள்ளார். இவருக்கு வயது 42. உளவியல் வல்லுநராகவும் பணியாற்றி வருகிறார்.

"நான் பெண்ணாக மாறியது இன்றைய நவீன உலகின் அறிவியல் சாதனை. ஆணாகப் பிறந்த நான் பெண்ணை மணப்பது குற்றமல்ல. எனக்கு அனுமதி கொடுங்கள்" என்று தன் முறையீட்டில் தெரிவித்துள்ளார்.

இவரது காதலியான கேட்ரீனாவுக்கு தன் காதலர் பெண்ணாக மாறியதில் சற்றும் கவலையே கிடையாது. "நான் ரெடி. அரசு ஏன் தடை செய்ய வேண்டும்?" என்று பொங்குகிறார்.

## சொன்னது பலிக்கும்



நம்பமுடியாத ஒரு சமாச்சாரம். ஆனால் ரசியாவையே கலக்கிக்கொண்டிருக்கும் செய்தி அதுதான்.

"நாலு வயது சிறுவன் ஒருவன் சொல்வதெல்லாம் பலிக்கிறது. தொலைக்காட்சியில் ஒரு நாள் செய்தி பார்த்துக் கொண்டிருந்தபோது, ஜப்பானில் நில நடுக்கம் பற்றி செய்தி ஒளிபரப்பானதாம். "அம்மா நம் ஊரிலும் நில நடுக்கம் வரப்போகிறது" என்று கூறினான் சிறுவன்.

மறுநாள் ரசியாவில் நில நடுக்கம்.

மற்றொரு நாள், "தாத்தா கார் விபத்தில் சாகப்போகிறார்" என்றானாம்.

பயந்துபோன சிறுவனின் அம்மா தந்தைக்கு எச்சரிக்கை கொடுக்க முன்னரே, அவர் கார் விபத்தில் இறந்த செய்தி கிடைத்ததாம்.

பின்னர் ஒருநாள் தனது தந்தையிடமே "உங்களை பொலிஸ் பிடித்துப் போகப் போகிறது" என்று சொன்னானாம். மறுநாளே வழக்கு ஒன்றில் சிக்கி உள்ளே போய்விட்டார் தந்தை.

அது மட்டுமல்ல இந்தச் சிறுவனை பொலிஸாரும் நாடிவந்து குற்றவாளிகள் சிலரைப் பிடிக்க உதவிபெற்றுள்ளனராம். 'தீர்க்கதரிசி' என்று எல்லோரும் புகழுகின்றனர்.

நல்லவேளை இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் என்றால் சிறுவனை சாமியாராக்கி ஆசிரமம் அமைத்திருப்பார்கள்.

## என்றும் இளமை



ஹொலிவூட் நடிகைகள் அறுபது வயதிலும் கவர்ச்சி காட்டுகிறார்கள். படத்தில் சிரிப்பு வெடி வீசிக்கொண்டிருப்பவர் நடிகை டயான்கான்னன்.

"அறுபதில் இத்தனை கவர்ச்சி எப்படி சாத்தியம்?" என்று கேட்டால்: "எப்போதும் இளமையாக இருப்பதாக நினைக்கிறேன், கவர்ச்சியாக உடை அணிகிறேன். அழகு நமக்குள் இருக்கிறது. அதில் நம்பிக்கை வைத்தால் போதும்" என்கிறார்.

"ஆண்கள் பலர் என்னை விரும்புகின்றனர். பெண்கள் பலர் என்னைப் போல் இருக்க ஆசைப்படுகின்றனர்." என்றும் ஒரு போடு போட்டுள்ளார் அம்மணி.

## அவன் இவன்தானா?

கம்பூச்சியாவை கொலைக்களமாக மாற்றியவன் பொல்பொட். கிட்டத்தட்ட இருபது இலட்சம் மக்களை கொன்று குவித்த கொடூரன்.

கம்பூச்சியாவை ஆட்டிப்படைத்த பொல்பொட்டை வியட்நாமின் உதவியுடன் விரட்டியடித்தனர். பொல்பொட்டிற்கு முழு ஆதரவு கொடுத்த நாடு அமெரிக்கா.

காட்டிலே தன் 'கமர்ரூச்' படையுடன் பொல்பொட் ஒளிந்திருந்தான். கடந்த மாதம் ஏப்ரல் 15ம் திகதி ஒரு அநாதையாக மரணித்தான்.

ஆனாலும் இறந்தது பொல்பொட்தானா? அல்லது அவன்போல இருந்த இன்னொருவனா? என்ற சந்தேகம் பரவலாக இருக்கிறது.

பொல்பொட்டை கொல்வதற்கு அவனுடன் பிரச்சனைப்பட்ட 'கமரூச்' இயக்கத்தினர் மட்டுமன்றி கம்பூச்சிய படைகளும் தேடித் திரிந்தன.



இளமையில்



முதுமையில்

பொல்பொட் உயிருடன் பிடிபட்டால் தமக்கும் அவனுக்கும் இருந்த உறவுகளை அம்பலமாக்கி விடுவானோ என்று அமெரிக்காவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது.

எனவே இந்த மூன்று சக்திகளிடமும் இருந்து தப்பி கடைசிக் காலத்திலாவது நிம்மதியாக வாழ பொல்பொட் ஆடிய நாடகமோ இது? என்றும் சந்தேகிக்கப் படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com


## தகவல் பெட்டி


## நெத்தியடி

இதுதான் உண்மையான நெத்தியடி. கடும் பயிற்சியால் கைகளாலும், நெற்றியாலும் அடித்து நொறுக்குவது கராட்டி கலையில் ஒரு அம்சம். அநேகமாக செங்கட்டிகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிவைத்து விட்டுத்தான் அடித்து உடைப்பார்கள்.

ஆனால் இவர் நெற்றியால் மோதி பிளந்திருப்பது செங்கற்களையல்ல. கடினமான கலவையால் செய்யப்பட்ட கற்களைத்தான். ஒரே அடியில் பிளந்திருக்கிறார்.

இத்தனைக்கும் மன அமைதியைப் போதிக்கும் மதபோதகர் இவர். அமெரிக்க கலிஃபோர்னியாவைச் சேர்ந்தவர். பெயர்: கெவின் நியூட்டன். மத போதனைகளுடன் வீர விளையாட்டுக்களையும் கற்பித்து வருகிறாராம். கடவுளை வழிபடச் சொல்கிறார். கட்டுப்படாத தீயோரை நாலு போடு போடு போட்டு வழிக்கு கொண்டு வரச் சொல்லுகிறார்.





## நாய் நடை

நாய்களில் 'புல் டோக்' இன நாய்களுக்கு மவுசு அதிகம். காரணம் அதன் பலம். புல் என்றால் எருது என்று தெரியும். 'புல் டோக்' நாய்கள் கொழுத்த எருதுகள் போல காட்சியளிக்கும்.

மனித இனங்களில் மட்டுமல்ல, எந்த இனத்திலும் பலம் இருந்தால்தான் மரியாதை. பாருங்கள்: 'புல்டோக்' நாய்களைப் போன்ற பிரமாண்டமான பலூன்களை செய்து நடை பவனி நடத்துகிறார்கள். இங்கிலாந்தில் எடின்பரோ நகர வீதிகளில் இந்த மகா மகா பிரமாண்ட பலூன் புல் டோக் அணிவகுப்பு நடைபெற்றது. இங்கிலாந்துக்காரருக்கு 'புல் டோக்' என்றால் தனிப்பிரியம்.

பலூனில் எத்தனை தத்ரூபமாக புல் டோக் செய்திருக்கிறார்கள்?! சாதனைதான்.



## கத்தி போல் கத்தியல்ல

குத்திக் கிழிக்கும் கத்திபோல இருக்கிறதா? இதுவும் குத்திக் கிழித்து முன்னேறிச் செல்லக்கூடியதுதான். ஆனால் கடலில் மட்டும். ஆமாங்கோ, இது ஒரு நவீன கப்பல்.

இந்த நவீன கப்பலின் பெயர்: 'கேபிள் அன்ட் வயர்லஸ் அட்வென்சரர்' இதன் நீளம் 115 அடி. இலண்டன் தேம்ஸ் நதியில் இருந்து புறப்பட்டு உலகத்தைச் சுற்றி வருகிறது.

பதினொரு நாடுகளில் உள்ள மிகப்பெரிய 15 துறைமுகங்கள் வழியாக உலகைச் சுற்றிவிட்டு புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் செல்வதுதான் திட்டமாம். மொத்தம் 26 ஆயிரம் மைல்கள் சுற்றப் போகிறது. நம் நாட்டு கடற்பரப்பில் காணப்பட்டால் வம்பாக முடிகிறதோ தெரியவில்லை.

பூங்காக்கள் மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகளில் சுற்றி சுழன்று வரும் ரோலரில் பயணம் செய்வது திரிலான அனுபவம். குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்கள்கூட அதில் ஏறிக்கொள்வதுண்டு. கேட்டால் குழந்தைகளுக்கு உதவியாக என்று சமாளிப்பார்கள் என்பது வேறு விடயம். இலண்டனில் 'எல்டன் டவர்' பூங்காவில் 'ரோலர் கோஸ்டரில்' வட்டமாக சுழன்று கொண்டிருந்தவர்களுக்கு பயங்கரமான அனுபவம் ஏற்பட்டது.


கம்பியூட்டர் உதவியுடன்தான் அந்த சாதனம் இயங்குகிறது. நம்நாட்டில் உள்ள ரோலர் கோஸ்டர்களைவிட படுவேகமானது. மணிக்கு 70 கிலோமீட்டர் வேகம். இதன் புவியீர்ப்பு சக்தி 4.5 மடங்கு. பூமியின் காற்றுமண்டலத்தைவிட்டு ரொக்கட் பிரிந்து விண்வெளிக்கு செல்லும்போது, அதில் பயணிக்கும் விண்வெளி வீரருக்கு ஏற்படும் உணர்வு இதில் பயணம் செய்வோருக்கும் ஏற்படுமாம். அப்படியொரு அசுரவேகம்.

சமீபத்தில் படுவேகமாக மேலே ஏறி கீழே செங்குத்தாக சரிந்து இறங்க ஆரம்பித்தபோது ஏதோ கோளாறு ஏற்பட்டு அப்படியே அந்தரத்தில் 70 அடி உயரத்தில் நின்றுவிட்டது. 16பேர் அதற்குள் இருந்தனர். நடு நடுங்கிப் போனார்கள். சிறுவர்கள் பயந்துபோய் கூக்குரல் இட்டனர்.

உடனடியாக ஏணி ஒன்றின் மூலம் 16 பேரும் பாதுகாப்பாக கீழே இறக்கப்பட்டனர். அந்தரத்தில் 'ரோலர் கோஸ்டர்' நிற்கும் காட்சிதான் இது.



## அந்தரத்தில் 16 பேர்



## ஒட்டக மல்யுத்தம்

மனித மலைகள் மோதும் மல்யுத்தம், சுமோ யுத்தம் எல்லாம் பார்த்திருப்பீர்கள். படத்தில் இருப்பது மல்யுத்த மனிதர்களுக்கு போட்டியாக ஒட்டகங்கள் நடத்தும் மல்யுத்தம். என்ன ஒரு கச்சிதமாக மோதுகின்றன பார்த்தீர்களா?

துருக்கி நாட்டில் ஒட்டக மல்யுத்தம் ஆண்டுதோறும் நடப்பதுண்டு. பெரிய விழாபோலவே இதனை நடத்தி-கலக்கிவிடுவார்கள். ஆண் ஒட்டகங்கள்தான் மல்யுத்தத்தில் இறக்கப்படுமாம்.

இன்னொரு விஷயம், பருவ வயதில், ஜாலி மூடில் உள்ள ஆண் ஒட்டகங்களையே போட்டிக்கு தெரிவு செய்கிறார்கள். அப்போதுதான் சண்டையில் வேகம் இருக்குமாம்.

மற்றொரு முக்கிய தகவல்: குத்துச் சண்டையில் காதைக் கடித்ததால் டைசனுக்கு தண்டனை கிடைத்ததல்லவா. ஒட்டக மல்யுத்தத்தின் உச்சக்கட்டமே கடித்துக் குதறுதல்தான்.

எந்த ஒட்டகம் அதிகமாக கடித்துக் கதறுகிறதோ, அந்த ஒட்டகம்தான் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படும்.

இந்த ஒட்டக மல்யுத்தம் 50 வருடமாக ஜோராக நடந்து வருகிறதாம்.



படிப்பகம்

www.padippakam.com

## புதுமைப் பித்தன்

'பாரதி கண்ணம்மா' படத்தை தயாரித்தவர் ஹென்றி. அதில் கதாநாயகன் பார்த்திபன். ஹென்றி தற்போது தயாரிக்கும் 'புதுமைப்பித்தன்' படத்திலும் பார்த்திபன்தான் கதாநாயகன்.

பார்த்திபனுக்கு தேவயானியும், ரோஜாவும் ஜோடிகள். மணிவண்ணன், பாண்டு, ரஞ்சித், விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்கம்: ஜீவா.
இசை: தேவா.

## திரையுலக மறுபக்கம் 53

# நடிகர்மீது நடிகை வைத்த குறி

# நாகேஷ் என்றால் அலட்சியம்

தமிழ்த்திரை உலக மார்க்கண்டேயர் என்று புகழப்படும் நடிகர் அவர். மது, மாது, சூது, புகை போன்ற எந்தப் பழக்கமும் கிடையாது. உடம்பை கச்சிதமாக வைத்திருந்தார்.

அவர்மீது கூட நடித்த பல நடிகைகளுக்கு ஒரு கண். எத்தனையோ முறை முயன்று பார்த்தும் நடிகர் மசியவில்லை.

இந்துப் பெண் தெய்வம் ஒன்றின் பெயர் கொண்ட நடிகை அந்த நடிகரை எப்படியாவது என் இழுப்புக்கு இசையவைக்கிறேன்! என்று தன் சக நடிகைகளிடம் சபதம் செய்திருந்தார்.

இருவரும் அப்போது இணைந்து நடித்துக் கொண்டிருந்தனர். நடிப்புக்கு பெயர் போன பெரிய நடிகரின் படம் அது.

மார்க்கண்டேய நடிகரை படப்பிடிப்பிலும் நடிகை துரத்துவதையும், நடிகர் பயந்து பயந்து ஒதுங்குவதையும், கண்ட பெரிய நடிகர் சிம்மக்குரலில் நடிகரைக் கேலி செய்தாராம்.

"தானாக தேடி வரும்போது தட்டிவிடலாமா. அனுபவிக்க வேண்டியதுதானே" என்று அவரது நண்பர்களும் தூண்டி விட்டனர்.

நடிகருக்கும் மெல்ல மெல்ல சிறு சபலம் ஏற்பட்டு விட்டது. ஆனாலும் ரொம்பவும் கூச்ச சுபாவம் உடையவர் என்பதால் நடிகையின் விருப்பத்திற்கு இணங்கவும் தயக்கமாக இருந்தது.

படப்பிடிப்பு முடிவடையும் நாள் அன்று நடிகையே வலியச் சென்று, தான் தங்கியிருக்கும் ஹொட்டலின் அறை இலக்கத்தை கூறி அங்கு வருமாறு நடிகரை அழைத்தார். 'தன்னுடன் சிற்றுண்டி அருந்தவே அழைப்பதாகவும், கடித்து தின்றுவிடமாட்டேன்' என்றும் குழைந்தார்.

### எதிர்பாராத அதிர்ச்சி

நடிகரும் படபடக்கும் இதயத்தோடு அன்று மாலையே நடிகை தங்கியிருந்த அறைக்குச் சென்றார். கதவு மூடப்பட்டு இருந்தது. சிறிது தயங்கிவிட்டு கதவைத் தள்ள திறந்து கொண்டது.

அங்கே கண்ட காட்சியால் கலங்கிப் போனார் நடிகர். கட்டிலில் அரைகுறையான ஆடைகளுடன் படுத்திருந்தார் நடிகை. இவரைக் கண்டதும் தள்ளாடியபடியே எழுந்து வந்தார்.

அந்த நடிகை குடிப்பார் என்பதை நினைத்தும் பார்த்திராத நடிகருக்கு அது எதிர்பாராத அதிர்ச்சியாக இருந்தது.

நடிகையோ நடிகரை நெருங்கி அவர் கழுத்தை தன் கைகளால் கட்டிக்கொண்டு தொங்கினார். குப்பென்று மதுவாசனை முகத்தில் அடித்தது.

"ரொம்பச் சின்னப் பையனாக இருக்கிறாயே. அதுதான் உன்னை எனக்கு பிடிச்சிருக்கு. ஒரு நாளாவது உன்னை அடையணும்னு நினைச்சேன்..." என்று உளறிக்கொண்டே போனார் நடிகை.

நடிகைகளைத்தான் நடிகர்களும், இயக்குநர்களும் துரத்துவார்கள் என்று நடிகர் கேள்விப்பட்டிருந்தார். இப்போது ஒரு நடிகையே தன்னை கிட்டத்தட்ட பலவந்தப்படுத்துவதை நேரில் அனுபவித்தார் நடிகர்.

நடிகையிடம் இருந்து எப்படி மீள்வது என்று அவர் யோசித்து முடிப்பதற்கு இடையில் நடிகை எல்லையற்ற முயன்றார். கூச்சநாச்சமில்லாமல் நடிகை செய்த காரியங்களால் நடிகர்தான் கூசிப் போனார்.

"இன்னொரு நாள் வருகிறேன்" என்று நடிகையை பிடித்துத் தள்ளாத குறையாக விலக்கிவிட்டு தப்பினோம் பிழைத்தோம் என்று ஓட்டம்பிடித்தார் நடிகர்.

அதன்பின்னர் எந்த நடிகைமீதும் நடிகர் ஆசைப்பட்டதே கிடையாது. குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற சில வாரங்களுக்குள் தன் வீட்டார் பார்த்துவைத்த பெண்ணையே திருமணம் செய்துகொண்டார் நடிகர்.

### நாகேஷின் ஆரம்பம்

குண்டும் குழியுமா, இண்டும் இடுக்குமாக உள்ள மிகச் சாதாரண முகத்தை வைத்துக்கொண்டு பெரிய ஹீரோக்கள் செய்யமுடியாத சாதனைகளைச் செய்து காட்டியவர் நாகேஷ்.

நண்பர் பாலாஜி பிரபல நடிகராக இருந்த நாட்களில் கிட்டத்தட்ட 'காட் ஃபாதர்' போல துணைநின்று, நாகேஷுக்கு திரைப்பட வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்க சிரமப்பட்ட சம்பவங்கள் ஏராளம்.

"இவர் என்னுடைய நண்பர். நல்ல நடிகர், என்னுடைய நாடகக் குழுவில் சிறந்த நகைச்சுவை ரோல்களைச் செய்கிறார். நான் ஹீரோவாக நடிக்கும் இந்தப்படத்தில் இவருக்கு ஒரு சான்ஸ் குடுங்க. என் சம்பளத்தை வேணும்னா குறைச்சுக்கிட்டு அவருக்கு ஏதாவது தாங்க" என்பார்.

ஆனால் படத்தயாரிப்பாளரோ, அம்மை வார்த்துப் பள்ளங்கள் விழுந்துபோன நாகேஷ் முகத்தையும், ஒடிசலான உருவத்தையும் அலட்சியமாகப் பார்த்துவிட்டு, "பாலாஜி உங்களுக்கு வேணும்னா இன்னும் பத்தாயிரம் சேர்த்துக் கொடுக்கிறோம். இவருக்கு ரோல் தர்றதுக்கில்லே" என்று நிர்தாட்சண்யமாகப் பதிலளித்துவிட்டுப் போய்விடுவார்!

மேற்கண்ட தகவலை கூறியவர் நடிகர் சிவகுமார்.

**முகப்பில்**
பிரசாந்த்
தபு



ராஜீவ் கிருஷ்ணா



மோகன்-ரசிகா
படம்: அன்புள்ள காதலுக்கு

## பணயக் கைதிகள்

## அப்பாஸ் புதிது



தலைவாசல் விஜய்-இந்து
படம்: குரு பார்வை

## சினிவிசிட்

## காதோடு சொல்லுகிறோம்

## பார்க்கக்கூடிய படம்!

## கிசு கிசு ஜோடி

ஜோடி சேரும் நாயகர்களுடன் கிசுகிசுக்கப்படும் ராசி உள்ளவர், ஹீரா. ஜோடி சேரும் நாயகிகளுடன் கிசுகிசுக்கப்படுபவர் கார்த்திக். இருவரும் ஜோடி சேர்ந்துள்ள படம் 'சுந்தரபாண்டியன்'

கிசு கிசு எழாமல் போகுமா? கார்த்திக் பற்றி ஹீரா விழுந்து விழுந்து புகழ்வது ஒன்றே போதும்.

www.padippakam.com

## மினி சினி

* பிரபு நடித்த 'சின்ன மாப்ளே', 'வியட்நாம் காலனி' போன்ற படங்களை இயக்கியவர் சந்தானபாரதி. இவர் விரைவில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் 'அழியாக் காதல்' என்ற படத்தை இயக்கவுள்ளார்.

* பிரபுதேவா-நவீன் ('கள்வன்' பட நாயகன்) இணைந்து 'லவ் 1999' என்ற தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார்கள். இப்படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக ரம்யா கிருஷ்ணனும், நவீனுக்கு ஜோடியாக லைலாவும் நடிக்கிறார்கள்.

* ராம் கோபால் வர்மா இந்தியில் இயக்கி வரும் 'சத்யா' படத்தில் சக்ரவர்த்தியும் ஊர்மிளாவும் ஜோடியாக நடிக்கிறார்கள். ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கும் இப்படத்திற்கு ஹொலிவுட் ஒளிப்பதிவாளரான கெரார்ட் ஹுபர் ஒளிப்பதிவு செய்கிறார்.

* அரவிந்தசாமி-ஜூஹி சாவ்லா நடித்த 'சாத்ரங்கே சப்னே' என்ற இந்திப் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்தவர் மிங்கி. இவர் அரவிந்தசாமி கதாநாயகனாக நடிக்கும் 'என் சுவாசக் காற்றே' படத்தில் ஒரேயொரு பாடலுக்கு நடனமாடுகிறார்.

* 'ஜீன்ஸ்' படத்திற்குப் பின்னர் பிரசாந்த் கதாநாயகனாக நடிக்கும் படத்தை இயக்குபவர் ரவி மல்லியம் என்பவர். இவர் முன்னர் ரவிவர்மா என்ற பெயரில் 'மூன்றாம்படி' என்ற படத்தை இயக்கியவர்.

* 'லவ் டுடே' படத்தில் கதாநாயகியின் தோழியாக முஸ்லிம் பெண்வேடத்தில் நடித்த ஸ்நேகா, மலையாளத்தில் 'நியூஸ்பேப்பர் பாய்', 'மீண்டும் குருஷேத்ரம்' 'சேன்ப்பரம்பிலே ஆனக்காரியம்' ஆகிய மூன்று படங்களில் கதாநாயகியாக நடித்துவருகிறார்.

* கமல்-பிரபுதேவா நடித்த 'காதலா காதலா' தமிழில் வெளியான அதேநாளில் தெலுங்கிலும் வெளியிடப்பட்டது. தெலுங்கில் இதற்கு என்ன பெயர் தெரியுமா? 'நவ்வாண்டி லவ்வாண்டி.'

* கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் 'நட்புக்காக' படத்தின் கதையை எழுதியவர் ஜோதி கிருஷ்ணா. இப்படத்தின் தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னத்தின் மகனான இவர் பத்தாம் வகுப்பு மாணவன்.

* அஜித்குமார்-மானு நடித்த 'காதல் மன்னன்' படம் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் சரண் என்னும் சரவணன். இவர் அடுத்து இயக்கும் படங்களில் ஒன்றுக்கு 'அமர்க்களம்' என்று பெயர் வைத்திருக்கிறார்.

* 'இதயம்', 'காதல் தேசம்' போன்ற படங்களை இயக்கிய கதிர், இப்போது இயக்கி வரும் 'காதலர் தினம்' படத்திற்காக ஒன்றேகால் கோடி ரூபாய் செலவில் மும்பாயில் பாடல் ஒன்றைப் படமாக்கியுள்ளார்.

## பழைய பேட்டிகள்

நம்நாட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சினிமா நட்சத்திரங்களின் மிகப் பழைய பேட்டிகளை தூசுதட்டி எடுத்து வந்து காண்பிக்கிறார்கள்.

சமீபத்தில் கலைச்சரங்கம் என்ற நிகழ்ச்சியில் அஜித்தின் பேட்டி ஒன்று, ஏதோ தமக்காக சுடச்சுட, தந்த பேட்டி போன்று காண்பித்தார்கள். 'நேருக்கு நேர்' படத்தில் நடித்துவருவதாகக் கூறினார் அஜித். சென்ற ஆண்டே திரைக்கு வந்து ஓடி முடித்த படம் அது. தவிர அஜித் அப்படத்தில் இருந்து தூக்கப்பட்டு சூர்யா நடித்திருந்தார். அதுகூட தெரியாதோ?

அதேபோல சென்றவருடம் சன்.ரி.வியில் ஒளிபரப்பான 'மருதநாயகம்' படத்தின் சில காட்சிகள் சமீபத்தில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் காண்பிக்கப்பட்டன. காண்பிக்கட்டும், ஆனால் தமக்காக தரப்பட்டவை என்று கூறுவானேன்?



## தவறவிடப்பட்ட ஜீன்ஸ்

'ஜீன்ஸ்' படம் பிரமாண்டமான எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. அதனால் நொந்து போயிருக்கிறார் தபு. அவரைத்தான் முதலில் அணுகிறார்களாம். ஜோடி பிரசாந்த் என்றதும் நழுவிவிட்டார் தபு. இப்போது அதற்காக கவலைப்படுகிறார்.

'தாயின் மணிக்கொடி' படத்தில் அர்ஜுனுடன் சில மனக்கசப்புக்கள் ஏற்பட்டது உண்மையா? என்றால் பதில் சொல்ல மறுக்கிறார்.

தேசிய விருது பெற்ற நடிகைகள் கவர்ச்சி காட்டக்கூடாது என்று சட்டமா? நான் கதைக்கு ஏற்ப கவர்ச்சி காட்ட எப்போதும் தயார் என்று அறிவித்துள்ளார் தபு.

சமீபத்தில் பேட்டி ஒன்றில் தபு கூறியுள்ள கருத்துக்கள் இந்திப்பட நடிகர்களை கோபப் படுத்தி இருக்கிறது. அப்படி என்னதான் சொன்னார் தபு?

"எந்த ஹீரோவையும் நான் நம்பவில்லை. என்னைத் தேடித்தான் எல்லோரும் வரவேண்டும். சாஜித்மீது நான் வைத்திருப்பது பரிசுத்தமான நட்பு. மற்றவர்கள் போல வாய்ப்புக்காக நான் பழகவில்லை.

டேவிட் தவான் பெரிய இயக்குநர் தான். அவருடைய படத்தில் நான் நடிப்பதால் என்னுடைய மார்க்கெட்டில் மாற்றம் வரும் என்று சொல்ல முடியாது. என் திறமையால்தான் நான் உயருகிறேன்" என்று பேட்டியளித்திருந்தார் தபு.

## பாம்பே அல்வா

நடிகைகளுக்கு இரசிகர்கள்தான் பட்டம் சூட்டி மகிழ்வார்கள். தாஜ் மஹால் படநாயகி ரியா சென்னுக்கு நடிகர் பார்த்திபன், கவிஞர் வைரமுத்து ஆகியோர் பட்டம் சூட்டி மகிழ்ந்துள்ளனர்.

'பாம்பே அல்வா' என்று பார்த்திபன் ஜொள்விட, 'கல்கத்தா ரசகுல்லா' என்று வைரமுத்து வழிந்திருக்கிறார். படம் வெளியாக முன்னரே ஐஸ் வைக்கப்படுகிறார் ரியா சென்.



"பசும்புல் தரையில்
பனி கொட்டும் வரையில்
படுத்திருந்தேன் கொஞ்ச நாழி
பால்போல் வெளுத்திருந்தேன்
நூல்போல் இளைத்தேன்
பருவத்தை அடைந்தேன் தோழி"


www.padippakam.com

## தடைசெய்யப்பட்ட கவிதை

எச்சில் இலை
உலர்ந்து போன மலர்க் கொத்து
காலங் கடந்த நாட்காட்டி
இவைகளோடு சேர்த்து
என் கவிதைகளையும்
கிழித்து எறி!
•••
எந்த விழிகளின் தரிசனத்திற்காய்
இன்னும் நான் எழுதுகிறேனோ
அதன் பார்வைகளிலிருந்தும்
என் கவிதைகளைத்
தடை செய்!
•••
சாத்தானிய வசனங்களாய்
என் வரிகளையும்
பிரகடனப்படுத்து!
இரக்கமேயில்லாத
ஒரு மலட்டுச் சர்வாதிகாரியாய்
என் கவிதைக் குழந்தையின்
குரல் நெரித்து–
குப்பையில் வீசு!
•••
ஆயினும்
என் உணர்வுகளின் ஊற்று
சுரந்து கொண்டேயிருக்கும்!
சிறு நத்தை நீ, நீரிறைத்து
என் நதியொன்றும்
வரண்டு போகா!
•••
கவி கொல்லும் கல் நெஞ்சே!
கோரப் பல் முளைத்த
உன் விரல் இடுக்குகளில்
குதறப்படும்–
ஒவ்வொரு கவிதையும்;
உயிரொன்று வலி கொண்டு
ஒரு பிரசவப் பெண் மாதிரி,
பெற்றெடுத்த உயிரென்று
அறியுமா உன் மனம்?
•••
பொறுத்துக் கொள்வேன்...!
என் கவிதைகளைக் கிழித்தாலும்,
அதன் குரல் நெரித்தாலும்
சாத்தானிய வசனங்களாய்–
பிரகடனம் நீ செய்தாலும்...
நான்–
பொறுத்துக் கொள்வேன்!
•••
நீ கிழித்த கவிதைகளை
என் நேசப் பைங்கிளி
தன்–
பூப்போட்ட தாவணிக்குள்
பதுக்கி வைப்பாள்...!
அறிவாயா?
•••
பறவையொன்று தன் இறக்கைக்குள்
அடை காக்கும் முட்டைகளாய்,
அவள் நெஞ்சக் கூட்டினிலே
பதுக்கி வைத்த என் கவிதை
பல குஞ்சு–
பொரிக்கும் நாளை!
•••
அதனால்,
பொறுத்துக் கொள்வேன்;
கவி கொல்லும் கல் நெஞ்சே..
பொல்லாத உன் தடையை!!
•••

**யூயெல் மப்றூக்–**
**அட்டாளைச்சேனை.**

## அசத்தலான படப்பிடிப்பு



என்ன ஒரு கச்சிதமான புகைப்படம் பாருங்கள். தட்டில் 'கேக்' துண்டுகள் அடுக்கிவைத்ததுமாதிரி கட்டடங்கள் காட்சி தருகின்றன அல்லவா?

அமெரிக்க தலைநகரான நியூயோர்க்கில் இத்தீவு இருக்கிறது. மான்ஹற்றன் என்று பெயர். வானை உரசும் பல கட்டடங்கள் கொண்ட வர்த்தக மையமும், அதனோடு இணைந்த நியூயோர்க் துறைமுகமும் காணப்படுகிறது. அரைவட்ட வடிவில் கடலில் அமைந்துள்ள இத்தீவில்தான் ஐக்கிய நாடுகள் சபைக் கட்டடமும் இருக்கிறது.

இத்தீவின் வரலாறு பற்றி ஒரு சுருக்கமான விளக்கம்; ஆரம்பத்தில் இத்தீவு கவனிப்பாரற்றுக் கிடந்தது. றொக் ⁚பெல்லர் என்னும் பெரும் பணக்காரர் இந்த சதுப்பு நிலத் தீவில் இலாபம் குவிக்கும் நம்பிக்கையில் தீவுமுழுவதையும் குறைந்த விலைக்கு வாங்கினார். அதில் ஒரு பகுதியை ஐ.நா. கட்டடம் கட்ட இலவசமாகக் கொடுத்தார்.

ஐ.நா. கட்டடம் வந்ததும் இத்தீவு பிரபலமானது. உலக வர்த்தக மையமும் கட்டப்பட்டது. இப்போது இங்கு ஒவ்வொரு துண்டு நிலமும் பல்லாயிரம் டொலர் விலைபோகிறது. ■

## ஏழைக் காதல்

உன் நந்தவன–
இதழ்களினால்
நெசவு செய்யப்பட்ட
காதல் பூக்களை
பிரித்துப் பிரித்து,
என் இதயத்தின் இடுக்குகளில்
சொருகிச் சொருகியே
ஒரு பித்தனாட்டம் நான்
அலுத்துப் போய்க் கிடப்பதை
பாரு பிரியமே!
*
ஆசைகளில்லாத–
என் மனசிலே
உன் இசைகளில்லாத
பாசைகளாலேயே
ஆசைகளையென்னுள்
அழுத்தி விட்டுப் போன
என் ஆக்ராவின் அழகியே–
வா!
*
வானுக்குப் பொட்டு வைக்கும்
நிலவைப் போல
வண்டுக்கு வந்தனம் சொல்லும்
மலரைப் போல;
காலைக்கு 'வணக்கம்'
என்கிற
ஒரு குயிலைப் போல;
என் காதலுக்கு
உன் சம்மதத்தை
சொல்லிப் போடி..!
*
என் வாலிபப் பூவே...
சகாராவின் நீரோடையே..
உயிரின் ஊஞ்சலே...
சிந்தனையின்
சிமிட்டலே....
வா...!
*
நட்சத்திரம் உடைத்து–
நகைகள் தருகிறேன்,
ரோசாவிலிழைத்த–
கைக்குட்டை தருகிறேன்,
தங்க நூல் நெய்து–
உனக்கு.
சல்வாரி தருகிறேன்,
பிளாட்டினத்தாலொரு
பாதணி தருகிறேன்...
என்றெல்லாம்–
என்னால்
பணக்காரத் தனமாய்
பிதற்ற முடியவில்லை!
*
ஆயினும் வா!
இந்த ஏழையின் குடிசையில்
உன்னை–
உட்காரவைத்து;
வாழும் வரையில்
என் உயிரால் பொத்தி,
நான் சாகும் வரையில்
உன்னை–
சந்தோசப் படுத்துவேன்
வா!!

**றஜீஸா**

## தேன் கிண்ணம்



## பேனா நண்பர்கள்



பெயர்:
கே. சுரேஸ்குமார்
வயது: 22
முகவரி:
307/1, கல்லல்ல,
பொலன்னறுவை.
பொழுது போக்கு:
பத்திரிகை.



பெயர்:
செல்வா
வயது: 28
முகவரி:
P.O.BOX-25585,
CODE NO-13116,
SAFAT, KUWAIT.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.



பெயர்:
எம். ஸபீர்
வயது: 18
முகவரி:
9 ரீ.சி.ரோட்,
ஏறாவூர்.01.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்:
எம். பைரூஸ்
வயது: 24
முகவரி:
P.O.BOX-93 WADI AL-DAWASIRAIRPORT-11991,
K.S.A.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை.

## யா(பா)ழ் பயணம்

கப்பலோட்டிக்
காவியம் படைத்தவர்கள்
கப்பலுக்காக
காத்திருக்கும் பரிதாப நிலை!
**
மன்னாரிலே
இன்னாரென்று தெரியாமல்
இருமாதங்கள்!
**
வவுனியாவிலே
கவனிப்பாரின்றி
பலமாதங்கள்!
**
திருகோணமலையிலே
திரியாத வீதிகளுமில்லை
வீடுகளுமில்லை
உதவி வேண்டி ஏறாத
அலுவலகப்படிகளுமில்லை!
**
மழைக்கடல் மக்களுக்குப்
பாதுகாப்பில்லை மாரிகாலத்தில்
பாதுகாப்பில் அனுமதியில்லை
கோடை காலத்தில்
உயிரைக் கொல்லும்
உளவியல் யுத்தம்– இதுதான்.
வ(ப)ழமைக்குத் திரும்பிவிட்ட
யாழ்ப்பாணத்திற்கான
பாழ்பட்ட பிரயாணம்!

**முல்லையூர் மயில்ஞானன்– முள்ளியவளை.**

## இந்த வாரம் உங்கள் பலன்

(03.05.1998 தொடக்கம் 09.05.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், புதன், சனி, செவ்வாய். |
| சிம்மம் | - இராகு. |
| கும்பம் | - வியாழன், கேது. |
| மீனம் | - வெள்ளி. |

சந்திரன்– கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசனப் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணவரவு குன்றும். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- உறவினர் இழப்பு, மனக் கலக்கம் | பகல் | 12 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| சனி- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண முடங்கல். | மு.ப | 10 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| சனி- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பலவித நன்மை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- மறைமுக எதிர்ப்பு, மனக் கிலேசம். | பி.ப | 2 | மணி |
| வெள்ளி- தூரஇடப் பயணம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| சனி- வீண் முயற்சி, பண விரயம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| புதன்- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பலவித பேறு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| சனி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண விரயம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக் கிலேசம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், பண விரயம். | பி.ப. | 3 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| சனி- பயனற்ற செயல், பணமுடங்கல். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பலவித நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| சனி- பெரியோர் உதவி, இனசன நன்மை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி மேன்மை, பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பண விரயம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், பணக் கஷ்டம். | பி.ப | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் இழப்பு, மனக் கவலை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பெரியோர் உதவி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | பகல் | 12 | மணி |
| சனி- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, தொழில் விருத்தி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், பணவரவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி- உறவினர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், மனக் கவலை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உறவினர் பகை. | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசனப் பகை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக் கிலேசம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1



படிப்பகம்

www.padippakam.com

## விடுமுறை விஜயம்

'நாளைக்குத்தான் லீவு நாளாச்சே.... நம் உறவினர்கள் வீட்டிற்குப் போய் வருவோமா?' என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படும் போது கீழ் கண்ட விஷயங்களை நினைவில் வைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.



❑ உறவினர் வீட்டிற்குச் சென்று 'இது ரொம்ப சின்ன வீடுங்க... ஒரு வசதியும் இல்லையே... எப்படித்தான் இந்த அறைக்குள் இருந்து குடும்பம் நடத்துறீங்களோ?' என்ற மாதிரியெல்லாம் கேட்கக்கூடாது. அவர்களது வருமானத்திற்குத் தக்கப்படி– அவர்களது சூழ்நிலைக்குத் தக்கபடியான வீட்டில் வசிப்பார்கள். அதை நீங்கள் விமர்சிக்கக் கூடாது. அதேபோல் அவர்கள், பிள்ளை வளர்க்கும் முறையையும் விமர்சனம் செய்யாதீர்கள்.

❑ நெருங்கிய உறவினர் வீடு என்றால், சமையலறை வரை செல்வதில் தவறில்லை. அல்லாத பட்சத்தில் வரவேற்பு அறையிலேயே அமருங்கள். உங்களுக்குக் குடிப்பதற்கு ஏதாவது எடுக்க உள்ளே செல்லும்போது, அவர்களோடு நீங்களும் உள்ளே செல்ல முயற்சிக்காதீர்கள்.

❑ உங்களுக்கு குடிப்பதற்கு ஏதாவது பானம் தந்தால் உங்களுக்கு அது பிடிக்காது விட்டாலும் அதை மரியாதையாக வாங்கி அருகில் வைத்துக்கொள்ளுங்கள்.

❑ இரவு நேரத்தில் உறவினர் வீடுகளுக்குச் சென்று தொல்லை கொடுக்காதீர்கள். அதே போல் காலை நேரத்தில் அவசர அவசரமாக வேலைக்கோ அல்லது வேறு எங்காவதோ போவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் போது, அங்கு போய் அமர்ந்து கொண்டு தொல்லை கொடுக்காதீர்கள்.

❑ நீங்கள் உறவினர் வீட்டுக்குச் செல்லும் போது அங்கு சூழ்நிலைகள் சரியில்லை என்றால் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளுங்கள். 'என்ன நடந்தது? என்ன நடந்தது?' என்று துருவித் துருவிக் கேட்காதீர்கள். வீட்டிலிருந்து வெளியேறும் போது ஒருமுறை மட்டும் 'போய் வருகிறேன்' என்று சொன்னால் போதும். மீண்டும் மீண்டும் 'சொல்லிப் போரடிக்காதீர்கள்.

## "மேக்-அப் போடுங்கள்"

அடிக்கடி மேக்கப் போடுவது சருமத்தைப் பாதிக்கும் என்பது பொதுவான ஒரு கருத்து. ஆனால் ஜப்பானைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் தகவல் நம்மைத் திகைக்க வைக்கிறது.

மேக்கப் சாதனங்களை உபயோகிக்காத பெண்களுக்கு அவற்றை உபயோகிக்கும் பெண்களைவிட சருமப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் இருபது சதவிகிதம் அதிகமாம்.

பகல் வேளைகளில் ஃபவுண்டேஷன் (முகத்திற்குப் பூசும் ஒரு வகை கிறீம்) உபயோகிக்கும்போது, அது சூரிய ஒளியின் பாதிப்பைத் தடுக்கும் திரையாக வேலை செய்து, அதன் மூலம் சருமம் கெட்டுப் போகாமலும் பாதுகாக்கிறதாம்.

மேக்கப்பை வெறுக்கும் பெண்களே! புற்றுநோயிலிருந்து உங்களது சருமத்தைக் காக்க மேக்கப்போடு புன்னகை பூக்கத் தயாராகுங்கள்.

## சமையலறை வெளிச்சம்



★ மாதத்தின் முதல் வாரத்திலேயே அந்த மாதத்திற்குத் தேவையான சமையல் சாமான்களைப் பட்டியல் போட்டு, ஒரு மாத காலத்திற்கு வாங்கி வைத்துவிட்டால், நினைத்து நினைத்து அவ்வப்போது வாங்கும் தொல்லையிலிருந்து விடுபடலாம். நேரமும் மிச்சம். அதேபோல காய்கறி மற்றும் பழங்களையும் வாரத்திற்கு ஒருமுறை நன்கு யோசித்து வாங்கி குளிர்சாதனப் பெட்டியில் பத்திரப்படுத்தி விட்டால், தினமும் சந்தைக்குச் செல்லும் வேலை இல்லை.

★ சமையலறையில் இரண்டு வேலைகளை ஒரே நேரத்தில் செய்யக் கற்றுக் கொண்டால் சமைக்கும் நேரம் பாதியாகக் குறையும். உதாரணமாக, அடுப்பில் குழம்பைக் கொதிக்க வைக்க விட்டுப் பாத்திரங்களைக் கழுவலாம். குக்கரை வைத்து விட்டுக் காய்கறிகளை நறுக்கலாம்.

★ வேலை குறைவான நேரங்களில் கீரை,போஞ்சி போன்ற காய்கறிகளை நறுக்கும் வேலைகளை வைத்துக்கொண்டால் சமைக்கும் நேரத்தில் அவசரப்படத் தேவையில்லை.

★ எண்ணெய், நெய், ஊறுகாய் போத்தல்களை வைக்கும் இடத்தில் ஒரு பொலித்தீன் பேப்பரை வைத்துவிட்டால் சுத்தப்படுத்துவது மிகவும் எளிது.

★ சமையலறையை நல்ல வெளிச்சமாகவும் காற்றோட்டமாகவும் வைத்திருந்தால்தான் அங்கு வேலை செய்யத் தோன்றும். அடுப்பை, எப்போதும் ஒரு மேடையின் மீதே வையுங்கள். சமையலறையில் ஒரு நாற்காலியையோ அல்லது ஸ்டூலையோ வைத்திருங்கள். வேலையின் நடுவே அவ்வப்போது உட்கார்ந்து கொண்டால் எளிதில் களைப்படையமாட்டீர்கள். வேலையும் சீக்கிரமாக முடியும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை DQ

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்:..........................
கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 09-05-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 33

பிரிட்டிஷ் அரச குடும்பத்தவரில் எட்டாவது எட்வேட் மன்னர்தான் காதலை கௌரவித்தவர்.

வல்லீஸ் சிம்சன் என்ற அமெரிக்கப் பெண்ணை எட்டாவது எட்வேட் மன்னர் காதலித்தார்.



மகாராணி தந்தையுடன்

வல்லீஸ் சிம்சன் இரண்டு தடவை விவாகரத்து செய்துகொண்டவர்.

விவாகரத்து செய்த எவரையும் அரச குடும்பத்தினர் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பது சட்டம்.

எட்வேட் மன்னரோ வல்லீஸ் சிம்சனை மறக்கமுடியாதவராக இருந்தார்.

'மணம் முடிப்பேன்' என்று வாக்குறுதி கொடுத்து, அந்த அமெரிக்க அழகியுடன் வரம்பு கடந்து பழகினார் மன்னர்.

வல்லீஸ் சிம்சனும் மன்னரின் காதலை மதித்தாள். "சட்டம் குறுக்கிடுமானால், நாங்கள் நண்பர்களாய் இருப்போம். எனக்காக மன்னர் பதவியை இழக்க வேண்டாம்" என்று கூறினாள்.

எட்வேட் கேட்கவில்லை. "மன்னனே தன் காதலியை ஏமாற்றினால், காதலுக்கு யார்தான் மரியாதை தரப்போகிறார்கள்? நான் உன்னைக் கைவிடமாட்டேன்" என்றார்.

1936ம் ஆண்டு தனது அரச பதவியை தூக்கி எறிந்துவிட்டு, வல்லீஸ் சிம்சனை கைபிடித்தார் எட்டாவது எட்வேட்.

அதன்பின்னர் அவரது தம்பியாரான ஆறாவது ஜோர்ஜ் மன்னர் பதவி ஏற்றார்.

இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஆறாம் ஜோர்ஜ் மன்னரே பதவியில் இருந்தார்.

இவர்களுக்கு முன்பிருந்த ஏழாம்

கள் செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்தன.

டயானாவோ அதனைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளும் கட்டத்தை தாண்டியிருந்தார்.

கப்ரன் ஜேம்ஸ் ஹெவிட்டை டயானா தினமும் சந்தித்து வந்தார். பத்திரிகைகள் மோப்பம் பிடித்து விட்டதால் வாரத்தில் ஒருநாள் மட்டும் சந்திப்பை வைத்துக் கொண்டனர்.

பலநாட்களின் பின்னர் சந்திக்கும்போது நெருக்கம் அதிகமானது. அந்த வாய்ப்பை ஜேம்ஸ் ஹெவிட் பயன்படுத்திக் கொண்டான்.

ஒருநாள் தனது துயரங்களை ஹெவிட்டிடம் சொல்லி டயானா ஆறுதல் தேடியபோது, ஆறுதலாக டயானாவை வருடிய ஹெவிட்டின் கரங்கள், டயானாவின் ஆடைகளையும் களையத் தொடங்கின.

அதுவரை ஜேம்ஸ் ஹெவிட்டின் ஆசைக்கு இணங்க மறுத்த டயானா அன்று ஜேம்ஸ் ஹெவிட்டிடம் தன்னை ஒப்படைத்தார்.

தனது நீண்டகால ஆசை நிறைவேறிய சந்தோசத்தில் நெற்றி வியர்வையை துடைத்தபடி, டயானாவின் நெற்றியில் முத்தமிட்டான் ஹெவிட்.

அதுதான் ஜேம்ஸ் ஹெவிட் கொடுத்த கடைசி முத்தம். அதன் பின்னர் டயானாவை ஹெவிட் சந்திக்கவில்லை.

"அன்றும் டயானா ஹெவிட்டை தவிர்த்திருப்பார். ஆனால் அன்று காலையில்தான் கமீலாவும் சாள்ஸ்சும், சாள்ஸின் அறையில் ஒருவரை ஒருவர் அணைத்தபடி முத்தமிட்டுக் கொண்டிருந்ததை டயானா பார்த்தார். இளவரசர் வில்லியம்ஸை தேடிச் சென்ற போதுதான் அக் காட்சியை டயானா காண நேர்ந்தது.

ஹெவிட்டுடன் டயானா உறவு கொண்ட போது, அன்று காலையில் கண்ட காட்சிக்கு பழிவாங்கும் உணர்ச்சிதான் டயானாவின் உள்ளத்தில் மேலோங்கி இருந்திருக்க வேண்டும்." என்று டயானாவின் தோழி ஒருவர் பின்னர் கூறினார்.

ஹெவிட்டுடன் தனக்கு உடல் ரீதியான தொடர்பு இருந்ததை டயானா ஒப்புக்கொண்ட பின்னரே டயானாவின் தோழி அக் கருத்தை வெளியிட்டிருந்தார்.

### பெரும் கடன்

இக் காலகட்டத்தில் வெளியான மற்றொரு செய்தியும் அரச குடும்பத்தை உலுக்கியது.

இளவரசர் ஆண்ட்ரூ வின் முன்னாள் மனைவி சாரா ஏராளமாகக் கடன் வாங்கி செலவு செய்கிறார் என்று செய்திகள் வெளியாகின.

அக்கதைகளில் 'பஜ்ஜி' என்றொரு சிறிய ஹெலிகொப்டர் சாகசங்களைப் புரியும்.

அந்தக் காட்டூண் கதைகளுக்கு பிரிட்டனிலும் நல்ல கிராக்கி இருந்தது.

அக் கதைகள் மூலம் கணிசமான தொகையை 'சாரா' வருமானமாகப் பெற்றார். ஆனாலும் வரவுக்கு மீறிய செலவாளியாக இருந்தார்.

காட்டூண் கதைகளை பாராட்டச் சென்ற கல்லூரி மாணவன் ஒருவனை சாரா கட்டியணைத்து முத்தமிட்டதாக ஒரு தகவல் வெளியாகியது.

அரச குடும்பத்தை அச் செய்தி சங்கடத்தில் ஆழ்த்தியது.

அதுபற்றி சாராவும், "எனக்கு பிடித்தால் யாருக்கு வேண்டுமானாலும் முத்தமிடுவேன். பிடிக்காதவர்கள் முத்தமிட வந்தால் சத்தமிடுவேன்" என்பதுபோல ஒரு பத்திரிகைக்கு கூறியதால் அரச குடும்பம் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டது.

அரச குடும்பத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியே தீருவது என்பது போன்றே சாராவின் நடவடிக்கைகள் அமைந்தன.

ஆண்ட்ரு பற்றியும் தன் நண்பர்களுடன் அந்தரங்கமாக ஜோக்கடிக்கிறார் சாரா என்றும் பத்திரிகைகள் எழுதின.

'ஆண்ட்ருவும் அவர் சகோதரர் போல, வயதான துணை தேடுகிறாராக்கும். பேசிக் கொண்டு மட்டும் இருக்க அதுதான் இலாய்க்கு' என்று சாரா சொல்கிறார் என்று பத்திரிகை ஒன்று செய்தி போட்டு ஆண்ட்ருவை வெறுப்பேற்றியது.

சாராவோ எவ்வித தயக்கமும் இல்லாமல் தன் ஆண் நண்பர்களுடன் சுற்றினார்.

தனது காட்டூன் பாத்திரமான 'பஜ்ஜி'யை அமெரிக்க தொலைக்காட்சியிலும், புத்தகங்களிலும் இடம்பெற அனுமதிக்கும் ஒப்பந்தம் ஒன்றிலும் கையொப்பமிட்டார்.

### சாள்ஸின் காதலி

இளவரசர் சாள்ஸின் அவுஸ்திரேலிய காதலி டேல் ட்றையன் அடிக்கடி சாள்ஸ்சை



ஜேம்ஸ் ஹெவிட்டுடன் டயானா

## காதலுக்காக முடி துறந்த மன்னர்

எட்வேட்டும் காதல் மன்னர்தான். அவருக்கு இரண்டு மனைவிகள்.

ஒருவர் மகாராணி அலெக்ஸாண்ட்ரா, இன்னொரு மனைவி அலிஸ் கெப்பல். இரண்டு பேருடனும் பிணக்கு இல்லாமல் சவாலே சமாளி என்று வாழ்ந்து காட்டினார்.

இளவரசர் சாள்ஸ்- டயானா பிரிவு உறுதியாகப் போகிறது என்று தெரிந்ததும் மேற்கண்ட முன்னாள் வரலாறுகளை பிரிட்டிஷ் பத்திரிகைகள் அசை போட்டன.

விவாகரத்து செய்து கொள்ளவேண்டுமானால் சாள்ஸ்சும், டயானாவும் மூன்றரை ஆண்டுகள் பிரிந்திருக்க வேண்டும். அதன்பின்னரே விவாகரத்து செய்து கொள்ளலாம்.

"இருவரும் விவாகரத்துச் செய்தாலும் அவர்களுடைய பரம்பரை அந்தஸ்தில் மாற்றம் இருக்காது" என்று மகாராணி எலிசபெத் அறிவித்தார்.

மகாராணியே விவாகரத்துப் பற்றி பேசிவிட்டதால், பிரிவு உறுதி என்பது உலகுக்கே தெரிந்த சங்கதியானது.

### ஹெவிட்டுக்கு யோகம்

டயானாவின் விவாகரத்து பற்றியே பத்திரிகை வரிப்பணத்தில் கொட்டமடிக்கிறார்கள்' என்று திட்டத் தொடங்கிவிட்டனர்.

டயானாவைத்தவிர பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் வேறு எவரையும் மக்கள் பொருட்படுத்தவில்லை.

சாரா உல்லாசங்களிலும், சல்லாபங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்த போதும், காட்டூண் கதைகளை எழுவதில் வல்லவர்.

சிறுவர்களுக்காக அவர் எழுதிய காட்டூண் கதைகள் ரொம்பப் பிரபலம்.

பிரிட்டனில் இருந்து அமெரிக்காவுக்கு சென்ற சாரா, அங்கு தன் ஆண் நண்பர்களுடன் கும்மாளமடித்தார்.

சாராவின் கடன் கொஞ்ச நஞ்சமல்ல, 85 இலட்சம் ரூபாய்கள். பிரிட்டிஷ் மக்கள் செய்திகளைப் படித்தனர். 'பிரிட்டிஷ் அரச குடும்பமே ஊதாரிக் குடும்பம்தான். எங்கள்



ஆறாவது ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழா 1937ம் ஆண்டு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது. மன்னருக்கு முன்புறமாக எலிஸபத்தும் அவர் தங்கை மார்கிரட்டும் காணப்படுகின்றனர். 1000 ஆண்டுகளாகப் பராமரிக்கப்பட்டு வரும் பாரம்பரிய உடைகளுடன் அரச குடும்பத்தினர் காணப்படுகின்றனர்.

சந்தித்தார்.

கமீலாவுக்கு இத் தொடர்பு அரசல் புரசலாகத் தெரியும். ஆனால் சாள்ஸிடம் நேரடியாக கேட்டதில்லையாம்.

கமீலாவிடம் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லிவிட்டு அடிக்கடி அவுஸ்திரேலியா செல்லுவார் சாள்ஸ்.

டேல் ட்றையன் கமீலாவைவிட இளமையானவர். வசீகரமானவர். டேல் ட்றையனும், சாள்ஸ்சும் தழுவிக் கொண்டிருக்கும் புகைப் படங்கள் பத்திரிகைகளில் வெளியாகின.

டேல் ட்றையன் திருமணமானவர். அவரது கணவர் ஒரு பத்திரிகைக்கு பேட்டி அளித்தார். "எனது மனைவி சாள்ஸின் காதலியல்ல. சாள்ஸின் மன உளைச்சலை போக்குவதற்கு அவள் உதவுகிறாள். அவ்வளவுதான்!"

ஆனால் புகைப்படங்கள் உண்மையை பறைசாற்றின. மன உளைச்சலை மட்டுமல்ல. வேறு உளைச்சல்களையும் போக்குகிறார் என்று ஆதாரம் காட்டின.

அப்போது சாள்ஸ் நண்பர் வட்டாரம் கூறியது; "சாள்ஸ்சும் எத்தனை நாள்தான் தனிமையில் வாடுவார்? அவருக்கும் ஒரு துணை தேவைதானே?!"

(அடுத்த வாரமும் வரும்)


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

வா. அரியமலர், குருமன்காடு. வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசகவாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.


அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்





இன்பக் கதைக ளெல்லாம்
-உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ?
அன்பு தருவதிலே-உனை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?
-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறுகதை

# ஓர் பக்தரும் யோகியும்

ஓர் ஊரில் பக்தர் ஒருவர் தன் சீடர்களோடு வாழ்ந்து வந்தார். அவர் அவ்வூர் மக்களுக்கு உபதேசங்களையும் பக்தியையும் போதித்து வந்தார்.

ஒருநாள் அந்த பக்தரைச் சந்திப்பதற்காக வெளியூரிலிருந்து யோகி ஒருவர் வந்திருந்தார்.

மிகவும் எளிமையான தோற்றத்துடன் இருந்த பக்தரைக் கண்ட யோகி,

"இந்த ஊரில் உள்ளவர்கள் உம்மைப் பெரிய மகான் என்பது போல பேசுகிறார்களே. ஆனால் உம்மைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே!" என்று ஏளனமாகக் கேட்டார்.


அதற்கு அந்த பக்தர்,

"அப்படியெல்லாம் இல்லை நான் ஒரு சாதாரண பக்தன். அவ்வளவுதான்" என்றார்.

"நீர் சாதாரண ஆள் தான் என்று உம்மைப் பார்த்தாலே தெரிகிறதே. நான் யார் தெரியுமா?." என்று கேட்டார் யோகி.

"நான்தான் சாதாரண ஆள் என்று சொன்னேனே. அதனால் உங்களைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. நீங்கள்தான் யார் என்று சொல்ல வேண்டும்?" என்று பரிவுடன் கூறினார் பக்தர்.

"நான் ஒரு பெரிய யோகி! என் யோக சக்தியால் எதையும் சாதிப்பேன்," என்று செருக்குடன் சொன்னார் யோகி.



"அப்படியா? மிகவும் சந்தோஷம். நீங்கள் உங்கள் யோக சக்தியால் ஏதாவது சாதித்திருக்கிறீர்களா?" என்று கேட்டார் பக்தர்.

"நிறைய சாதித்திருக்கிறேன். இப்போது கூட உம்மைப் பார்க்க வருவதற்காக வழியில் இருந்த ஆற்றைக் கடந்தது எப்படித் தெரியுமா?" என்று கேட்டார் யோகி.

"எப்படி?" என்று கேட்டார் பக்தர்.

"எனது யோக சக்தியால்தான் ஆற்றைக் கடந்து வந்தேன்," என்று பெருமையாகக் கூறினார் யோகி.

அதைக் கேட்டுச் சிரித்த பக்தர்,

"ஆற்றைக் கடக்க யோக சக்தி தேவைதானா? படகுக்காரனிடம் ஒரு ரூபாய் கொடுத்தால் உங்களை இங்கு கொண்டு வந்து விட்டிருப்பானே. உங்கள் யோக சக்தி ஒரு ரூபாய் அளவு தானா?" என்று கேட்டார்

இதைக்கேட்ட யோகி வெட்கித் தலை குனிந்தார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**கிரி:ஃபின் கழுகு:**
← ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் இருந்த இக்கழுகு 118 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தது.




↑ **78 முனைகள்:**
அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸ் மாநிலத்திற்கு அருகே 1892 ஆம் ஆண்டு மான் ஒன்று சுடப்பட்டது. இந்தமான் 78 முனைகள் உள்ள கொம்புகளைக் கொண்டிருந்தது.

↓ **ஸ்னோர்க்கேல் நத்தை:**
நீருக்கடியில் இருக்கும்போது இந்த நத்தை தலையில் இருந்து நீட்டிக்கொண்டிருக்கும் இருகுழாய்கள் வழியாக மூச்செடுக்கும்.



**ஆங்க்லர் மீன்:**
→ கடலின் அடித்தளத்தில் வாழும் இந்த மீன் தனது திறந்த வாயிலிருந்து வெளிவரும் ஒளியின் உதவியால் இரையை ஈர்க்கும்.



## வாரம் ஒரு நாடு

### கமரூன்



**தலைநகர்**– யாவுண்டே
**பரப்பு**– 4,75,442 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**– 1.32 கோடி
**மொழி**– ஆங்கிலம், ஃபிரெஞ்ச்
**எழுத்தறிவு**– 65%
**சமயம்**– கிறிஸ்தவம், பழங்குடி, இஸ்லாம்
**நாணயம்**– ஃபிரான்ஸ் சி.எஃப்.ஏ.
**தனிநபர் வருமானம்**– 1010 டொலர்.

**அமைவிடம்:**
ஆபிரிக்காவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ளது. வடமேற்கில் நைஜீரியாவும்; வடகிழக்கில் சாட்டும்; கிழக்கில் மத்திய ஆபிரிக்க குடியரசும்; தெற்கில் காங்கோ, காபோன் மற்றும் ஈக்வடோரியல் கினியாவும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**
ஜெர்மன் காலனியாக இருந்த கமரூன், 1960ல் குடியரசானது. 1961ல் பிரிட்டிஷ் உடன் கமரூன் இணைந்து கமரூன் கூட்டுக் குடியரசானது. 1984ல் கமரூன் குடியரசு என்று பெயர் மாற்றம் பெற்றது.

**பொருளாதாரம்:**
மக்கள் தொகையில் 80 சதவீதமும் விவசாயம் சார்ந்துள்ளனர். தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் இல்லை. கொக்கோ, தாவர எண்ணெய், கோப்பி போன்றவை முக்கிய உற்பத்திப் பொருட்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.05.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 243
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 241

**பரிசுக்குரியவர்:**
எஸ். வாசன்,
ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, அட்டன்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எ.ஃப். சில்மியா, பாத்திமா முஸ்லிம் கல்லூரி, கொழும்பு. | கே. சுபாஷினி, றோ.க.த.வித்தியாலயம், வத்தளை. |
| வி. ரவிகரன், ஸ்ரீ முத்துமாரியம்மன் தமிழ் மகா வி.,கம்பளை. | சி. தர்மேந்திரன், தமிழ் மகா வித்தியாலயம், ஏறாவூர்-04. |
| எஸ். வினிதா, சைவமங்கையர் கழகம், வெள்ளவத்தை. | எம். ரஸ்மினா, அல்-பதுரியா வித்தியாலயம், கஹகொல்ல. |
| எம். சதீஷன், கடவளை தமிழ் மகா.வித்., கினிகத்தனை. | ஜெ. ஜனனி, சென். மேரீஸ் கல்லூரி, நாவலப்பிட்டி. |
| ஏ. மைதிலி, ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரி, திருமலை. | வி. குகனேந்திரன், தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா. |

## ஃபக்ஸ் (FAX)

- ஃபக்ஸ் என்றால் என்ன?
தொலைபேசி லைன் மூலம் படங்களையோ அல்லது கடிதங்களையோ அனுப்பும் முறைக்கு ஃபக்ஸ் என்று பெயர். 'ஃபேஸிமைல் ட்ரான்ஸ்மிஷன்' என்பதுதான் இதன் முழுப்பெயர்.
- ஃபக்ஸ் மூலம் எப்படி படங்கள், கடிதங்கள் அனுப்பப்படுகின்றன?
தொலைபேசியுடன் ஃபக்ஸ் மெஷின் இணைக்கப்பட்டிருக்கும். கடிதம் அல்லது படம் அனுப்ப வேண்டுமானால் அதை ஃபக்ஸ் இயந்திரத்திற்குள் செருகி, அதை அனுப்ப வேண்டியவரின், ஃபக்ஸ் உடன் இணைக்கப்பட்ட தொலைபேசி எண்களைச் சுழற்ற வேண்டும். ஃபக்ஸ் மெஷினுக்குள் இருக்கும் 'ஸ்கேனர்' என்னும் இயந்திரம், இந்தச் செய்திகளை எலெக்ரிக் சிக்னல்களாக மாற்றி, தொலைபேசி லைன் மூலமாக நாம் அனுப்ப வேண்டியவரின் ஃபக்ஸ் மெஷினில் நாம் அனுப்பியது போன்ற செய்தி உருவாகி விடும்.
- ஃபக்ஸ் மெஷின் மூலம் முதன்முதலாக செய்திகள் எங்கே பரிமாறப்பட்டன?
ஃபிரான்ஸ் நாட்டில் பாரிஸ் நகரத்திற்கும், லயகாஸ் நகரத்திற்கும் இடையே வரைபடங்களுடன்கூடிய செய்திகள் பரிமாறப்பட்டன.
- ஃபக்ஸ் மூலம் படங்கள் முதன் முதலில் எப்போது அனுப்பப்பட்டன?
பாரிஸில் இருந்து இலண்டனில் வெளியாகும் 'டெய்லி மிரர்' என்ற பத்திரிகைக்கு 1907ம் ஆண்டு முதன் முதலாக படங்கள் அனுப்பப்பட்டன.



- ஃபக்ஸ் மூலம் செய்திகள் அல்லது படங்கள் அனுப்புவதற்கு அனுப்பும் செலவு என்ன?
நாம் எந்த இடத்திற்கு அனுப்ப இருக்கிறோமோ, அந்த இடத்திற்கு ஆகும் தொலைபேசி செலவுதான் ஃபக்ஸ் மூலம் செய்திகள் அல்லது படங்கள் அனுப்பும் செலவாக வசூலிக்கப் படும்.

## மாமேதையான கோன்ஃபூசியஸ்

"உன்னை மற்றவர்கள் எவ்வாறு கருதக்கூடாது என்று விரும்புகிறாயோ அதேபோல் பிறரையும் நீ கீழ்த்தரமாகக் கருதிவிடாதே!"

இவ்வாறான அரிய போதனையை இற்றைக்கு 25 நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த மாமேதையான கொன்ஃபூசியஸ் கூறினார். சீனாவில் கிறிஸ்துவுக்கு முன் 5ம் நூற்றாண்டில் பிறந்து மறைந்த ஈடிணையற்ற தத்துவஞானியான இவர், ஒரு பெரும் சமுதாய மறுமலர்ச்சியாளருமாகத் திகழ்ந்தார். இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் அவர் புகட்டிய போதனைகள் இன்றும் சீன மக்களுக்கு மட்டுமல்லாமல், உலக மாந்தர் அனைவருக்குமே வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்கின்றன.

மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளை கொன்ஃபூசியஸ் வகுத்துக் கொடுத்தார். இதனால் கி.மு.120ம் ஆண்டில் அவருடைய போதனைகளை ஒரு மதக் கோட்பாடாகவே சீனா பிரகடனப்படுத்தியது.



மூதாதையரைக் கனம் பண்ணுதல், ஒழுக்கசீலர்களாக வாழ்தல், பிரிவுகளாலும் பேதங்களாலும் மனித சமுதாயம் பிளவுபடலாகாது போன்ற நன்னெறிகளை அவர் போதித்தார்.

தனது எட்டாவது வயதில் தனது குடும்பத்தாருக்காக உழைக்க வேண்டிய பொறுப்புகளை ஏற்ற கொன்ஃபூசியஸ், தனது 16வது வயதில் திருமணம் முடித்தார். உலக ஆசைகளில் மூழ்காமல் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு தமது 71வது வயதில் காலமானார். அவருடைய போதனைகள் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமேதுவுமில்லை.

## சூரியன்

* சூரிய மண்டலத்திலுள்ள கோள்களின் எண்ணிக்கை ஒன்பது.

* சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள கோள் புதன்; மிகத் தொலைவில் உள்ள கோள் புளூட்டோ.

* சூரியனின் விட்டம் 13 இலட்சத்து 92 ஆயிரத்து 520 கிலோமீட்டர்.

* சூரியன் தன்னைத்தானே சுற்ற ஆகும் காலம் 25 நாட்கள், 9 மணித்தியாலம், 7 நிமிடம்.


* சூரிய ஒளிக்கதிர் பூமியை வந்தடைய எடுக்கும் நேரம் 8 நிமிடங்கள்.

* நட்சத்திர மண்டலத்தில் சூரியனின் சுற்று வேகம் வினாடிக்கு 250 கிலோமீட்டர்.

* சூரியனின் மொத்த வெப்பநிலை 15 மில்லியன் கெல்வின்.

* பூமியை விட சூரியனின் பரப்பு 12 ஆயிரம் மடங்கு பெரியது.

## செங்கடல்



ஆபிரிக்காவுக்கும் அரேபியாவுக்கும் இடையே இந்தியப் பெருங்கடலின் ஒரு பகுதியாக செங்கடல் உள்ளது. மத்திய தரைக்கடற் பகுதிக்கும் இதற்கும் இடையில் ஒரு குறுகலான நிலப்பரப்பு உள்ளது. இதில் சூயஸ் கால்வாய் அமைந்துள்ளது. மத்தியதரைக் கடலில் இருந்து சூயஸ் கால்வாய் வழியாக செங்கடலுக்கு வந்து அதன் வழியாகக் கீழை நாடுகளுக்குப் பயணம் செய்ய இது உதவுகிறது.

பிறகடல் நீரைப் போல் அல்லாமல் இக்கடலின் நிறம் சிவந்து காணப்படுவதால் இதற்கு செங்கடல் (RED SEA) என்னும் பெயர் வந்தது. பல இலட்சக் கணக்கான சிவப்பு நிறப்பாசிச் செடிகள் அதிகம் இக்கடலில் இருப்பதால்தான் இது சிவப்பு நிறம் கொண்டுள்ளது.

www.padippakam.com

ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:

திக் திக் திக் 09

# நந்தினி 440 வோல்ட்

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

சாயந்தரம் நான்கு மணி. ஐ.சி. யூனிட்டுக்கு வெளியே-வாகீசன், பரிமளம், பாரி, விமல், சொப்னா, டிரைவர் கிருஷ்ணன், இந்தக் கும்பலோடு புதிதாய் ஜெயில் சூப்ரிண்டெண்ட் பாண்டுரங்கனும் சேர்ந்து கவலையோடு நின்றிருந்தார். நினைத்து நினைத்துச் சொன்னார்.

"மத்தியான லஞ்ச் உங்க வீட்லதான் அங்கிள்... கண்டிப்பா வர்றேன்னு ஃபோன் பண்ணிச் சொன்ன பொண்ணுக்கு இப்படி ஆயிட்டுதே...? ஏம்பா...!



பாரி.... கார் ரிப்பேர்ன்னு தெரிஞ்சும் எதுக்காக அதுல வரணும்...? பஸ்ஸில வந்திருக்கலாமே...?"

பாரி பதில் சொல்லாமல் மோவாயைத் தடவிக்கொண்டே எங்கோ பார்த்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்த விமல் எரிச்சலோடு சொன்னான்: "காருக்கும், மனுசனுக்கும் எந்த நேரத்துல எதுவும் வரலாம் அங்கிள்... ரிப்பேரான காரை சரிபார்த்துத்தான் கிருஷ்ணன் எடுத்துட்டுப் போயிருக்கான்."

"நந்தினியை யாராச்சும் உள்ளே போய்ப் பார்த்தீங்களா?"- பாண்டுரங்கன் கேட்க எல்லோருமாய் உதட்டைப் பிதுக்கினார்கள்.

"டாக்டர்ஸ் யாரையுமே அலவ் பண்ணலை அங்கிள்... நந்தினியோட ப்ளட் குரூப் ரேர் ப்ளட் க்ரூப்... அது கிடைக்காமே ரொம்பவும் சிரமப்பட்டிட்டிருந்தோம்.. கடைசியில பொலிஸ் கஸ்டடியில இருந்த ஒரு பேஷண்ட்டோட ப்ளட் அதிஷ்டவசமா நந்தினியோட ப்ளட் க்ரூப்பாவே அமைஞ்சுடுச்சு. அவனோட ப்ளட்டைக் குடுத்துத்தான் ஆபரேஷன் பண்ணிட்டிருக்காங்க... ஆபரேஷனை ஆரம்பிச்சு ரெண்டு மணி நேரமாச்சு...!"

விமல் சொல்லிக்கொண்டிருக்கும்போதே நர்ஸ் ஒருத்தி யூனிட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். பாண்டுரங்கனும் பாரியும் அவளிடம் ஓடினார்கள்.

"சிஸ்டர்...?"

அவள் புன்னகைத்தாள். "ஆபரேஷன் சக்சஸ்... டாக்டர் வெளியே வருவார். மத்த விவரங்களை அவர்க்கிட்டே கேட்டுக்குங்க...!"

அவள் தண்ணீர் ததும்பும்- இரத்தப் பஞ்சுத் துணுக்குகள் மிதக்கும் ட்ரேயுடன் நகர்ந்து போக, டாக்டருக்காகக் காத்திருந்தார்கள்.

ஐந்து நிமிஷம் நழுவ-

டாக்டர் குணசீலன் வெளியே வந்தார். தன்னைச் சுற்றிலும் நின்று ஆர்வமாய்ப் பார்க்கும் முகங்களைப் பார்த்து புன்னகைத்தார்.

"இனி பயமில்லை.... போதுமான இரத்தம் குடுத்ததுல மிஸஸ் நந்தினிக்கு ஞாபகம் வந்துடுச்சு... ரெண்டு கண்ணுலேயும் 'க்ளாஸ் பீஸ்' ஏறியிருக்கு... அவங்களால பார்க்க முடியுமா, முடியாதாங்கிறதை நாளைக்குத்தான் சொல்ல முடியும்...!"

"நாங்க நந்தினியைப் பார்க்கலாமா டாக்டர்?"- பாண்டுரங்கன் ஆர்வமாய்க் கேட்க, குணசீலன் சொன்னார்:

"தாராளமாக் போய்ப் பார்க்கலாம்... ஆனா அதிகமா பேச்சு தராதீங்க..."

"எஸ் டாக்டர்...!"

எல்லோரும் உள்ளே போனார்கள்.

அறைக்கு நடுவே-

தெரிந்த கட்டிலில்- நந்தினி கிடத்தப்பட்டிருந்தாள். மூக்குத் துவாரங்களும், உதடுகளும், தாடைப் பிரதேசமும் தவிர, முகத்தின் மற்ற பாகங்களும், பின்னந்தலை பூராவும் தும்பைப் பூவாய் பாண்டேஜ் தெரிந்தது. மணிக்கட்டில் செருகியிருந்த ரப்பர் குழாயின் ஊசி வழியே சேலைன் வாட்டர் போய்க் கொண்டிருந்தது. விரல்களிலும் முழங்கைகளிலும் பிளாஸ்திரி தெரிந்தது.

பாரி, முதல் ஆளாய் அவளை நெருங்கினான்.

"ந...நந்தினி...!"

பாரியின் குரலைக் கேட்டதுமே- நந்தினியின் வலதுகையும் உதடுகளும் அசைந்தன.

"எ...எ....என்னங்க?"

பாரி அவளுடைய கையைப் பற்றிக் கொண்டான்.

"ஒண்ணும் பயப்படாதே... நந்தினி...!"

அவள் புன்னகைத்தாள்.

"எனக்கு என்னங்க பயம்...? உங்களுக்கும் கிருஷ்ணனுக்கும் அடி ஒண்ணும் பலமா படலையே...?"

"லேசா சிராய்ப்புதான்...!"

"ஆமா... என்னோட கண்ணு ரெண்டையும் எதுக்காகக் கட்டியிருக்காங்க...?" கண்களில் கண்ணாடித் துண்டு ஏறியிருக்கிறது என்று சொன்னால்- நந்தினி பயத்தில் மறுபடியும் மயக்கமாகிவிடுவாள் என்று நினைத்தான் பாரி,

"கண்ணுல ஏதோ லேசா அடிபட்டிருக்காம்... மருந்து ஊத்திக் கண்ணைக் கட்டியிருக்காங்க...!"

நந்தினி மறுபடியும் உதடுகளைப் புன்னகையில் விரித்தாள். "ஏங்க பொய் சொல்றீங்க..? என் ரெண்டு கண்ணிலேயும் க்ளாஸ் பீஸ் குத்தியிருக்கிறதா டாக்டர் இன்னொரு டாக்டர்கிட்ட சொல்லிட்டிருந்தாரே...!"

நந்தினி தொடர்ந்தாள்: "எஸ்டேட்டிலிருந்து எல்லாரையும் வரவழைச்சுட்டீங்க போலிருக்கே... அத்தை அழற சத்தம் கேட்குது...மாமாவும் அழறாரா? எனக்கு இடது பக்கத்தில சொப்னா நிக்கிறான்னு நினைக்கிறேன்...செண்ட் வாசனை வருது... விமல் வரலையா?"

"அண்ணி...!"

"என்ன விமல்...எஸ்டேட்டை விட்டு எல்லாரும் வந்திட்டீங்களா...?" பல்வரிசை தெரிய சிரித்த நந்தினியை விழிகள் விரியப் பார்த்தான் பாரி.

ஒரு தலை வலியோ, காய்ச்சலோ வந்து விட்டால், நந்தினி பயந்துபோய் அவனைப் படுத்துகிற பாடு- மனசுக்குள் வழிந்தது. "என்னங்க... எனக்கு என்னமோ ஆயிடுச்சு... மாத்திரை சாப்பிட்ட பின்னாடியும் தலை ஏன் இப்படி வலிக்குது...? டாக்டர் வீட்டு வரைக்கும் போயிட்டு வரலாங்களா?" என்று அவள் பயப்படுகிற பயம் பாரிக்கு சில சமயங்களில் எரிச்சலையே ஊட்டியிருக்கிறது.

ஆனால் இத்தனைப் பெரிய விபத்தைச் சந்தித்த பிறகும்-

கண்ணுக்குள் கண்ணாடித் துண்டுகள் குத்தியிருக்கிற விஷயம் தெரிந்த பின்பும்-

நந்தினி பயப்படவில்லை. அந்த பழைய பயம் அவளிடம் இல்லை.

பாரி பிரமிப்பாய் அவளையே பார்த்தான்.

பாண்டுரங்கன் குரல் கொடுத்தார்.

"அம்மா... நந்தினி..! என் வீட்டுக்கு மத்தியானம் சாப்பிட வர்றேன்னு சொல்லிவிட்டு இப்படி வந்து படுத்திட்டியேம்மா...?"

தலையை அவர் இருந்த திசைப் பக்கமாய் நகர்த்தினாள் நந்தினி, "அட... அங்கிள் நீங்களும் வந்துட்டீங்களா...? உங்க வீட்டுச் சாப்பாடு எங்கே போயிடப் போவுது..? நானும் என்னோட ஹஸ்பெண்ட்டும் கண்டிப்பா சாப்பிட வருவோம்...!"

நர்ஸ் பேச்சில் குறுக்கிட்டாள்.

"அதிகமா பேசாதீங்க... டாக்டர் சொல்லியிருக்கார்... நீங்க ரெஸ்ட் எடுக்கணும்... பார்க்க வர்றவங்களும் பேச்சு குடுக்காதீங்க... வெறுமனே பார்த்துட்டுப் போங்க... போதும்...!"

எல்லோரும் மெதுவாய் நகர்ந்து கதவை நோக்கிப்போக, பாரி மட்டும் நந்தினியின் அருகே வந்து-அவள் கையைத் தொட்டான்.

"நந்தினி."

"என்னங்க...!"

"இந்த கார் ஆக்ஸிடெண்ட்... நீ.. ஹாஸ்பிடல்ல இப்படி படுத்திருக்கிறது... இப்படி எதுவுமே உனக்கு பயமாயில்லையா...?"

"எதுக்காக பயப்படணும்...? உங்களுக்குப் பயமா இருக்கா...?"- சொல்லிவிட்டு பாரியின் கையைத் தட்டிக் கொடுத்தாள்.

"போங்க! தைரியமா போங்க! மாமாவுக்கும் அத்தைக்கும் தைரியம் சொல்லுங்க. ஆஸ்பத்திரியிலேயே உட்கார போரடிச்சா நூன்ஷோவோ, மாட்னி ஷோவோ பார்த்துட்டு வாங்க...!"

பாரி பிரமிப்பாய் அவளைப் பார்த்துக் கொண்டே நகர்ந்து ஐ.சி.யூனிட்டை விட்டு வெளியே போனான்.

(தொடர்ந்து வரும்)

## கியூபாப் புரட்சியின் வரலாற்றில் இருந்து......

கியூப சர்வாதிகாரி பாடிஸ்டாவின் ஆட்சியை வீழ்த்தும் நோக்கத்துடன், இறுதித் தாக்குதலுக்கான ஒரு பொதுத்திட்டத்தை புரட்சிப் படையின் தலைமைக் கமாண்டர் பிடல் காஸ்ட்ரோ 1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் மத்தியில் வகுத்தார்.

இந்தத் திட்டம் துணிச்சலானது; தைரியமானது. அதே நேரத்தில், யுத்த தந்திரரீதியாகப் பாதுகாப்பானது; அரசியல் ரீதியாக உறுதியானது. பாடிஸ்டாவின் பலமான, 20 ஆயிரம் வீரர்கள் கொண்ட இராணுவம் இருந்தது; டாங்கிகள் இருந்தன; ஆகாய விமானங்கள் இருந்தன; தொடர்ந்து அமெரிக்கா வழங்கிக் கொண்டிருந்த பிற சாதனங்கள் இருந்தன.

கொடுங்கோலனிடம் அரை டஜனுக்குக் குறையாமல் உளவு நிறுவனங்களும் பணிபுரிந்து கொண்டிருந்தன; ஆயிரக்கணக்கான பொலிசும் தகவலளிப்போரும் பணிபுரிந்தனர்; மேலும் விசேஷ அதிரடிப்படை இருந்தது; இராணுவ அதிகாரிகளின் பின்னால் சி.ஐ.ஏ.,எஃப்.பி.ஐ. ஆலோசகர்கள்-முகமூடி அணிந்து ஈட்டி ஏந்திய இராட்சதனைப்போல் பிரம்மாண்டமாக நின்று அவர்களை இயக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், புரட்சிக்காரர்கள் தரப்பில் சில நூறு வீரர்களே இருந்தனர். அவர்களிடம் குறைவான ஆயுதங்களே இருந்தன. இந்த நிலையில் வெற்றியைப் பற்றிய நம்பிக்கைகள் வெறும் கனவன்றிப் பிறிதென்ன? என்று கேட்கத் தோன்றலாம். இல்லை. இந்த முறை அவர்களது கணிப்பு சரியானது. விளைவு, புரட்சிக்காரர்களுக்குச் சாதகமாக இருக்கப்போகிறது.

பாடிஸ்டாவிடம் எண்ணிக்கையில் அதிகமான வீரர்களும், ஆயுதங்களும் இருக்கலாம், ஆனால் மக்களால் பயன்படுத்தப்படாதிருக்கும் ஆயுதங்கள் வெறும் இரும்புத் தகடுகள்தான்.

"புரட்சிக்காரர்களோடு போராடுவது பறவை வேட்டைக்கு போவது போன்ற காரியமல்ல"

ஆகவே, இரண்டு வருடங்களுக்கு முன் வீரர்களாய் இருந்த காஸ்குமிட்டோக்கள் இப்போது தங்களது நிழலாக மட்டும் எஞ்சியிருந்தனர்; சாரம் நீங்கிய சக்கைகளாகவே இருந்தனர்.

புரட்சிக்காரர்களோடு போராடுவது, பறவை வேட்டைக்குப் போவது போன்ற எளிய காரியமன்று; உயிரையே பணயம் வைத்துத்தான் அவர்களோடு போராட வேண்டும் என்று பாடிஸ்டாவின் வீரர்கள் அறிவார்கள். பாடிஸ்டாவின் வீரர்கள் அவனுக்காகப் போராடி உயிர் துறக்கக் கிஞ்சிற்றும் விரும்பவில்லை. அதிகாரிகள் மத்தியில் அதிருப்தி வளர்ந்து கொண்டே இருந்தது; புரட்சிக்காரர்களோடு நடத்திய யுத்தங்களில் தோல்வியுற்றதற்காக அதிகாரிகள் குறை கூறப்பட்டனர். அவர்கள் பதிலுக்கு, பாடிஸ்டா ஒரு கோழை என்று குற்றம் சாட்டினர்.

இன்னும் போர்முனையை எட்டியும் பார்க்காத, சாண்டியாகோ வரையிலும் கூடப் பயணம் செய்யவே தொடை நடுங்குகிற கோழை என்று அவர்கள் பாடிஸ்டாவைக் குற்றஞ் சாட்டினர். பயங்கரவாதம், சட்ட ஒழுங்கின்மை, அரசு நிதியில் அதிகாரிகள் சுகபோகம் அனுபவித்தது, அதிகாரிகளின் தன்னிச்சையான போக்கு ஆகியவற்றால் கியூபச் சமுதாயம் எரிச்சலுற்றிருந்தது.

சர்வாதிகாரி, ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பான் என்று யாருமே நம்பத் தயாரில்லை. தேவாலயம் கூட அவனோடு இருந்த உறவுகளை முறித்துக்கொண்டது. பெரும்பண்ணை முதலாளிகளும், கரும்பாலை முதலைகளும், தங்களது உடமைகள் எரிக்கப்பட்டு விடும் என்கின்ற பயத்தால் பிடலுக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

சர்வாதிகாரியோடு முதலில் கொஞ்சிக் குலாவியவர்கள் இறுதிவரை அவனோடு நிற்கத் தயாராய் இல்லை. அமெரிக்காவின் ஆளும் வட்டாரங்களிலே கூட 'ஹவானாவின் ஏஜெண்டு' டனான உறவை அறுத்துக்கொள்க என்று அதிகமான குரல்கள் ஒலிக்க ஆரம்பித்தன.



உண்மையில், ஏகபோகப் கொள்ளைக்காரர்களுக்கு எப்போதும் கியூபாவின் மீது ஒரு கண் இருந்ததால் அந்தப் 'பொக்கிஷத் தீவில்' தாங்கள் தலையிட வசதியாக அங்கே 'அமைதியும் சமாதானமும்' நிலவுமாறு கட்டிக்காக்கத் திராணியற்ற பாடிஸ்டா ஆட்சியில் தொடர்ந்து இருப்பது தேவையாய் இருந்தது.

புரட்சிக்காரர்களின் பலம் அதிகரித்துக்கொண்டே போனது. புரட்சி வீரர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. சகல தரப்பையும் சார்ந்த மக்கள்- குறிப்பாக விவசாயிகள், தொழிலாளர்கள்- காட்டும் ஆதரவு பெருகிக் கொண்டே போனது.

இப்போது எங்கெங்கிலும் விவசாயிகள் புரட்சிக்காரர்களுக்கு ஆதரவு நல்கினர். புரட்சிப்படையின் போர் வீரர்களில் அதிகம்பேர் குவாஜிரோக்கள். புரட்சிக்காரர்களே, தங்களது உண்மையான பாதுகாவலர்கள் என்றும், நேர்மையான நண்பர்கள் என்றும் விவசாயிகள் கண்டுகொண்டனர்.

தொழிலாளர்கள், மாணவர்கள், அறிவுத்துறையினர், பல்வேறு பூர்ஷுவா வட்டாரத்தினர் ஆகியோரிடமிருந்து ஆதரவு கிட்டியது. பூர்ஷுவா வட்டாரத்தினர் தங்களது சொந்த இலாபத்திற்காகத்தான் ஆதரவு காட்டினர் என்பதில் சந்தேகமில்லை.

பிடலுக்குத் தங்களது மரியாதையைத் தெரிவிப்பதற்காக, ஒதுக்குப்புறமான சியாரா மாய்ஸ்ட்ரா மலைப்பகுதிகளுக்குக் கிறிஸ்தவ பாதிரி ஒருவர் வருகை புரிந்தார். அவரோடு மூன்று பத்திரிகையாளர்கள் வந்தனர். அவர்கள் சி.ஐ.ஏ. உளவாளிகள். பிடலின் இடதுசாரி வாதத்தின் அளவை அறிந்து கொள்ளவும், அவரது மனோநிலையை வாடை பிடிக்கவும், 'நடக்கக்கூடாதது நடந்து' பிடல் ஆட்சிக்கு வந்து விட்டால் அவரோடு அமெரிக்கா உறவு வைத்துக் கொள்ள முடியுமா? என்று தெரிந்து கொள்ளவும் அவர்கள் சியாரா மாய்ஸ்ட்ராவிற்கு வந்தனர்.

சி.ஐ.ஏ.ஏஜெண்டுகளே மலைப்பகுதிகளுக்குத் தேடி வந்தது- இருபதாம் நூற்றாண்டின் ரொபின் ஹூட்டாக விளங்கிய, நீதிக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடி வீரகாவியங்களின் நாயகனாக விளங்கிய- இந்தக் கொரில்லா வீரரான பிடலின் செல்வாக்கும், அதிகாரமும் கொடிகட்டிப் பறந்தது என்பதைக் காட்டுகிறதல்லவா? ■


படிப்பகம்

www.padippakam.com

> பெரும்பாலான நடிகைகள் ஓய்வில்லாமல் ஷூட்டிங், பணம் நச்சரிக்கும் அம்மா, கால்ஷீட் கவனிக்கும் செகரெட்டரி, ஆண் நண்பர்கள் என்று இந்த வட்டத்திலேயே சிக்கிப் போய் ஒரு இறுக்கமான வாழ்க்கைதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
>
> நடிகை தபு ஒரு பேட்டியில்–'ஃபிலிம்ஃபேர்', ஆகஸ்ட்–97 இதழில்...




**28**

ஆனாலும் உங்கம்மா ரொம்ப திறமையாத்தான் திட்டம் போட்டிருக்காங்க, மதுமிதா" என்றான் சந்திரசேகர்.

"அவங்களை என் அம்மான்னு சொல்றதே தப்பு சந்துரு. ஒரு பணப் பிசாசுன்னுதான் சொல்லணும். பணத்தைத் தவிர, அவங்களுக்கு வேற எதுவுமே முக்கியம் இல்லை!" என்றாள் மதுமிதா.

"சரி... இப்படி உக்காரு. ரொம்ப நேரமா நின்னுட்டிருக்கே.. கால் வலிக்கப் போகுது." அவள் தோளில் கை வைத்து, கட்டிலுக்கு நடத்தி அமரவைத்தான். பரிவுடன் தலையைக் கோதி, "ஏதாச்சும் சாப்பிடறியா? ஜூஸ் போட்டுத் தரட்டுமா?"

"எதுவும் வேணாம் சந்துரு. இந்த உலகத்தையே தூக்கி என் கையில கொடுத்தாலும் எனக்கு வேணாம். என் சந்துருவோட மாறாத அன்பு ஒண்ணு மட்டும் போதும்!"

உணர்ச்சி வசப்பட்டதில் விம்மல் ஏற்பட, அவன் மார்பில் சாய்ந்து கொண்டு மெலிதாக அழத் தொடங்கினாள்.

"என்ன இது...., அசடு மாதிரி... ஏய்! அழுகையை நிறுத்தப் போறியா, இல்லையா?"

"சந்துரு, நீங்க என்னைப் புரிஞ்சு



வெச்சிருக்கிற அளவுக்கு நான் உங்களைப் புரிஞ்சு வெச்சிக்கலை. ஐயாம்....ஸாரி... அப்பப்ப உங்களை நான் வார்த்தைகளால காயப்படுத்தறேன் இல்ல?"

"அதெல்லாம் எதுவும் இல்லை. அமைதியா இரு!"

"இனிமே எந்த விஷயத்துக்கும் உங்க மேல நான் கோபப்படவே மாட்டேன் சந்துரு. நம்ம கல்யாணத்துக்கப்புறம் எந்தப் பிரச்சனை வந்தாலும், அதில முதல்ல விட்டுக் கொடுக்கறது நானாகத்தான் இருப்பேன் சந்துரு. நமக்குள்ளே வாழ்க்கையில சண்டையே வரக்கூடாது. அப்படியே வந்தாலும் ஒரே ஒரு சண்டைதான் வரணும்."

"அதென்ன?"

"யார் விட்டுக்கொடுக்கறதுன்ற சண்டை!"

சந்துரு சிரித்தான். நாற்காலியை இழுத்துப்போட்டு அவள் அருகில் அமர்ந்தான்.

"ஆக்சுவலா இந்தக் கட்டுரையை நான் பார்க்கவே இல்லை. நம்ம சாரிதான் கொண்டு வந்து காட்டினார்."

"வழக்கம்போல அவர் இதை நம்பியிருப்பாரே?"

"துப்பறியற வேலை எல்லாம் செய்ய ஆரம்பிச்சிட்டாரு!"

"அப்படியா?"

"அவர் அந்தக் கல்யாண ஃபோட்டோவைக்கூட ஏதோ ட்ரிக் வேலைன்னு நம்பத் தயாரா இருந்தார். அந்த லெட்டர் விஷயத்துல சந்தேகம் தீரலை. நீ எனக்கு எழுதின லெட்டர்ஸ் ஏதாச்சும் இருக்கான்னு கேட்டாரு. நீ எனக்கு முதன் முதலா எழுதின லெட்டரை நான் அடிக்கடி எடுத்துப் படிச்சிப் பார்ப்பேன். அதை எடுத்துக் கொடுத்தேன். உடனே ஒரு லென்ஸ் வெச்சிக்கிட்டு, புத்தகத்திலே போட்டிருந்த உன் லெட்டரையும், அதையும் ஒப்பிட்டுப் பார்த்து ரெண்டும் ஒரே கையெழுத்துதான்னு அடம் பிடிக்க ஆரம்பிச்சிட்டார் மது!"

"நீங்க என்ன சொன்னீங்க?"

"செக் மோசடி செய்யறவங்க அச்சா, அசலா கையெழுத்துப் போடறமாதிரித்தான் இதுவும் ஒரு ஃபோர்ஜரி வேலைன்னு சொன்னேன்!"

"அவரு அவ்வளவு மெனக்கெட்டதுக்குப் பதிலா எனக்கு ஒரு ஃபோன் செஞ்சு கேட்டிருந்தா, ரெண்டும் ஒரே கையெழுத்துதான்னு நானே சொல்லியிருப்பேன்."

சந்திரசேகர் புருவங்களை உயர்த்திப் பார்த்தான்.

"என்ன சொல்றே மது?"

"ஆமாம் சந்துரு. அந்தக் கையெழுத்து என்னோடதுதான். அது நான் எழுதின ஒரு பழைய லெட்டர்தான். அதை எங்கம்மா இத்தனை வருஷமா பத்திரமா எடுத்து வெச்சிருந்தாங்க. இப்போ இந்த சதி நாடகத்துல கச்சிதமா பயன்படுத்திட்டாங்க."

"எனக்குப் புரியலை!"

"நான் ஏற்கனவே உங்ககிட்டே சொல்லியிருக்கேனே சந்துரு. காதல்னா என்னான்னு புரியாத அந்த வயசுல, நான் டைப்ரைட்டிங் கத்துக்கிட்டப்போ ரவின்னு ஒருத்தர் என் பின்னாலேயே சுத்திட்டிருந்தான். எனக்கு லவ் லெட்டர் கொடுத்தான்."

"ஆமாமா.. சொல்லியிருக்கே. அவன் சிவப்பா சுருள் கிராப்பா, ஸ்டைலா இருந்தான். அவனைப் பிடிச்சுப் போச்சு உனக்கு. 'எங்கம்மாகிட்டே பேசு'ங்கன்னு லெட்டர் எழுதிக் கொடுத்தேன்னு சொன்னே... அந்த லெட்டர் தானா இது?"

"ஆமாம்... கன்னுக்குட்டிக்காதல்னு சொல்வாங்களே, அப்படிப்பட்ட காதல் அது! அந்தப் பையன் அவங்கப்பாவைக் கூட்டிக்கிட்டு வந்து பொண்ணு கேட்டு, அடி உதை வாங்கினான். அந்த லெட்டரையும் பிடுங்கி வெச்சிக்கிட்டாங்க எங்கம்மா... அதுக்கப்புறம் அவன் ஊரை விட்டே போய்ட்டான். கொஞ்ச நாளைக்கு அவனை நினைச்சு நான் அழுதிட்டிருந்தேன்!"

"சரிதான். அதுவரைக்கும் உண்மைக் கதையை வெச்சிக்கிட்டு, அப்புறம், இரகசிய கல்யாணம் நடந்ததா கற்பனை சேர்த்து, அந்த ரவிக்கு பதிலா வெங்கடரெட்டின்னு எவனையோ உருவாக்கி... யப்பா! சதி பண்றதில உங்கம்மாவை மிஞ்சுறதுக்கு ஆள் இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன்."

"அவங்க அவ்வளவு திறமையா சதி செஞ்சு என்ன பிரயோஜனம் சந்துரு? மக்கள் மத்தியில என் பேரை ரிப்பேர் பண்றதில வேணும்னா அவங்க ஓரளவுக்கு ஜெயிச்சிருக்கலாம். ஆனா உங்க மனசைக் கலைக்க நினைச்ச அவங்க நோக்கம் நிறைவேறலையே... அதுல அவங்க படுதோல்வி அடைஞ்சுட்டாங்க."

"ரைட்டு மதுமிதா, இப்ப சீரியசா சில முடிவுகள் எடுக்கலாம்!"

"சொல்லுங்க சந்துரு."

"நாம ஏற்கனவே பேசிக்கிட்ட திட்டப்படி நாளைக்கு இதே ஆஸ்பத்திரியில இதே ரூமில டாக்டரையும் சாரி சாரையும் சாட்சியா வெச்சி கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். அதில இப்ப ஏதாச்சும் மாற்றம் செய்யணுமா?"

"எதுக்கு மாற்றம் செய்யணும்? அவசியமில்லை."

"ரைட்டு. உன் விருப்பப்படி நாளைக்கு இங்கே நம்ம கல்யாணம் நடக்கட்டும் மது. உன்னை ஞாயிற்றுக்கிழமை காலைல டிஸ்சார்ஜ் பண்றதா டாக்டர் சொன்னார். அன்னைக்கு ஈவினிங் கிராண்டா ரிசப்ஷன் நடத்

## பட்டுக்கோட்டை பிரபாகர்

திடலாம். நாம் அதுக்கான ஏற்பாடுகளைச் செஞ்சிடறேன். ஓ.கே.யா?"

"ஓ.கே. இன்னொரு ஏற்பாடும் செய்யணும்!"

"என்ன சொல்லு?"

"அதே ஞாயிற்றுக்கிழமை காலைல பிரஸ்மீட் வெச்சிக்கலாம்."

"சரி"

"உங்க வீட்ல வெச்சிக்கலாமா?"

"சரி"

"அப்போ எங்கம்மா செஞ்ச சதியைப் பத்தி வெளிப்படையா நான் விளக்கம் சொல்றேன்."

"ரைட்டோ. இதில இன்னொரு விஷயமும் எனக்குத் தோணுது."

"என்ன?"

"நானும் நீயும் கல்யாணம் செய்துக்கக்கூடாதுன்னுதான் உங்கம்மாவோட நோக்கம். அதை பொறுமையா உங்கிட்டே சொல்லிப் பார்த்தாங்க. நீ உறுதியா இருந்தே. உன்னைப்பத்தி அசிங்கமான ஒரு சந்தேகத்தை என் மனசில விதைச்சா நான் கல்யாணத்திலேர்ந்து பின்வாங்கிடுவேன்னு எதிர்பார்த்துத்தான் இந்தச் சதிக்கட்டுரை நடவடிக்கை! இல்லையா?"

"ஆமாம்."

"இந்த முயற்சியில அவங்க தோத்துட்டாங்கன்னு நம்ம ரெண்டு பேருக்கு மட்டும்தான் தெரியும்!"

"ஆமாம்"

"ஆனா, அவங்க இதில ஜெயிச்சுட்டதா நம்ப வைக்கணும். அப்பத்தான் ஞாயிற்றுக் கிழமை நாம பிரஸ் பீப்பிளை சந்திச்சு உண்மை சொல்றவரைக்கும் அவங்க புதுசா வேற எந்த ஒரு சதியிலயும் இறங்காம இருப்பாங்க. ஆஸ்பத்திரியில வெச்சே நமக்குக் கல்யாணம் நடந்த விஷயம் அவங்களுக்கு ஒரு பெரிய இடியா இறங்கணும்."

"அதுக்கு என்ன செய்யலாம்?"

"நான் சொல்ற மாதிரி நீ செய்யணும்!" என்ற சந்திரசேகர் தன் யோசனையை விரிவாகச் சொல்லத் துவங்கினான். (தொடரும்)

---

> கவியரசு கண்ணதாசனின் வாழ்க்கை
> அனுபவம் நிறைந்த புத்தகம்!
> அந்தப் புத்தகத்தின்
> சில பக்கங்களை
> நன்கு அறிந்தவர்
> அவரது உதவியாளராக இருந்த
> இராம – கண்ணப்பன்.
> அவர் எழுதியதில் இருந்து.....

# நில்–கவனி–முன்னேறு

கவிஞரை ஆசிரியராகவும், தனது தந்தை ஏ.ஆர். கண்ணப்பனை நிர்வாக ஆசிரியராகவும் கொண்டு பஞ்சு அருணாசலம் தென்றல்- திரையை வெளியிட்டார்.

மாநகராட்சித் தேர்தலில் முற்போக்கணி தோற்று விட்டது.

யார் யார் கடந்த காலத்தில் மாநகராட்சியில் ஊழல் புரிந்தார்கள் என்று தென்றல் திரையில் கவிஞர் எழுதியிருந்தாரோ, அவர்கள் எல்லாம் மீண்டும் வெற்றி பெற்றுவிட்டனர்.

கவிஞரின் மேல் வழக்குத் தொடுத்தனர். முப்பதுக்கும் மேற்பட்ட வழக்குகளை அவர் தினமும் நீதிமன்றங்களில் சந்தித்தார்.

தினமும் வழக்கு மன்றம், தொழில் என்று அவர் படாதபாடுபட்டார்.

இந்த ஒய்வொழிச்சல் இல்லாத நிலையில்தான், 'எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? அங்கே எனக்கோர் இடம் வேண்டும்' என்ற பாடலை எழுதினார்.

இந்த நிலையில்-

தென்றல் திரையை கே.ஆர்.பாலனிடமிருந்து வாங்கியபோது அவர் தென்றல் திரையின் பேரில்,தான் வாங்கியிருந்த இறக்குமதி லைசென்சையும் கொடுத்திருந்தார் அல்லவா? அந்த அச்சு இயந்திரம் இறக்குமதியாகிவிட்டது.

அவ்வளவு பெரிய மிஷின் தென்றல் திரைக்கு தேவை இல்லை என்று நிர்வாகம் உணர்ந்தது. அது மட்டுமல்ல, அதை வைத்துக்கொள்ள இடவசதியும் கிடையாது. மேலும் சுங்கவரி போன்றவற்றை கட்டவும் நிதி நிலை இடம் தரவில்லை.

மிஷின், துறைமுகத்தில் இறக்கி வைக்கப்பட்டு பலமாதங்கள் ஆகியது. அதற்கான இட வாடகையும் கூடிக்கொண்டே இருந்தது. எனவே அதை வேறொருவருக்கு விற்றுவிட்டனர்.

அப்போது காமராஜுக்கு எதிரிகளாக மேல்மட்டத்தில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அவர் புகழ்பாடும் கவிஞரையும் விரும்பவில்லை. அவர் காங்கிரஸ் கட்சியில் இணைந்ததையும் விரும்பவில்லை.

எனவே, தென்றல் திரைக்கு வந்த மிஷினை விற்று விட்டதை அறிந்த அவர்கள்: அமைச்சரவையில் இருந்தவர்கள், சி.பி.ஐ., மூலமாக வழக்குப்போட வைத்தனர்.

வழக்கு, பத்திரிகை உரிமையாளர் மீதும் அதன் நிர்வாக ஆசிரியர் மீதும்தான் போட முடியும். அனாவசியமாக வேண்டும் என்றே அதில், 'கண்ணதாசனையும் சேருங்கள்', என்று வழக்குப்போட வைத்தனர்.

பல மாதங்கள் வழக்கு நடந்தது. அதற்காக கவிஞர், காமராஜரையோ மற்றத் தலைவர்களையோ உதவிக்கு நாடவில்லை. 'தர்மம் வெல்லும்' என்றிருந்து விட்டார்.

மேல்மட்டத்துக்காரர்களால் நீதியும் வளைக்கப்பட்டது.

தான் மூன்று மாதம் தண்டிக்கப்பட்ட போதுதான் தருமம்தோற்றுப் போனதை உணர்ந்தார்.

ஜாமீனில் வெளிவந்து மோகன் குமாரமங்கலம் மூலம் உயர் நீதிமன்றத்தில்மேல் முறையீடு செய்தார்.

மறுநாள் நேருவின் பிறந்தநாள் விழா கடற்கரையில் நடைபெறும் கூட்டத்தில், 'காமராஜ், கவியரசு கண்ணதாசன் பேசுகிறார்கள்,' என்று பெரிய பெரிய சுவரொட்டிகள்.

கூட்டம் கடற்கரையில் நிறைந்திருந்தது.

மேடையில் கவிஞர் அமர்ந்திருந்தார். சிறிது நேரத்தில் காமராஜும் வந்துவிட்டார்.

எழுந்து நின்று வரவேற்ற கவிஞரை, "என்ன கண்ணதாசன், கேஸ்ல மூணு மாதம் தண்டிச்சுட்டாங்களாமே! அப்பீல் பண்ணியிருக்கீங்களா?" என்று கேட்டார் காமராஜ்.

"ஆமாம்!" என்றார் கவிஞர்.

"அப்படியா? அப்ப கேஸ்ல ஜெயிச்ச பிறகு நீங்க மேடையில் பேசலாம், இப்ப வேண்டாம்!" என்றார் காமராஜ்.

ஒரு கணம்...

நொறுங்கிப்போய் விட்டார் கவிஞர்.

தலைமை உரை முடிந்ததும் கவிஞர் பேச வேண்டும். தலைமை வகித்தவர் கவிஞரை திரும்பிப் பார்த்தார். ஒன்றும் புரியாத கூட்டத்தினரிடையே சலசலப்பு. "கண்ணதாசனைப் பேசச் சொல்... கண்ணதாசனைப் பேசச் சொல்," என்று ஒருமித்த கூச்சல்.

"கண்ணதாசன் பேச மாட்டான்னேன்!" என்றார் காமராஜ் எழுந்து,

கூட்டத்தினரை நோக்கி விடைபெறுவது போல் கையசைத்து விட்டு, மேடையை விட்டுக் கீழே இறங்கினார் கவிஞர்.

அலுவலகம் வந்தோம். தொடர்ந்து விசுவாசம் மிக்க காங்கிரசார் சிலரும் வந்தமர்ந்தனர்.

"எழுது", என்றார். நான் தயாரானேன்.

'தர்மத்தின் சாவு! கண்ணதாசன் ராஜினாமா', என்று தலைப்புச் சொன்னார். பதிவு செய்துவிட்டு நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தேன்.

'தனது பொன்போன்ற நேரம், உழைப்பு, பொருள் இழப்பு, நன்றி, விசுவாசம் அனைத்தையும் வீணாக்கி விட்டோமே,' என்று கழிவிரக்கப்படுபவரைப் போல காணப்பட்டார்.



அரை மணி நேரத்தில் ஒரு நீண்ட கட்டுரையைச் சொல்லி முடித்தார்.

கேட்டுக் கொண்டிருந்தவர்கள் கண்ணீர் வடித்தனர். கவிஞரது எதிர் காலத்தை எண்ணி கட்டுரையை பத்திரிகைகளுக்குக் கொடுக்க விடாமல் அவரைத் தடுத்து விட்டார்கள்.

சொல்லி வைத்தாற்போல இரண்டாவது நாளே, இந்தச் சம்பவத்தை இதயத்தில் பதிந்த உண்மைக் காயத்தை பாடலாக வடித்து வைக்க ஒரு படத்தின் சூழ்நிலை அமைந்தது.

தனது மக்களை படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வருவதில் கண்ணும், கருத்துமாக இருந்த தந்தை, மக்கள் முன்னுக்கு வந்ததும் நொடித்துப் போகிறான். அவனது உறவினர்களும், உதவி பெற்றுப் பயனடைந்தவர்களும் அவனைக்கண்டு ஒதுங்குகின்றனர். பெற்ற மக்களும், தந்தையை உதாசீனப் படுத்துகின்றனர்.

சூழ்நிலை இதுதான்!

அனுபவம் உணர்த்திய பாடம், இதய வலியை இறக்கி வைக்கிறது.

யாரை நம்பி நான்
பொறந்தேன்
போங்கடா போங்க–
என்
காலம் வெல்லும்
வென்ற பின்னே
வாங்கடா வாங்க!

குளத்திலே தண்ணி
யில்லே
கொக்குமில்லே மீனு
மில்லே
பெட்டியிலே பண
மில்ல
பெத்த புள்ளே சொந்தமில்லே!
(யாரை)

தென்னையைப் பெத்தா இளநீரு
பிள்ளையைப் பெத்தா கண்ணீரு
பெத்தவன் மனமே பித்தம்மா
பிள்ளை மனமே கல்லம்மா

பானையிலே சோறிருந்தா
பூனைகளும் சொந்தமடா
சோதனையைப் பங்கு வச்சா
சொந்தமில்லே பந்தமில்லே!

நெஞ்சமிருக்கு துணிவாக
நேரமிருக்கு தெளிவாக
நினைத்தால் முடிப்பேன்
சரியாக
நீ யார் நான் யார் போடா போ!

ஆடியிலே காத்தடிச்சா
ஐப்பசியில் மழைவரும்
தேடி வரும் காலம் வந்தா
செல்வமெல்லாம் ஓடிவரும்!

படத்தின் கதாபாத்திரம் வாயிலாக தனது வேதனையாக தன்னிரக்கத்தையும், தனது தன்னம்பிக்கையையும் மிகமிக நாசூக்காக வெளிப்படுத்தி அமைதி கொண்டார் கவிஞர்.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு இந்த வழக்கில் வெற்றி பெற்றார் கவிஞர்.

இந்த வெற்றிச் செய்தியை காமராஜிடம் தெரிவித்தார்.

அதற்கு அவர் ஒரு பத்திரிகை ஆசிரியரின் பெயரைக் குறிப்பிட்டு, 'அந்த கிரிமினலே, கிரிமினல் வழக்குகளில் ஜெயிச்சிருக்கிறபோது, ஒம்மேல போட்ட ஒன்றும் இல்லாத வழக்கில் நீ ஜெயிச்சது ஒன்றும் ஆச்சரியமில்லே, போ!' என்றார்.

ஆண்டுகள் கடந்தன.

நாட்டில் அவசரநிலை பிரகடனமாகியது.

## இராம கண்ணப்பன்

தென்றல் திரை மிஷின் விற்றதை எந்த சி.பி.ஐ. அதிகாரி புலன் விசாரணை செய்து வழக்கும் போட்டாரோ, அந்த அதிகாரி ஒரு மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் கவிஞரிடம் வந்தார்.

தான் ஓய்வு பெற்றுவிட்டதாகவும், தன்னை தவறாக சி.பி.ஐ. தேடுவதாகவும் கூறி, தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினாராம்.

எல்லாவற்றையும் மறந்து விட்டு, அவருக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றினார் கவிஞர்.

தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# நள்ளிரவு நாயகி

குழந்தையாய் சிணுங்கியது டெலிஃபோன்.

ஃபோம் மெத்தையில் புரண்டு மணி பார்த்து வியந்தான் ப்ரேம். ரேடிய ஒளியில் துல்லியமாய் நள்ளிரவு பன்னிரெண்டு என்று காட்டியது அந்த ஜெர்மனிய தயாரிப்பு.

'இந்த வேளையில் யார் ஃபோன் செய்வார்கள்?' எக்கி ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ?"

மறுமுனை மவுனம் சாதித்தது.

"ஹலோ, யார் பேசறது?" என்றான் தூக்கம் கலைந்துபோன எரிச்சலில்.

"நான்தான் டியர்! உங்களோட மனைவி ஷாம்லி பேசறேன்!" என்றதும் ஏகமாய் அதிர்ந்தான்.

"ஷாம்லி? நோ! அவ தூக்கு மாட்டி



செத்துப் போய் ஒரு மாசம் ஆவுது!"

"நோ, டியர்! நான் சாகலை. உங்களால அநியாயமா கொலை செய்யப்பட்டேன். இப்ப பழி வாங்க வந்திருக்கேன்!"

"டாமிட்!" கத்தினான் ப்ரேம். வியர்வை உடனே அரும்பியிருந்தது.

"நோ! நான் நம்ப மாட்டேன். எனக்கு இந்த ஆவி, பழிவாங்கல் இதிலெல்லாம் நம்பிக்கையில்ல. தூக்கு போட்டுட்டு செத்துப் போன ஷாம்லியை நான் கொலை பண்ணி னதா சொல்லி பணம் பறிக்க நீ ஏதோ சதித்திட்டம் போட்டிருக்கே. சொல்லு யார் நீ?"

"பரவாயில்லையே! கரெக்டா கண்டு பிடிச்சிட்டிங்களே! ஓ.கே. நான் ஷாம்லி இல்ல. அவளோட உயிர்த்தோழி ஐஸ்வர்யா!"

"ஐஸ்வர்யா! நீயா? எதுக்காக இந்த மிரட்டல்?"

"நீங்க சொன்ன மாதிரி பணம் பறிக் கத்தான். ஷாம்லி தூக்கு மாட்டிட்டு சாகலை. நீங்க, அவளோட சொத்துக்கு ஆசைப்பட்டும், சுசிலாவை கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக வும் அவளை கொலை பண்ணி தற்கொலை மாதிரி செட்டப் பண்ணிட்டிங்க. ஆம் ஐ கரெக்ட்?"

ப்ரேமின் இதயத்தில் 'தடக் தடக்' எப்படி? அவளுக்குத் தெரியும்?

"இத பார் ஐஸ்வர்யா! விளையாடாதே! நானே ஷாம்லி செத்துப் போன அதிர்ச்சியில இருந்து இன்னும் மீளவே இல்லை!" சமா ளித்துப் பேசினான்.

"நோ ப்ரேம்! மறைக்காதீங்க. ஆதாரங்க ளோடதான் நான் பேசறேன். ஷாம்லி செத்துப் போறதுக்கு முந்தி எனக்கு எல்லாத்தையும் விவரமா எழுதியிருக்கா... அவ எழுதின லெட்டர், டைரி எல்லாம் இப்ப என்கிட்டதான் இருக்கு. ஒருவேளை நான் செத்துப் போயிட்டா, அதுக்கு என்னோட கணவர் என்னை கொலை செஞ்சதாத்தான் அர்த்தம். எல்லா ஆதா ரத்தையும் பொலிஸ்கிட்ட நீதான் கொடுக் கணும்னு சொல்லி தெளிவா எனக்கு லெட்டர் எழுதியிருக்கா. ஆனா பாருங்க ப்ரேம்! நான் ஒரு பணமில்லாத புத்திசாலி. எனக்கும் ஆசை இருக்கு. பொலிஸ்ல சொல்றதினால என்ன லாபம்? அதனால.. நாம பிசினஸ் பேசலாமா?"

ப்ரேம் சுத்தமாய் தளர்ந்தான். ஷாம்லி இப்படி ஒரு சிக்கலை ஏற்படுத்துவாள் என்று கொஞ்சமும் அவன் நினைக்கவில்லை.

**கே. செல்வன்**

டைரி வேறு எழுதுவாளா? எனக்கிருக்கும் அவசரத்தில் அதையெல்லாம் எங்கே கவ னித்தேன்! தன்னையே நொந்து கொண்டான். ச்சே! மாட்ட மாட்டோம் என்று நினைத்தனே!

"என்ன ப்ரேம். பேச்சையே காணோம்? பயந்துட்டீங்களா? எதுக்கு பயம்? எனக்கு ஒரு கணிசமான தொகை கொடுத்துட்டா நான் விலகிக்குவேன். நாளைக்கு காலைல உங்க வீட்டுக்கே வர்றேன். சாவகாசமாய் பேசலாம். என்ன?"

கொஞ்ச நேர யோசனைக்கு பின் "வா!" என்றான் ப்ரேம்.

இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. மண்டையைப் போட்டுக் குழப்பி குழப்பி திட்டம் ஒன்று தீட்டினான்.

'எப்படியோ, எங்கோ ஒரு கவனக்குறை வால் தவறு நடந்துவிட்டது. ஆதாரங்கள் ஐஸ்வர்யாவிடம். அதற்கு ஒரு விலை கேட் கிறாள். என்ன விலையானாலும் கொடுத்து தான் ஆகவேண்டும். ஆனால், இப்பொழுது பணம் பிரச்சனை இல்லை. என்னை மீண்டும் மீண்டும் பயமுறுத்தி பணம் கேட்டு நச்சரிக்க மாட்டாள் என்பது என்ன நிச்சயம்? அத னால்.. அவளிடம் உள்ள ஆதாரங்களைப் பெற்றுக்கொண்டு அவளையும் தீர்த்துவிட வேண்டும்.'

தீர்மானித்தான்.

பரபரப்பான காலை.

சரியாக எட்டு மணிக்கு ஐஸ்வர்யா வந் தாள். கதவைத் திறந்து... "வா!" என்றான்.

'ஏசி'யின் வீர்ர்ர் ஐஸ்வர்யாவை அணைத் தது.

"என்ன ஆதாரங்கள்? எங்கே அது?" என்றான் நேரடியாய்.

"முதல்ல பிசினஸ். ஓ.கே?" சோபாவில் அமர்ந்தாள்.

"ஓ.கே. நீ என்ன எதிர்பார்க்கிற?"

"எனக்கு ரொம்ப அதிகமான ஆசை யெல்லாம் கிடையாது ப்ரேம். ஒரு இலட்சம் போதும்!"

யோசிக்கவே இல்லை. சூட்கேசில் அடுக்கி வந்து கொடுத்தான்.

"ஆதாரங்கள்?"

"நாளைக்கு உங்க லெட்டர் பாக்ஸ்ல இருக்கும்!"

சொல்லிவிட்டு கதவு திறந்து புயல்போல் சென்றாள்.

ப்ரேம் தொப்பென்று சோபாவில் விழுந்த நேரம் 'திமுதிமு'வென்று பொலிஸ் உள்ளே நுழைந்தது.

ப்ரேம் திடுக்கிட்டான். ஐஸ்வர்யா சிரித்த படி நின்றிருந்தாள்.

"என்ன ப்ரேம். அதிர்ச்சியா இருக்கா? ஷாம்லி தற்கொலை பண்ணிகிட்டதில எனக்கு நம்பிக்கையில்ல. ஏன்னா, எந்த பிரச்சனைக் கும் தற்கொலைய அவ தீர்வா நினைச்சதில்ல. தற்கொலை கோழைத்தனமானதுன்னு என் கிட்ட பலமுறை வாதாடியிருக்கா. ஷாம்லி யோட சாவில மர்மம் இருக்குன்னு பொலிஸ் கிட்ட சொன்னப்ப, அவங்ககூட நம்பலை. நான்தான் இந்த ட்ராமாவை செட்டப் பண் ணினேன். என்கிட்ட ஆதாரங்கள் எதுவும் இல்லை. உங்களுக்கு குற்ற உணர்வு. இல் லாத ஆதாரங்களுக்காக பயந்து உங்க வாயாலேயும், எனக்கு பணம் கொடுத்த தினாலேயும் நீங்கதான் கொலை பண்ணீங் கன்னு நிரூபிச்சிட்டீங்க?"

ப்ரேம் சர்வ நாடியும் ஒடுங்கி, அதிர்ச் சியில் இருக்க, விலங்குடன் அவனை நெருங்கினார் இன்ஸ்பெக்டர். ■

# இரவல் சைக்கிள்

பக்கத்து வீட்டில் குடியிருக்கும் ஆசிரியர் பரந்தாமன் வந்து கதவைத் தட்டினார். "சதீஷ் தம்பி, என் பையன் அருண்குமாருக்கு எக்ஸாம் ஆரம்பிக்குது. ரிக்ஷாக்காரர் வரலை. உன்னோட சைக்கிளைக் கொஞ்சம் தாப்பா. பையனை ஸ்கூல்லே விட்டுட்டு, நீ கம்பெனிக் குக் கிளம்பறத்துக்கு முன்னாடியே வந்துட றேன்."

அவருக்குச் சைக்கிள் இரவல் தருவது இது எத்தனையாவது தடவை என்று சரியாக நினைவில்லை.

சைக்கிளை அவருக்குத் தந்த பிறகு சதீஷ் சாப்பிட உட்கார்ந்தான். 'பரந்தாமன் சீக்கிரம் வந்துட்டா தேவலாம்!' என்று அவன் மனம் கடிகாரத்தைத் தோற்கடித்துக் கொண்டிருந்தது. வெய்யிலில் வேர்த்து விறுவிறுக்க சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்து அவனிடம் தந்தார் பரந்தாமன்.

"சதீஷ் நீ கம்பெனிக்கு டயத்துக்கு போணு மேங்கிற அவசரத்துல சைக்கிளை நான் வேகமா மிதிக்க செயின் அறுந்துக்கிச்சுப்பா. அதனாலதான் தள்ளிக்கிட்டு வந்தேன். நேரம் வேற ஆயிடிச்சு." சைக்கிளை வராண்டாவில் கொண்டு வந்து நிறுத்திவிட்டுப் போனார் அவர்.

அன்று மாலை பரந்தாமன் செயின் வாங்கிப்போட்டுக் கொள்ள அறுபது ரூபாயை சதீஷிடம் கொடுக்க வந்தார். "வேண்டாம் சார்!" என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டான். சதீஷ் அம்மாவிடம் சைக் கிள் செயின் வாங்க பணம் கேட்டதும் அவள் கோபப்பட்டாள்.

"பணம் கொண்டு வந்த டீச்சர்கிட்ட வேண்டாம்னு சொல்லிட்டு, இப்போ எங் கிட்டே பணம் கேக்குறே. நீ செய்றது, சொல்றது எதுவுமே எனக்குப் புரியலையே?"

"உனக்குப் புரியவாணாம்மா. பரந்தா மன் புரிஞ்சிகிட்டாப் போதும். அவர் கொடுத்த பணத்துல நான் செயின் வாங்கிப் போட்டு வைச்சா திரும்பவும் உரிமையோட நேரங் காலம் தெரியாம சைக்கிளை இரவல் கேட்பார். மறுக்க இயலாது. ஆனா நம்ம பணத்துல ரிப்பேர் பண்ணிகிட்டா, நமக்கு உதவி செய்த சதீஷுக்கு நம்மால தானே அரைநாள் சம்பளம் போய்- திட்டும் கெடைச்சுது. இனி இரவல் சைக்கிளை யாரிடமும் கேக்கவே கூடாது எப்படியாது ஒரு பழைய சைக்கிளை வாங்கியே தீரணும்ங்கிற எண்ணம் அவர் மனசை



**செல்வா**

உறுத்திகிட்டே இருக்கும். பணம் முக்கிய மில்லே. நாம மத்தவங்களுக்கு எப்படி எடுத்துச் சொன்னா திருந்துவாங்கங்கிற பாடந்தாம்மா ரொம்ப முக்கியம்." ■

# சங்கிலிகள்

ஆபீஸ் வந்ததும், இறுக்கம் தளர்ந்து விடுமென எதிர்பார்த்தாள் கல்பனா. குறைய வில்லை, மனசுக்குள் முள்ளாய்ச் செருகிக் கிடந்தது!

கோபி எப்போதும் இப்படிப் பேசியவன் அல்ல!

என்ன ஆயிற்று அவனுக்கு?

'என்னதான் வேலை பார்த்தாலும், சக தோழிகளோடு சிரித்துப் பேசி மகிழ்ந்தாலும், சம்பளம் வாங்கினாலும், திருப்தி வராமல் கோபி ஒருவனே எனது உலகமாய்ச் சுற்றிச் சுற்றி வருகிறேனே! அது தவறா? அவனன்றி, நான் இல்லையே?- அது தவறா? நான் வெறும் உடல்தானே! மனசு முழுக்க அவ னிடமே விட்டுவிட்டு வருகிறேனே! அது தவறா? என் கோபிக்கு என்ன ஆயிற்று? அதுக்கு கல்மிஷம் தெரியாதே...!'

கோபமே காட்டத் தெரியாதவன்...

உடைந்து அழுதுவிடுவோம் எனத் தோன்ற, அடக்கினாள்!

காலையில் ஆபீஸ் கிளம்பும் அவசரம். இரண்டு பஸ் பிடிக்க வேண்டிய அவஸ்தை.

"ஏங்க! அடுப்பிலே இட்லி ஊத்தி வச் சிருக்கேன்! வெந்ததும் சாப்பிடுங்க! சட்னி உங்களுக்குப் பிடிச்ச வெங்காயச் சட்னிதான். சன்னல் மாடத்துலே வச்சிருக்கேன். நேரமா யிடுச்சு! இன்னிக்கு ஒருநாள் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க."

சொல்லிவிட்டு வாசற்படி இறங்க வில்லை!

"நாயே! கேடுகெட்ட நாயே! வேலை பார்க்கிற திமிறு! மதர்ப்பு! புருஷனுக்கு சாப்பாடு வைக்கக்கூட நேரமில்லாம அப்பிடி என்ன... வேலை பார்க்கறே!"

சட்டென்று தெருவில் வேடிக்கை பார்த் தார்கள்!

கல்பனா இதை எதிர்பார்க்கவில்லை!

என்றைக்குமில்லாமல் கோபி இப்படி பேசுவானா...?

உள்ளே வந்தாள்.

"ஏங்க, என்னாச்சு! நான் சொன்னது தப்பா? நேரமாயிடிச்சு, அத்தை இருக்காங்க அதனாலதான் சொன்னேன்!"

"நீ வச்ச வேலைக்காரியா எங்க அம்மா? எதுக்கு நீ இருக்கே? அதிகாரம் பண்ணவா?"



**ஹரணி**

கல்பனா அதிர்ந்தாள்!

விடுவிடுவென 'பேக்'கை வைத்துவிட்டு நாலு வீடு தள்ளி ஃபோன் இருந்தது-போய் ஒரு மணிநேரம் அனுமதி சொன்னாள்! மெதுவே இட்லி வெந்தது. பார்த்து இறக்கி, தட்டில் எடுத்து வைத்து, சட்னி எடுத்து வைத்து, தண்ணீர் எடுத்து வைத்துச் சாப்பிடச் சொன்னாள்.

"நீ சொன்னப்ப நான் சாப்பிடணுமா?"

-விடுவிடுவென வெளியே போய் திண் ணையில் உட்கார்ந்து கொண்டாள்!

ஆபீசுக்கு லீவு போட முடியாது.

இவள் பார்ப்பது அட்வான்ஸ் சீட்- பொங்கல் அட்வான்ஸ் போட வேண்டும். ஏ.ஓ. ஒரு கிறுக்கன்!

பேசாது எல்லாவற்றையும் மூடி வைத்து, 'பேக்'கை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

"நான் போயிட்டு வரேங்க!"

அவன் எதுவும் பேசவில்லை.

கல்பனா விருட்டென இறங்கி வேகமாய் நடந்தாள்!

இதுதான் நடந்தது!

கல்பனாவுக்கு வேலை ஓடவில்லை. பேசாது எங்கோ வெறித்தபடி உடகார்ந்து கிடந்தாள்.

பக்கத்து சீட் சிவகுமாரி வந்தாள்.

"கல்பனா, எழுந்திரு; கேன்டீன் போவோம்!"

"இல்லே, நீ போயிட்டு வா!"

"அது தெரியும். வாடின்னா..."

சிவகுமாரி கைபிடித்து இழுக்க, நடந் தாள். வழியில் கேட்டாள்:

"என்னாச்சு கல்பனா?"

"ஒண்ணும் இல்லை சிவா!"

"அதான் மூஞ்சியிலே தெரியுதே? சொல்லு! என்னப்பா ஆச்சு?"

கல்பனா அழுதாள்.

"எல்லாத்துக்கும் அழாதே... சொல்லு!"

சொன்னாள்:

சிவகுமாரி, சிறிது நேரம் பேசாது வந்தாள். பிறகு பேசினாள்:

"உன் மாமியார் வேலை இது! இது இயல்புதான். சமுதாயத்திலே ஆண் வேலைக் குப் போறது கௌரவம்! பெண் வேலை பார்ப்பது அசிங்கம்! உன் கணவர். நல்ல படிப்பு! என்ன பண்றது? நேரம் வர்ல! வேலை கிடைக்கல்லே! இதுக்கு யார் பொறுப்பு? நிச்சயம் படிச்ச படிப்பு வீணாகப் போகப் போறதில்லே! எல்லாம் தெரிஞ்சு தானே உன்னைக் கல்யாணம் பேசினாங்க? நீ எப்படி இதுக்கு பொறுப்பாக முடியும், நீ சாதாரணமா பேசியிருக்கலாம். அவரும் சாதாரணமா எடுத்திருக்கலாம். சுற்றி இருக்கிறவங்க விஷமம் இது! எத்தனை காலத்துக்குத் தொடரும்...? வீடு! அன்பு, மனைவி, குழந்தை எல்லாம் புரியாதவர் இல்லே உன் கணவர்! சூழல் காரணம். இது நிரந்தரம் இல்லே. நீ எதுவும் பேசாதது தான் நல்லது. அது உறுத்தும்! எல்லாம் காலப் போக்கிலே சரியாயிடும்- மற! எல்லா வற்றையும் மற!"

தெளிந்தாள் கல்பனா!

மாலை ஆபீஸ் முடியும் நேரம்!- கோபி வந்திருந்தான். கல்பனாவிற்கு ஆச்சரியம்.

சிவகுமாரி சிரித்தாள். "இதுதான் அன்புச் சங்கிலி. போ!" என்றாள்!

வெளியே வந்தார்கள்!

கோபி பேசினான்:

"கல்பா, என்னை மன்னிச்சிடுடா!- ஏதோ முட்டாள்தனமான வேகம்! உளறிட் டேன். இது முதலும் கடைசியுமா இருக்கட் டும்! நீ பேசாம போனது என்னைக் கொன் னுடுச்சுடா! இரண்டு பஸ் பிடிச்சு ஆபீஸ் போகணும்! போறதுக்கு முன்னாலயும், வந்த துக்குப் பின்னாலயும் இயந்திரம் மாதிரி, நீ, குழந்தைகள், நான், அம்மா... உன்னைப் புரியுதடா! ஏதோ சாத்தான் போலிருக்கு- பேசிட்டேன் மன்னிச்சிடுடா! எப்படா ஆபீஸ் விடும், போய்ப் பார்ப்போம்னு ஆச்சு! உனக்கும் வேலை இல்லாம இருந்தா, என் கதி என்ன? எத்தனை பேசுவாங்க- வாழ வைக்க வக்கில்லாதவனுக்குக் கல்யாணம் எதுக்குன்னு? உன்னாலதாண்டா எனக்குக் கௌரவம்! குடும்பத்துக்கு ஆண் மட்டும் இல்லே- பெண்ணாலேயும் கௌரவந் தாண்டா! கோபம் இல்லியே!"

கல்பனா ஆசை பொங்க அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

ஹோட்டல் வந்தது.

"கல்பா! காபி, கூல்டிரிங்ஸ்?"

"கூல்டிரிங்ஸ்!" என்றாள்.

"கோபம் தணியவா?" என்றான் சிரிப் புடன் கோபி.

"இல்லே- மேலும் ஐஸ் வைக்க!" சொல்லிச் சிரித்தாள் கல்பனா...!

# புருஷன்

வினிதாவிற்கு சிறகடித்து பறக்க வேண்டும் போல் இருந்தது. இருக்காதா பின்னே....

தான் விரும்பியதுபோல் அழகு அந்தஸ் துடன் தன்னை மட்டுமே ஆராதிக்கும்: ஒரு புருஷன் கிடைத்தால் எந்த பெண்தான் மகிழ்ச்சி அடையமாட்டாள்.

அவன் நினைத்து நினைத்து பெருமைப் படுவது போல் இருந்தது அன்று காலை நடந்த நிகழ்ச்சி! அவர்கள் உறவினர் ஒருவர். 'சின்ன வீடு' வைத்துக்கொண்டு குடும்பத்தில் பிரச்சனை பண்ணுவதாக வந்த கடிதத்தைப் படித்ததும் கொதித்துப் போனான்.

"மனைவிக்கு துரோகம் செய்பவன் எல்லாம் மனிதனா?. இவனை எல்லாம் முச்சந்தியில் நிற்க வைத்து சுட வேண்டும்." அவன் ஆத்திரப்பட்டதை நினைத்து மகிழ்ந் தாள்.

'என்ன செய்வது? எல்லோருமே அவள் கணவன் பாலுவைப்போன்று ஒழுக்க சீலர் களாக இருந்துவிடுவார்களா என்ன?.'

பத்திரிகையில் வரும் இளம் நடிகை களின் கவர்ச்சிப் படங்களை எடுத்து அவ னிடம் காட்டி வேண்டுமென்றே அவனைச் சீண்டுவாள்.

அப்போதெல்லாம்.... அந்தப் படங்களை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டான். "என்னோட வினிதாதான் எனக்கு கவர்ச்சிப் புயல், அழகு!" என்றவாறே அவளை 'அலேக் காக' தூக்கி சுற்றுவான்.

தன்னுடைய கல்லூரித் தோழிகள் வீட் டிற்கு வந்தபோது கணவனிடம் அறிமுகம் பண்ணி வைக்க, "ஹலோ" சொன்னதோடு ரூமிற்குள் புகுந்து கதவை சாத்திக்கொள் வான்.

அவள் தோழிகள் கிண்டல் பண்ணியது இன்றும் அவள் நினைவில் இனித்தது.... "வினிதா உன் ஆளு பைபுரா இருக்கிறதோட ஸ்ரீராமராவும் இருப்பரா போலிருக்கே.... அப்படி என்னடி சொக்கு பொடி போட்டி



**அன்னம்**

ருக்கே...?" என்று பெருமூச்சுவிட்டனர்.

இவர்களிடம் மட்டும் அல்ல, எந்த பெண்கள் வீட்டிற்கு வந்தாலும்..... ஏன் வினிதாவின் தங்கை சுவப்னாவை பார்த்து 'ஜொள்ளு' விடாதவர்களே இருக்க முடியாது. அவன் பக்கம் கூட திரும்பிய கிடையாது.

இப்படி கணவனின் பெருமைகளில் மூழ்கி இருந்த வினிதாவிற்கு அப்போதுதான் நினைவிற்கு வந்தது.

'மணி ஒன்றரை ஆகிவிட்டதே, சாப்பாடு எடுக்க வரும் பையனைக் காணோமே! பாவம் பசியால் துடித்து விடப்போகிறார்' என்று நினைத்தவள் மனதில் 'பளிச்' என்று அந்த எண்ணம் உதித்தது.

'ஏன் நாமே எடுத்துக்கொண்டு செல்லக் கூடாது? இந்த இரண்டரை வருட திருமண வாழ்க்கையில் தன் கணவன் நிர்வகிக்கும் அலுவலகத்திற்கு சென்றதே இல்லையே நான். காலையில் இருந்து கண வனைப் பற்றிய கனவில் மிதந்த தால் உற்சாகம் பொங்க ஒரு 'சர்ப்ரைஸ் ஷாக்' கொடுக்கலாமே' என்ற எண்ணத்தில் அவசரமாக சாப்பாட்டுக் கூடையை தூக்கிக் கொண்டு ஆட்டோ பிடித்துக் கொண்டு விரைந்தாள் அலுவல கத்திற்கு.

அவள் சென்ற நேரம் 'லஞ்ச்- அவர்' என்பதால், ஆபீஸ் முன் அறை ஹாலில் யாருமே இல்லை. முன் பகுதியில் உள்ள அறையின் மேல் 'ஜி.எம்' என்ற போர்டு 'பளபள'க்க... கணவனின் அறை தான் என்பதை தீர்மானித்தவாறு உள்ளே நுழைந்தாள். பசி மயக் கத்தில் கண்ணாடி மேஜைமீது தலைவைத்து கவிழ்ந்திருந்தான் பாலு. அவனை பார்த்ததும் குறும் புத்தனம் தலைதூக்க... சப்தம் போடாமல் அடிமேல் அடி வைத்து அவன் பின்னால் சென்று 'சட்'டென்று அவனை பின் புறமாக அணைத்துக் கன்னத்தில் 'மெத்' என்று ஒரு 'இச்' பதித்தாள்.

தலையை தூக்காமலேயே அவள் கைகளை தட்டிவிட்ட பாலு, "இதெல்லாம் இங்க வேணாம் சுமதி... யாராவது உள்ளே வந்துட்டால் வம்பு... அதான் இன்று மாலை ஓட்டலில் 'ரூம்' போட்டிருக்கோமே அங்கே ஜமாய்த்திடுவோம்" என்றான் பாலு ஆயாசத்துடன்.

சுமதியா...! பாலுவின் பி.ஏ. வா யிற்றே! அதிர்ச்சியில் உறைந்து போனாள் வினிதா!



படிப்பகம்



# சுடும் சுடும்

தருவது ரசிகன்

"காதல் சுடும்"
என்றாள்.

"காதல் சுடுமா?"
எனில்
காதல் தீயா?"

தோழி
வினா எழுப்பினாள்.

"தேன் எனவும்
தித்திக்கும்!
தீ எனவும்
சுடும்!"
என்றாள் குந்தவை!

"எப்போது தித்திக்கும்?
எப்போது சுடும்?"
என்றுகேட்டாள்.

"சந்திக்கும்போது
தித்திக்கும்!
தனித்திருந்து
சிந்திக்கும்போது
தகிதகிக்கும்!"

"நினைவுகள்
இனிக்கும் என்பார்களே?"
தோழி அனுபவம் அறிய
விசாரணை நடத்தினாள்.

"உள்ளம் இனிக்கும்
உடல் தகிக்கும்
நினைவுகள் சுரக்க
மேனி கொதிக்கும்!

நீராடும்போதும்
நீர் சுடும்!
காற்றாடும் போதும்
காற்று சுடும்!

சுடும் சுடும்
காதல் சுடும்!

சுடும் சுடும்
காமம் சுடும்!"

குந்தவை சொன்னதும்
தோழி துருவினாள்:

"தீ சுட்ட புண்ணுக்கு
மருந்து உண்டு!
காதல் சுட்ட புண்ணுக்கு
மருந்து உண்டோ?"

"காதல் சுடும்
சுட்டாலும் புண்ணாகாது!
காதல் சுட்டாலும்
சுகமே தரும்!"

தோழிக்கு புரியவில்லை
புருவத்தை நிமிர்த்தினாள்.

"சங்கு சுட்டாலும்
வெண்மை தரும்!
இரும்பு சுட்டாலும்
கூர்மை தரும்!"

விளக்கினாள் குந்தவை
வியந்தாள் தோழி!

"பின்னர் ஏன் பிரிவை
எண்ணி பெருமூச்சு!"

"பட்டறையில் இரும்பை
சூடாக்கி அடிப்பது ஏன்?"

"வாளாக்க, வேலாக்க,
கூராக்கி பதமாக்க!"

"பிரிவு என்பதும்
உலைக்களம் தானடி.
நினைவால் சூடாகி
நினைவால் அடிபட்டு
பதமான மேனி பார்த்திருக்கும்
வழிமேல் விழிவைத்து!"

"போருக்கு சித்தமான
வாள்போல,
கூடல் போருக்கு
சித்தமாகுமோ
உன் தோள்?"

தோழி குறும்புச்சரம்
தொடுத்தாள்.

"நீரின்றி கிடந்த
நிலம்
மழை கண்டால்
என்னாகும்?

நிலவின்றி கிடந்த
வானம்
நிலவு வந்ததும்
என்னாகும்?
"அப்படித்தான் தோழி
என் நிலையும் ஆகுமடி!"

"பசித்திருந்த சிங்கத்துக்கு
இரை கிடைத்தால்
என்னாகும்?"
என்று கேட்டாள் தோழி.

"புசிக்க கிடைத்ததை
மிச்சம் மீதி விடாது!"
என்றாள் குந்தவை.

பாவமடி நீ
பாயப் போகிறது சிங்கம்!"
என்றாள் தோழி.

"பாயத்தான் வேண்டும்
மாயத்தான் ஆசை!
காயத்தான் வேண்டும்
சிலநாள்!
நனையத்தான் வேண்டும்
பல நாள்!
காணத்தான் வேண்டும்
அவரை!
பூணத்தான் ஆசை
அவரை!"

குந்தவை
நீட்டிக் கொண்டிருக்க;
"போதுமடி போதும்
கேட்கும் எனக்கே
வருகிறது வெட்கம்!"

"வெட்கம் என்பது
அணைக்கும் வரை மட்டும்!
ஆடை என்பதும்
அணைக்கும் வரை மட்டும்!
அச்சம் என்பதும்
அணைக்கும் வரை மட்டும்!"

விளக்கம் கொடுத்தாள்
குந்தவை.

"ஐயையோ...
வெட்கம் கெட்டவளே!"
பழிப்புக் காட்டினாள் தோழி.

"தொட்டதும் சிலிர்க்கும்
வெட்கத்தில் சிவக்கும்
மேனி!

தொடத் தொட மயங்கும்
தொடப்பட விரும்பும்
மேனி!"

கண் சிமிட்டினாள்
குந்தவை.

"காமம் கரை மீறினால்
அறியாததை அறிய
துடிப்பதும் உண்டு!
அறிந்ததை அறியாததுபோல
நடிப்பதும் உண்டு!"

குந்தவை உரைத்தது
தோழிக்கு புதிராகவிருந்தது.

"அறியாததை விடு,
அறிந்தும் அறியாதது
எது சொல்
தோழி கேட்டாள்.

"விரும்பிய காதலர்
வரும்போது
விரும்பின விதமாய்
தொடும்போது-
வெட்கம் என்பதை
அறியாதவர் போல
நாம் நடிப்போம்!"

குந்தவை சொன்ன
விளக்கம்
திருக்குறளிலும் உண்டு
காண்பீரே;

"நாணென ஒன்றோ அறியலம்
-காமத்தால்
பேணியார் பெட்ப செயின்"
அதிகாரம் 126 குறள்-1257



## இலக்கிய நயம்

---

## ஸ்போர்ட்ஸ்

## பரிசுமழையில் சச்சின்



ஷார்ஜாவில் இந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்ற 'கொக்கோ கோலா' கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் இந்தியா கோப்பையை வென்றதை அறிந்திருப்பீர்கள்.

இப்போட்டித் தொடரில் 435 ஓட்டங்களைக் குவித்த இந்திய அணியின் மாஜி கப்டன் டெண்டுல்கருக்குக் கிடைத்த பரிசுகள் என்னவென்று தெரியுமா?

இறுதிப் போட்டியில் 3 சிக்ஸர்கள் அடித்ததற்காக 500 டொலர். தொடரில் அதிகபட்சமாக 9 சிக்ஸர்கள் அடித்ததற்காக 1500 டொலர். விரைவான அரைச்சதம் (44 பந்துகளில்) விளாசியதற்காக 1000 டொலர். ஆட்ட நாயகன் விருதுக்காக 1500 டொலர். தொடர் நாயகன் விருதுக்காக 2500 டொலர் என மொத்தமாக 7 ஆயிரம் டொலர்கள் (நம்மூர் பெறுமதிப்படி சுமார் 4 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா) இப்போட்டிகளின் மூலம் டெண்டுல்கருக்குக் கிடைத்தது.

இவற்றைவிட ஆட்டநாயகன் விருதோடு ஒபல் அஸ்ட்ரா கார் ஒன்றும் டெண்டுல்கருக்கு பரிசாக வழங்கப்பட்டது.

## கப்டன்மீது குற்றச்சாட்டு

கடந்த வருடம் ஷார்ஜாவில் இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவு அணிகளுடனான போட்டிகளில் பாகிஸ்தான் தோல்வியடைந்தது. இப்போட்டிகளின்போது பாகிஸ்தான் அணிக்குத் தலைமைதாங்கிய வாஸிம் அக்ரம் இலஞ்சம் பெற்று ஆடியதாகவும், அதனால்தான் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்தது என்றும் குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் வாஸிம் அக்ரம் கப்டன் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்நிலையில், அக்ரம் எழுதிய சுயசரிதை புத்தகத்தின் ஒரு பகுதியை இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'டெய்லி மெயில்' என்ற பத்திரிகை அண்மையில் பிரசுரித்தது. அதில்,

"ஷார்ஜாவில் நான் மோசமாக விளையாடியது உண்மை. ஆனால் இலஞ்சம் பெற்று ஆடியதாகக் கூறமுடியாது. இலஞ்சம் வாங்கி ஆடும் சிந்தனை ஒரு வினாடி கூட என் மனதில் உதித்ததில்லை.

இது போன்ற குற்றச்சாட்டு வியாதி தற்போது பாகிஸ்தான் அணியைப் பீடித்துள்ளது. இது விரைவில் குணமாகும் என்றும் தோன்றவில்லை.

'ஒருநாள் போட்டிகளில் இலஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதில் ஏராளமான தொகை கைமாறுகிறது. வீரர்கள் சிலருக்கு இதில் பங்குண்டு' என பிரபல பத்திரிகை ஆசிரியர் எழுதியுள்ளார். "இது குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்," என்றும் அக்ரம் எழுதியிருக்கிறார்.

## முத்தரப்பு போட்டிகள்

இந்தியா, பங்களாதேஷ், கென்யா ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் முத்தரப்பு கிரிக்கெட் போட்டிகள் மே மாதம் 14ம் திகதி இந்தியாவில் தொடங்கவுள்ளது. இப்போட்டிகள் 14ம் திகதி தொடங்கி 31ம் திகதிவரை நடைபெறவுள்ளன. இப்போட்டிகள் அனைத்தும் பகலிரவுப் போட்டிகளாக நடைபெறவுள்ளன.

இந்த முத்தரப்பு போட்டிகள் முடிவடைந்ததும் இந்திய அணி ஜூன்-ஜூலை மாதங்களில் இலங்கை வரவுள்ளது.

இந்தியாவில் நடைபெறவுள்ள முத்தரப்பு போட்டிகள் பற்றிய விபரங்கள் வருமாறு:

மே-14 இந்தியா எதிர் பங்களாதேஷ்-மொஹாலி
மே-17 பங்களாதேஷ் எதிர் கென்யா-ஹைதராபாத்
மே-20 இந்தியா எதிர் கென்யா-பெங்களூர்
மே-23 பங்களாதேஷ் எதிர் கென்யா-சென்னை
மே-25 இந்தியா எதிர் பங்களாதேஷ்-மும்பை
மே-28 இந்தியா எதிர் கென்யா-குவாலியர்
மே-31 இறுதிப் போட்டி-கல்கத்தா

## பிரட்மனுக்கு சிலை

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டொன் பிரட்மனுக்கு, சிலை வைக்க அடிலெய்ட் நகர கவுன்ஸில் முடிவு செய்துள்ளது.

பிரட்மன் அவுஸ்திரேலிய அணிக்கு ஆற்றிய சேவைகளை முன்னிட்டு அவரது சொந்த ஊரில் சிலை அமைக்க முடிவு செய்துள்ளதாக அடிலெய்ட் நகர கவுன்ஸிலர் றொஜர் ரவ்லி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது, "சிலை அமைப்பது பற்றி பிரட்மனிடமிருந்து அனுமதி கிடைத்ததும் உடனடியாக சிலை அமைக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

---

## சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! பாரதிய ஜனதா அரசை மு.கருணாநிதி புகழ்வதாக செய்திகள் வருகிறதே?**

தி.ஐங்கரன், திருமலை.

"தேர்தலுக்கு முன்பு வாஜ்பேயியையும் அத்வாணியையும், "பண்டாரம், பரதேசி" என்று விமர்சித்த கருணாநிதி, இப்போது பழைய நண்பர் என்று பாசமழை பொழிவது ஏன்?" என்று நான் கேட்கவில்லை, வை.கோ கேட்டிருக்கிறார்.

●○

**★ சிந்தியா! இந்தியாவின் முன்னாள் தூதர் நாகேந்திரநாத் ஜா கூறியுள்ள கருத்துக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

ஜே.அருள்ராஜ், கொழும்பு-06.

ஜா.. அச்சா!

●○

**★ இன்றைய அரசியல்வாதிகள் விடும் 'டுப்'புக்களை நம்பும் மக்களும் இருக்கிறார்கள்தானே, எப்படி?**

ஆர்.விஜயகுமார், மட்டக்களப்பு.

'பார்' இல்லாத குறைதான்.

இக்கியூ என்று ஒரு ஞானி இருந்தார். அவரிடம் வந்த ஒருவர், "சுருக்கமான ஞான மொழி ஒன்று கூறுங்கள்" என்று கேட்டார்.

உடனே ஞானி:

"பார்!"

என்று கூறிவிட்டுப் போய்விட்டார். கேட்டவருக்கு குழப்பம்.

ஞானி சொன்னதின் அர்த்தம் என்ன தெரியுமா?

"எதையும் சிந்தித்துப் பார், ஆராய்ந்துப் பார், அலசிப் பார், செயற்படுத்தப்பார்!"

●○

**★ ஷார்ஜாவில் இந்திய அணியின் வெற்றிக்கு காரணம் யார்?**

பி.யுவராஜ், மொரட்டுவ.

சச்சினின் பிய்த்து உதறல்தான்!

●○

**★ சிந்தியா! இலங்கை அணி தென்னாபிரிக்காவில் கோட்டைவிட்டு விட்டதே?**

செல்வி ஆர்.சங்கீதா, நீர்கொழும்பு.

கோட்டைக்குள்ளேயே சில பிணக்குகள் என்கிறார்கள்!

●○

**★ கூட்டணிக்குள் பிரச்சனையே கிடையாது என்று அறிக்கைவிட்ட ஆனந்தசங்கரி, இப்போது சம்பந்தரையும், நீலனையும் கண்டித்து அறிக்கைவிட்டுள்ளாரே?**

பா.பிரகாசம், கொழும்பு-06.

'முரசு' சொல்லும் முன்னர். அது உண்மையென உறுதியாக தெரிந்துவிடும் பின்னர்! நாகேந்திரநாத் ஜாவை சந்திக்க சம்பந்தரும், நீலனும் சங்கரியை அழைத்துச் செல்லவில்லை. அதுதான் கொள்கை முரண்பாடு சந்திக்கு வந்திருக்கிறது.

●○

**★ நிம்மதி குலைவது எதனாலே?**

சி.வனிதா, கொழும்பு-10.

அளவுக்கு அதிகமாக ஆசைப்படுவதினாலே!

ஒரு துறவி இருந்தார். அவரிடம் பணக்காரர் ஒருவர் வந்தார்.

"சுவாமி! என்னிடம் நிறையப் பணம் இருந்தும் நிம்மதி இல்லாததுக்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

துறவி பதில் சொல்லவில்லை. குழந்தை ஒன்றை அருகே அழைத்தார். அந்தக் குழந்தையிடம் ஆப்பிள் பழத்தைக் கொடுத்தார். அதை வலது கையால் குழந்தை பெற்றுக் கொண்டது.

இன்னொரு ஆப்பிள் கொடுத்தார். இடது கையால் பெற்றுக்கொண்டது.

மூன்றாவதாக ஒரு ஆப்பிள் கொடுத்தார். முதல் இரண்டு பழங்களையும் நெஞ்சில் அணைத்தபடி, மூன்றாவது பழத்தையும் வாங்குவதற்கு முயற்சி செய்தது.

அதனால் ஆப்பிள் நழுவி கீழே விழுந்தது. விழுந்த பழத்தைப் பார்த்து குழந்தை அழுதது.

துறவி அந்தப் பணக்காரரிடம் கூறினார்:

"இந்தக் குழந்தையைப் பார்த்தாயா? இரண்டு பழம் போதும் என்று நினைத்திருந்தால், இப்போது அது அழவேண்டிய அவசியம் வந்திருக்குமா? அதேமாதிரி போதும் என்ற திருப்தி ஏற்பட்டுவிட்டால் பிரச்சனை வராது. நிம்மதி கிடைக்கும்!"

●○

**★ இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்கு தமிழக தீவிரவாதிகளுடன் தொடர்பு என்று கூறுகிறார்களே?**

சா.ஹமீட், கொழும்பு-09.

வதந்தி!

●○

**★ சிந்தியா! சமீபத்திய தமிழ்ப் படங்களில் தூங்காமல் பார்க்கக்கூடிய ஒரு படம் கூறுங்கள்?**

ஜோ.ரஞ்சித், வத்தளை.

சிரித்து சிரித்து வயிறு புண்ணாக விருப்பம் இருந்தால், 'காதலா காதலா'.

●○

**★ என்னதான் உதவி செய்தாலும் சிலருக்கு திருப்தியே வருவதில்லையே- ஏன்?**

மா.வேணுதாஸ், பதுளை.

இளம் பெண் ஒருவர் தன் குழந்தையுடன் கடற்கரைக்குச் சென்றாள். கடல் அலைகளிலே விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை திடீரென்று அலை ஒன்று வந்து இழுத்துச் சென்றுவிட்டது.

"ஐயையோ... என் குழந்தை போய்விட்டதே!" என்று கண்ணீர்விட்டு அழுதாள்.

அந்தப் பெண்ணின் உருக்கமான அழுகையைக் கேட்ட கடற்தெய்வம், குழந்தையை மீண்டும் உயிருடன் கரைக்கு அனுப்பியது.

தன் குழந்தைக்கு ஏதும் ஆகாதது கண்டு தாய் சந்தோசத்தில் திக்குமுக்காடினாள். குழந்தையின் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள். அப்போது தற்செயலாக குழந்தையின் காலை கவனித்தாள்.

குழந்தையின் ஒரு காலில்தான் செருப்பு இருந்தது. இன்னொரு காலில் இருந்த செருப்பைக் காணவில்லை. உடனே அந்தப் பெண்ணின் மகிழ்ச்சி பறந்துவிட்டது.

"ஐயையோ! செருப்பு போய் விட்டதே!" என்று மறுபடி அழ ஆரம்பித்தாள்.

●○

**★ அடுத்த 'உலகக் கோப்பை' தென்னாபிரிக்காவுக்கு சேருமா?**

சி.மங்களேஸ்வரன், கண்டி.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளையும் குறைத்து மதிப்பிட இயலாது!

●○

**★ அஸாருதீனின் புது உற்சாகம் தொடர்பாக சிந்தியாவின் அபிப்பிராயம்?**

கே.நவ்சாத், கல்முனை.

பொதுவான அபிப்பிராயம் இது: அஸாருதீனின் அமோகமான இரண்டாவது இன்னிங்ஸ்!

●○

**★ இந்திய அமைதிப்படையின் தளபதியாக இருந்த கல்கட்டின் பேட்டியை கவனித்தீரா?**

ஜி.சொர்ணா, கொழும்பு-05.

ம்..ம்... பட்ட அனுபவம் பாடம் சொல்லுகிறது!

●○



●○

**★ 'ஜீன்ஸ்' படத்தின் பாடல்கள் கேட்டீர்களா? பிடித்த பாடல் எதுவோ?**

வி.ஜோதிமலர், புத்தளம்.

நித்யஸ்ரீ பாடியுள்ள 'கண்ணோடு காண்பதெல்லாம்..." பாடல் வரிகள், பாடிய குரல் நேர்த்தி, இசை மூன்றும் நன்கு கலந்த இதம்!

**★ பூலான்தேவிக்கு சேலை கட்டத் தெரியாதாமே?**

திருமதி கவிதா ரத்னம், கொழும்பு-09.

ஏன் திடீர் சந்தேகம்.

அப்படியானால் இதுவரை என்ன உடையோடு திரிந்தாராம்? சிறைக்கு போனதில் இருந்தே சேலைதான் அணிகிறார்.

www.padippakam.com

# திருமறை தரும் போது நெறி 7

# யோசேப்பும் சகோதரர்களும்

இராஜகுமாரன்

எகிப்து நாட்டில் மட்டுமல்லாமல் மத்திய தரைக்கடலை ஒட்டியுள்ள பிரதேசங்கள் அனைத்திலும் பெரும் பஞ்சம் நிலவியது. உணவுக்கு வழியில்லாமல் மக்கள் பெரும் துன்பப்பட்டனர். கானான் தேசத்திலும் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடியது.

எகிப்தில் மட்டும் செழிப்பான ஏழு வருடங்களில்-யோசேப்பின் தீர்க்கதரிசனத்தினால்- மிதமிஞ்சிய அளவில் தானியம் சேமிக்கப்பட்டிருந்தது. அங்கு மேலதிகமாகத் தேங்கிக்கிடக்கும் உணவுப் பொருட்களை அயல் நாட்டவர்களுக்கும் வழங்குகிறார்கள் என்று கேள்வியுற்ற கானான் தேசத்தவர்களும் தானியம் பெறுவதற்காக எகிப்து நாட்டை வந்தடைந்தனர். அவ்வாறு வந்தவர்களில் பத்துப்பேரை மட்டும் யோசேப்பின் கட்டளைப்படி ஏவலாளர்கள் கைது செய்தனர். அயல் நாட்டிலிருந்து வேவு பார்க்க வந்தவர்கள் என்ற குற்றச்சாட்டு அவர்கள்மீது சுமத்தப்பட்டது.

யோசேப்பின் முன்னிலையில் அவர்கள் பத்துப்பேரும் நிறுத்தப்பட்டதும் அவர்கள் அவர் முன் மண்டியிட்டு, தாங்கள் எதுவிதமான குற்றமும் புரியாத அப்பாவிகள் என்று புலம்பினர்.

இவர்களுடைய கூற்றை யோசேப்பு நம்பியதாகத் தெரியவில்லை. அவர்கள் ஒற்றர்களே என்று யோசேப்பு மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டினார். அந்தப் பத்துப் பேரில் ஒருவன் முன்வந்து "ஐயா! நாங்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். ஒரே தகப்பனின் பிள்ளைகள் நாங்கள். கானான் தேசத்தில் கொடிய உணவுப்பஞ்சம் ஏற்பட்டதனால் எங்கள் வயோதிபத்தந்தை எங்களை இங்கு அனுப்பி உணவுத் தானியம் பெற்றுவரும்படி அனுப்பிவைத்தார். எங்கள் தந்தைக்கு மொத்தம் பன்னிரண்டு புதல்வர்கள். எங்கள் இளைய சகோதரன் தந்தையுடன் இருக்கிறான். மற்றொரு சகோதரன் இறந்துவிட்டான். குற்றமற்றவர்களாகிய எங்களை விட்டு விடுங்கள்!" என்றான்.

## இளைய சகோதரன்

இதனைக் கேட்ட யோசேப்பு, "ஓஹோ! உங்கள் தந்தையும் உயிரோடு இருக்கிறாரா? உங்களுக்கு மற்றுமொரு இளைய சகோதரனும் இருக்கிறானா? அப்படியானால் அவனை இங்கு அழைத்து வந்தால்தான் உங்கள் பேச்சை நான் நம்புவேன். இல்லாவிட்டால் நீங்கள் சிறையிலடைக்கப்படுவீர்கள்!"

இவ்வாறு யோசேப்பு கூறியதை மொழிபெயர்ப்பாளர்கள் சகோதரர்களுக்கு விளக்கிக் கூறினார்கள். இதனைக் கேட்ட அவர்கள் தங்களுக்குள் உரையாடினர். சகோதரர்களுள் ஒருவனான ரூபன், "சகோதரர்களே! நமது சகோதரனான யோசேப்புக்கு நாம் இழைத்த கொடுமைக்கான தண்டனையையே நாம் இப்போது அனுபவிக்கிறோம், அவனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடாது என்று நான் அப்போதே கூறினேன். நீங்கள் கேட்கவில்லை. அவனுக்கு நாம் செய்த துரோகத்தால் இன்னும் என்னென்ன துயரங்களை நாம் அனுபவிக்க நேருமோ தெரியாது!" என்று அழுதான்.

அவர்கள் தங்களுக்குள் பேசிய மொழி யோசேப்புக்கு நன்றாகப் புரிந்தது. அவர்களை முதன்முதலில் கண்டவுடனேயே அவர்கள் தன் சகோதரர்களே என்பதை அவர் கண்டுகொண்டார். அவருடைய கண்கள் பெரும் துயரத்தை அடக்க முடியாமல் கலங்கின. இருப்பினும் தனது சகோதரர்களுக்கோ சுற்றி நின்றவர்களுக்கோ காட்டிக்கொள்ளாமல்,இருக்கையைவிட்டு எழுந்து உள்ளே சென்று கண்ணீர்விட்டு அழுதார். பின்னர் மனதைத் திடப்படுத்திக்கொண்டு வந்து அமர்ந்தார்.

"நீங்கள் கூறுவதை என்னால் பூரணமாக நம்ப முடியாதிருக்கிறது. உங்களில் ஒருவன் மட்டும் இங்கு இருக்கட்டும். ஏனையோர் தானியத்தைப் பெற்று உங்கள் நாடு செல்லுங்கள். அங்கிருக்கும் உங்கள் இளைய சகோதரனை அழைத்து வந்து என்னிடம் காண்பித்துவிட்டு, இங்கு பணயமாக விட்டுச் செல்லும் சகோதரனை மீட்டுச் செல்லலாம்!"

யோசேப்பு இவ்வாறு கூறியதும் சகோதரர்களுள் ஒருவனான சிமியோனைக் கைது செய்யும்படி யோசேப்பு ஏவலாளருக்குப் பணித்தார். சிமியோன் கைதானதைத் தொடர்ந்து ஏனைய ஒன்பது பேரும் தானியக் களஞ்சியத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். யோசேப்பு ஏற்கனவே விதித்த கட்டளைப்படி அவர்கள் கொண்டு வந்திருந்த பைகளில் உணவுத் தானியங்கள் நிரப்பப்பட்டு கழுதைகளில் ஏற்றப்பட்டன. அவர்கள் கானான் தேசம் நோக்கிப் புறப்பட்டுச் செல்வதை மறைவிலிருந்து பார்த்த யோசேப்பு விம்மி விம்மி அழுதார்.



## பைகளில் பணம்

நீண்ட தூரம் பயணம் சென்ற சகோதரர்கள் இடையில் ஓய்வெடுக்கும் போது தங்களுடைய தானியப் பைகளைத் திறந்து பார்த்தனர். பைகளில் போதியளவு தானியம் மட்டுமல்லாமல் அவர்கள் தானியம் கொள்முதல் செய்வதற்காகக் கொண்டு வந்திருந்த பணமும் அதே பைகளில் தானியத்துடன் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. இதனால் அவர்கள் கலவரமடைந்தனர்.

கானான் தேசம் போய்ச் சேர்ந்ததும் தமது தந்தை யாக்கோபிடம் எகிப்தில் நடந்த சம்பவங்களைக் கூறினார்கள். தானியத்துக்காகக் கொண்டுசென்ற பணம் அப்படியே திரும்ப வந்து சேர்ந்தமையால் அவர் பெரும் குழப்பமடைந்தார். அதுமட்டுமல்லாமல் தான் வயது முதிர்ந்த காலத்தில் பிறந்த பென்யமினை எந்த நிலையிலும் விட்டப் பிரிய முடியாது என்றும் கூறிவிட்டார்.

யோசேப்பின் தந்தையான யாக்கோபுவின் மனைவியருள் ராகேலிடம் அவர் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இவர்களுக்குப் பிறந்த யோசேப், தனது சகோதரர்களால் வியாபாரிகள் மூலம் எகிப்துக்கு அனுப்பப்பட்ட பின்னர்தான் பென்யமின் பிறந்தான். இதனால் அவன்மீது யாக்கோபு அதிக பாசம் வைத்திருந்தார். இதனாலேயே அவனை சகோதரர்களுடன் எகிப்துக்கு அனுப்ப முடியாது என்று ஆரம்பத்தில் சொன்னார். சில மாதங்களில் தனது புத்திரர்கள் கொண்டுவந்திருந்த தானியங்கள் எல்லாம் தீர்ந்துவிட்டமையினால் மீண்டும் ஒருமுறை எகிப்து சென்று தானியங்களைப் பெற்று வருமாறு யாக்கோபு கேட்டுக்கொண்டார். பென்யமினையும் உடன் கூட்டிச் சென்று எகிப்தின் அதிகாரியிடம் காட்டிவிட்டு சிமியோனையும் அழைத்துக்கொண்டு வருமாறு யாக்கோபு கூறினார். தானியம் கொள்முதல் செய்வதற்காக முன்பு கொண்டுபோன பணத்தையும் உடன் கொண்டுசென்று கொடுக்குமாறு சொன்னார்.கானான் தேசத்தில் கிடைக்கும் பல உயர்தரப் பண்டங்களையும் எடுத்துச் சென்று எகிப்தின் அதிகாரிக்குக் காணிக்கையாகக் கொடுக்கும்படியும் கூறினார்.

பென்யமினையும் அழைத்துக் கொண்டு சகோதரர்கள் எகிப்து வந்து சேர்ந்தனர். அவர்கள் வந்து விட்டதை அறிந்த யோசேப்பு தனது ஏவலாளரை அழைத்து, அவர்களைத் தனது இல்லத்துக்கு அழைத்துச் சென்று மதிய உணவுக்கான ஆயத்தங்களைச் செய்யுமாறும் பணித்தார். ஆளுநர் தங்களைத் தமது வீட்டுக்கு அழைத்து கடும் தண்டனை வழங்கப்போவதாகவே அவர்கள் அஞ்சினர். தங்களை அழைத்துச் சென்ற ஏவலாளனிடம், தானியப் பைகளுக்குள்- தானியக் கொள்முதலுக்காகத் தாங்கள் கொண்டு வந்த அவ்வளவு பணமும் அப்படியே இருந்ததாகவும்- அப்பணத்தை யார் வைத்துக் கட்டினார்களோ தெரியாது என்றும் முறையிட்டனர்.

## காணாமற்போன வெள்ளிக் கோப்பை

பகல் உணவுக்காக இல்லம் வந்து சேர்ந்த யோசேப்பு தனது சகோதரர்களைக் கண்டார்., இளையவனான பென்யமினை தன்னிடம் அழைத்து அன்புடன் தடவிக் கொடுத்தார். அனைவருக்கும் நல்ல உணவு படைக்கப்பட்டது. சிமியோனும் அவர்களுடன் வந்து சேர்ந்துகொண்டான். உணவு உட்கொண்டதும் அவரவர்கள்கொண்டு செல்லக் கூடிய தானியங்கள் பைகளில் நிரப்பப்பட்டன. அவற்றைக் கழுதைகளில் ஏற்றிக் கொண்டு அடுத்தநாள் காலையில் பதினொரு சகோதரர்களும் புறப்பட்டுச் சென்றனர்.

சிறிது தூரம் சென்றதும் அவர்களைத் துரத்திக் கொண்டு வருவது போல் சில காவற்காரர்கள் ஓடி வந்து சூழ்ந்து கொண்டனர். காவலர் தலைவன்,"உங்களுக்கு நன்மை செய்த எம் தலைவருக்குத் தீமை செய்து விட்டீர்கள். அவர் பயன்படுத்தும் வெள்ளிப்பாத்திரத்தை நீங்கள் களவாடி விட்டீர்கள்! இது நியாயமா?" என்று கடுமையாக மிரட்டினான். அவர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். "அத்தகைய தீய செயலை தாங்கள் நினைத்ததுகூட இல்லை," என்று பிரலாபித்தனர்.

அவர்களுடைய பொதிகளனைத்தையும் காவலர்கள் திறந்து பார்த்தனர். இளையவனான பென்யமினின் தானியப் பையினுள் அந்த வெள்ளிக் கோப்பை இருக்கக் காணப்பட்டது. இதனைக் கண்டு அனைவரும் திகைத்தனர். சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து பென்யமினைத் திட்டினர். அவனோ தான் எதுவித குற்றமும் செய்யாதவன் என்று அழுது புலம்பினான். காவலர்கள், அனைவரையும் தமது எஜமானரிடம் வந்து குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு சொன்னார்கள்.

அவர்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு யோசேப்பின் முன் தாள் பணிந்து,தங்களை அறியாமல் அந்த வெள்ளிக் கோப்பை பென்யமினின் பையினுள் வைக்கப்பட்டுவிட்டது என்று கூறினர். இதனைக்கேட்ட யோசேப்பு, "கோப்பை யாரிடம் இருந்ததோ அவன் இங்கு அடிமையாக இருக்கட்டும். மற்றவர்கள் போகலாம்!" என்று கட்டளையிட்டார். இதனைக் கேட்ட சகோதரர்கள் அனைவரும் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்துத் தடுமாறினர்.

சகோதரர்களுள் ஒருவரான யூதா, யோசேப்பின் அருகில் வந்து, தனது தந்தையார்- பென்யமின் மீது வைத்துள்ள அளவற்ற பிரியத்தைப் பற்றி விபரித்தார். ஏற்கனவே பென்யமினுக்குமுன் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளையாகப் பிறந்த ஒரு மகனை இழந்தமையினால் இளையவன் மீது அதிக பற்றுக் கொண்டுள்ள தந்தை, பென்யமின் தங்களுடன் கானான் திரும்பாவிட்டால் நிச்சயம் உயிர் துறந்துவிடுவர் என்று கூறினான்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை ④ விடை: 12 பேர்**

யாக்கோப்புக்கு தீனா என்றொரு மகளும் இருந்தாள் என்பது திருவிவிலியத்தில் உள்ளது. ஆனால் அவ்வரலாற்றை நாம் எழுத முற்படவில்லை.

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி நளனி செல்வதுரை, 61 1/3, பாமன்கடை வீதி, கொழும்பு-06.
2. பு. புவிநிரோஜி, வீரபத்திரன் வீதி, காரைதீவு-03.
3. ஏ.ஆர். மூலா கலீம், கும்புக்கன்துறை மு.மகா.வித்., தெல்தெனிய.
4. பி. ராஜ்குமார், விஷ்ணு மகா வித்., பெரியநீலாவணை, கல்முனை.
5. ஜொகான் சஜீவ் யோசப், 387, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**திருமறை 07 வினா:- யோசேப்பின் இளைய சகோதரனின் பெயர் என்ன?**

மே. 09க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 07 – தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# சட்டி சுட்டதடா



ஜெயலலிதா (பாடுகிறார்)

நான் ஆணையிட்டால்-அது
நடந்துவிடால்- இங்கு
கலைஞர் சந்தோசப்படமாட்டார்.

வாஜ்பேயி: (உள்ளே பாடிக்கொண்டே வருகிறார்)

நிபந்தனை மேல் நிபந்தனை
போதுமம்மா. செல்வி
நிபந்தனைதான் தினமும் என்றால்
நிலைக்காது ஆட்சி!

செல்வி: ஏன் அழுகிறீர்கள்? ஆட்சி போய் விடும் என்று பயமா மிஸ்டர் பிரதமர்?

வாஜ்பேய்: ஒருநாளும் நான் இதுபோல்
அழுதவனல்ல- அந்த
ஆதரவை நீர் பறித்தால்
யாரிடம் செல்ல?

செல்வி: ஆந்திராவுக்கு செல்லுங்கள் அங்கு நாயுடு இருப்பார். இங்கே கலைஞரிடம் செல்லுங்கள், அவர் கை கொடுப்பார். ஆடிப்போய் நிற்காதீர்கள். (சிரிக்கிறார்)

வாஜ்பேயி: நானாடவில்லையம்மா
நாற்காலியாடுது-அது
கன்டிஷன் என்றும் மிரட்டல் என்றும்
சதிராடுது!

செல்வி: நான் எள் என்று சொன்னா நீங்க எண்ணெய்யா மாறணும்! நான் கலைஞர் ஆட்சியைக் கலைக்கணும் என்று சொன்னா, நீங்க கலைஞர் ஆட்சியை குலைக்கணும்!

வாஜ்பேயி (தமது சின்னமான தாமரையை நினைத்து பாடுகிறார்)

தண்ணீரிலே தாமரைப்பூ
தள்ளாடுதே டில்லியிலே!
தத்தளிக்கும் மலரை
சக்தியுள்ள செல்வி
தனக்கென்று கேட்டால்
தருவேனோ?
தலைவி என்றால் விடுவேனோ?
நிலைக்கும் முன்னே பறிப்பதற்கு
நினைத்தால் கொடுத்து
விடுவேனோ?

(வாஜ்பேயி வெளியே செல்ல, கையில் மாலையுடன் தோன்றி வரவேற்கிறார் கலைஞர் கருணாநிதி)

எலக்ஷன் வரை கூட்டு
கலெக்ஷன்வரை செல்வி
உதவி வரை கூட்டு
பதவி வரை யாரோ?

வாஜ்பேயி: "சட்டி சுட்டதடா
கையை விட்டதடா
நாலும் நடந்து முடிந்த பின்னால்
நல்லது கெட்டது தெரிந்ததடா!"

(தலையில் அடித்தபடி குந்துகிறார்)

# அறிக்கைவிட அரிய யோசனைகள்


**ஊர் அறியும்படியான அறிக்கை வீரராக மாறுவதற்கு சில அரிய யோசனைகள்:**

1. காலை எழுந்தவுடன் படிப்பு, அதாவது அன்றைய தினசரிகளையெல்லாம் விலாவாரியாக மேய வேண்டும்.
2. மேய்ந்து கொண்டிருக்கும்போதே, அவற்றில் அறிக்கை விடக்கூடிய பிரச்சனைகளை மோப்பம் பிடித்துவிட வேண்டும்.
3. பின்னர் ஜனாதிபதிக்கு ஃபக்ஸ் என்றோ, ஜனாதிபதிக்கு தந்தி என்றோ தலைப்பிட்டு பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கலாம். (ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்று கட்டாயமில்லை)
4. எப்போதாவது ஜனாதிபதியையோ, அன்றி அமைச்சர்களில் ஒருவரையோ சந்திக்க முடிந்தால் மிக்க நன்று!
5. நீங்கள் சந்திக்கும் பிரமுகர்களிடம் நீங்கள் சொன்னது, சொல்ல நினைத்து சொல்லாமல் தவிர்த்தது அனைத்தையும் ஒரு தாளில் எழுதிக் கொள்க.
6. பின்னர் அதனை பரபரப்பான அறிக்கையாக மெருகூட்டி பத்திரிகைகளுக்கு வழங்கலாம்.
7. மக்கள் மறதிக்குணம் கொண்டவர்கள் என்று எப்போதும் நினைத்துக் கொள்ளவும். அந்த நம்பிக்கை இருந்தால் தான் 'நடவடிக்கை எடுக்க உறுதி', 'பரிகாரம் செய்வதாக உத்தரவாதம்' என்றெல்லாம் உங்கள் சந்திப்புக்கள் தொடர்பாக தித்திப்பான அறிக்கைகள் விடுக்கலாம்.
8. தாங்களாகவே உங்களுக்கு தகவல் தந்து, உங்கள் அபிப்பிராயத்தையும் கேட்டு வெளியிடக்கூடிய செய்தியாளர்களுடன் தொடர்புகளை இறுக்கமாக்குங்கள்.
9. உங்கள் பின்னணி, உங்கள் உள் நோக்கம் அறியாமல்,உங்களால் கிடைக்கும் பலாபலன்களுக்கு ஏற்ப உங்களைப் பிரபலப்படுத்தக்கூடிய செய்தியாளர்கள் சிலர் இருப்பார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பது உங்கள் சாமர்த்தியம்.
10. அடிக்கடி ஜனநாயக உரிமை, மக்கள் நலன், மனித உரிமை போன்ற வாசகங்களை பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.



இந்த பத்து அரிய யோசனைகளையும் பற்றிக் கொண்டால் நீங்கள் நாடறிந்த அறிக்கை வீரராக மாறலாம்.

# பயோடேட்டா




பெயர் : அவசரகால சட்டம்

தொழில்: மனித உரிமை, ஜனநாயக உரிமை என்பவற்றை அழிப்பது.

பொழுதுபோக்கு: தமிழர்களுடன் விளையாடுவது

நண்பர்கள்: பொலிசாரும், முப்படையினரும்.

ஆதரவாளர்கள்: தமிழ்க் கட்சிகள் மட்டும்.

சாதனை: நீண்டகாலமாக அமுலில் இருந்து ஆட்டிப்படைப்பது.

வேதனை: இடைக்கிடையே அம்பலமாவது

விரும்புவது: வரம்பற்ற அதிகாரங்களை.

வெறுப்பது: வெளியுலகின் பார்வையை.

ரசிப்பது: புதைகுழிகளை.

சகோதரர்கள்: உண்டு. பயங்கரவாத தடைச்சட்டம்.

வயது : மாதாமாதம் ஏறிக்கொண்டே இருக்கும்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# அரங்கம்







SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


← அவுஸ்திரேலியாவில் கிரிக்கெட்டுக்குத் தனியிடம் தருவது மெல்ஃபோன் கிரிக்கட் சபை. அங்குள்ள விக்டோரியா மாநில நகரமான மெல்ஃபோனில் செயற்படுகிறது இச்சபை. எம்.சி.சி. என்று சுருக்கமாக இதனை அழைப்பார்கள்.

மாலை நேரத்தில் விமானத்தில் பறந்த வண்ணம்பிடிக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில் மெல்ஃபோன் நகரம் அழகாகக் காட்சி தருகிறது.

இரவு நேரத்தைப் பகலாக்கும் ஒளிதரும் ஆறு நெடிய கம்பங்களுடன் காட்சியளிக்கிறது மெல்ஃபோன் கிரிக்கெட் மைதானம். இந்த மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒளி உமிழும் மின் வெளிச்சக் கம்பங்கள்தான் உலகிலேயே அதியுயரமான மின் கம்பங்களாகும்.

இந்த 6 மின்கம்பங்கள் ஒவ்வொன்றும் 75 மீட்டர் (246 அடி) உயரமானவை. ஒவ்வொன்றும் 120 தொன் எடை கொண்டவை.

இந்த மைதான அரங்கில் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அமர்ந்து இருக்கலாம். அதிகளவான பார்வையாளர்கள் அமர்ந்து போட்டிகளை இரசிக்கக் கூடிய அரங்குகளில் இதுவும் ஒன்று. பகலிரவு போட்டிகள் நடத்த இது மிக வசதியான மைதானம்.

முதன் முதலாக பகலிரவு கிரிக்கெட் போட்டிகள் நடத்த அவுஸ்திரேலியாவின் சிட்னி மைதானம்தான் தயார் செய்யப்பட்டது. கடைசியாக ஷார்ஜா மைதானத்தில் பகலிரவுப் போட்டிகள் நடத்த மைதானம் தயார் செய்யப்பட்டது. ■

# பாய்ச்சல்

↓ மோட்டார் சைக்கிள் என்றாலே விபத்துப் பயமும் கூடவே வருவதுண்டு. வேகமாய்ப் போய் அடிபட்டால் ஆள்தப்புவது கஷ்டம்தான். அதனால்தான் 'மெல்லப் போ, மெல்லப்போ, மேனி என்னாகும்' என்று ஆலோசனை சொல்லப்படுவதுண்டு.

ஆனாலும் காதில் போட்டுக் கொள்வோர் குறைவுதான். மோட்டார் சைக்கிள்களில் சாகசம் புரிவது ஒரு கலை.

முன்பெல்லாம் அதி வேகமாக ஓட்டுதல், ஒரே மோட்டார் சைக்கிளில் பலர் ஒன்றாக ஓட்டி சாகசம் செய்தல், பாதாள கிடங்கில் பயங்கரமாக ஓடிக் காட்டுதல் போன்றவை காண்போரை வியக்கவைத்தன.

இப்போதெல்லாம் அந்தச் சாகசங்கள் எல்லாம் பழையனவாகிவிட்டன. சர்வசாதாரணமாகிவிட்டன.

மேலும் புதுமையாக மோட்டார் சைக்கிளை ஓட்டிக் காட்டி உலக சாதனை படைக்க ஆளாளுக்கு முயற்சிக்கிறார்கள். உயிரைப் பணயம் வைத்து பயிற்சி எடுக்கிறார்கள்.

முன்பெல்லாம் திரைப்படங்களில்தான் 'மோட்டார் சைக்கிள்' கட்டடங்களையோ உயரமான பகுதிகளையோ பாய்ந்து கடந்து செல்வதுபோல பார்த்திருக்கிறோம்.

இப்போது நிஜமாகவே அத்தகைய சாகசத்தை செய்து காட்டுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அதி சூரராக உலக சாதனை படைத்திருப்பவர் டொக் டேஞ்சர். தனது ஹொண்டா சி.ஆர்.500 மோட்டார் சைக்கிளில் 76.5 மீட்டர் (251 அடி) தூரத்தை ஒரே தாவில் தாவி அந்தரத்தில் மிதந்து பின்னர் நிலத்தில் குதித்துச் சாதனை புரிந்திருக்கிறார்.

ஒரு வீட்டுக்கு மேலால் அவர் தாவி பாய்ந்து செல்வதைப் படம் காட்டுகிறது. இச்சாதனை 1991ல் நிலை நாட்டப்பட்டது. இன்றுவரை இதுதான் உலக சாதனை.

→ தொலைக்காட்சியும் வீடியோப் படங்களும் பொழுதுபோக்கு அம்சங்களில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்திவிட்டன. இவற்றின் வருகையால் மேடை நாடகங்களும் இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இப்பொழுது சாதாரண திரை அரங்குகளும் மூடப்பட்டு அக்கட்டடங்கள் பெரிய வர்த்தக நிலையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

இந்த மாற்றத்தினால் பல திரை அரங்குகள் வருவாய் இல்லாமையால் மூடப்பட்டு விட்டன. இது நமது நாட்டில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் ஏற்பட்டு வருகின்றன.

இப்படத்தில் இருப்பது முன்னாள் திரைப்பட மாளிகை ஒன்றுதான். இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் மிகச் சிறந்த படமாளிகையாகக் காட்சி தந்தது.

இப்பொழுது இம்மாளிகை ஒரு பிரபல்யமான மதுபானக் கடையாக மாற்றப்பட்டுவிட்டது.

திரைப்படத்தால் கிடைக்கும் வருமானத்தைப் பார்க்கிலும் பலமடங்கு வருவாயை இம்மதுபான விற்பனை நிலையம் ஈட்டிக் கொடுக்கிறது.






↑ இம் மதுபான விடுதி 821.7 சதுரமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. (8 ஆயிரத்து 845) சதுரஅடி மூன்று பெரிய தவறணைகள் உள்ளே இருக்கின்றன. பிரிட்டனில் மிகப் பெரிய மதுபானக் கடை இதுதான். 'நீருக்குள் நிலவு' என்பது இக் கடைக்கு சூட்டப்பட்டுள்ள பெயர். ('மூன் அண்டர் வோட்டர்')

ஆனால் உலகிலேயே மிகப் பெரிய மதுபானக் கடை (மதுபானக் கடல் என்றும் சொல்லலாம்) ஜெர்மனியில் இருக்கிறது. அதன் பெயர் மதாசெர்.

# மதுக் கடல்

இங்கே தினமும் 48 ஆயிரம் லிட்டர் மதுபானம் விற்றுத் தீர்கிறது. இது உலக சாதனை. அம்மாடி.... இங்கே செல்லும் 'குடிமக்கள்' ஒவ்வொருவர் வயிற்றுக்குள்ளும் என்ன பவுசரா இருக்கிறது?!



## 1வது பிறந்தநாள் வாழ்த்து

**சொனாலி யூலியான்**

**17.03.1998**

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் லெபனானில் வசிப்பவர்களுமான வின்சன் யூட் - பிரியானி தம்பதியினரின் செல்வப் புதல்வி யூலியான் தனது முதலாவது பிறந்த நாளை 17.03.1998 அன்று லெபனானில் சூக் மிக்காயில் உள்ள தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை வாழ்த்துவோர் அன்பு அப்பா, அம்மா கொழும்பு அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கப்பல் பெரியப்பா குடும்பத்தினர், லெபனான் பெரியப்பா குடும்பத்தினர், பிரான்சில் வசிக்கும் அத்தை குடும்பத்தினருடன் சித்தப்பா, லெபனான் தொட்டப்பா, தொட்டம்மா குடும்பத்தினர், கனடா, ஜேர்மனி, டென்மார்க் இலண்டன் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் யூலியானை குழந்தை யேசுவின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: யூட் வீடியோ, லெபனான்.

→ ஸ்ரீநாத் அடிக்கடி ஓய்வு பெற வேண்டி இருப்பதால் இந்திய அணிக்கு கண்டிப்பாக ஒரு வேகப்பந்து வீச்சாளர் தேவை.

'இதோ நான் தயார்' என்று களம் புகுந்துள்ள 'இளம் பையன்' அஜித் அகார்கர். 20 வயது.

இந்திய 'ஏ' அணியில் விளையாடியவர். பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் அந்த நாட்டு 'ஏ' அணியை டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்தியது இந்திய 'ஏ' அணி. அதற்கு முக்கிய காரணம் அஜித் அகார்காரின் பந்து வீச்சு. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மட்டும் ஒன்பது விக்கெட்டுக்களை சாய்த்திருந்தார்.

அந்தச் சுற்றுப் பயணத்தில் காண்பித்த திறமையாலும், வித்தையாலுமே இந்திய தேசிய அணியில் இடம் கிடைத்தது.

சமீபத்தில் அவுஸ்திரேலியா அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்தபோது அஜித் அகார்காரும் இந்திய அணியில் சேர்க்கப்பட்டார். சிறப்பான பந்துவீச்சால் அணியில் தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

சார்ஜா போட்டிகளில் முதல் போட்டியின்போது நியூசிலாந்து அணியின் நாலு விக்கெட்டுக்களை கொய்தார். இந்திய அணியின் அன்றைய வெற்றிக்கு அதுவும் ஒரு காரணம். அப்போட்டியில் ஆட்ட நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டது மிகப் பெரிய உற்சாகமாக அமைந்துவிட்டது.

இந்திய 'ஏ' அணிக்கு மேலாளராக இருப்பவர் முன்னாள் அதிரடி வீரர் ஸ்ரீகாந்த். "அஜித் அகார்கார் இன்னும் பலவருடங்களுக்குள் தலைசிறந்த பந்துவீச்சாளராக வருவார்" என்று அடித்துச் சொல்கிறார் ஸ்ரீகாந்த். ■

# புது வரவு

